Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් டிச. 31, 2000- ஜன 06, 2001

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 389

# போரா சமாதானமா?

# பேச்சுவார்த்தையில் கேள்விக்குறி



உதயமாகிறது புதியதோர் ஆண்டின்று
இதயமெல்லாம் மலர இனிய பல செய்திகளை
புதிது புதிதாய்க் கொணர்ந்து பூரிக்க வைக்குமென
கருதிடுவோம் கருணையாளன் தாள் பணிவோம்

# முரசம்

## புதிய ஆண்டில்.....?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

புது வருடம் பிறக்கிறது!
இவ்வருடமே
புதிய மில்லேனியத்தின்
முதலாவது ஆண்டாகும்.
இரண்டாயிரமாம் ஆண்டானது
கடந்த ஆயிரம் ஆண்டுகளின்
கடைசி ஆண்டாகும்.
முழு உலகமுமே
இரண்டாயிரமாம் ஆண்டையே
புதிய மில்லேனியத்தின்
ஆரம்பமாகக்
கொண்டாடிவிட்டன.

அதனால் இந்த
புதிய மில்லேனியத்தின்
முதலாம் ஆண்டான
2001ம் ஆண்டு
அதிக ஆரவாரமின்றி
சாதாரண ஒராண்டாக
தனது கதவுகளைத்
திறந்து கொள்கிறது.

அந்தக் கதவினூடே
கடந்த நூற்றாண்டில்
நாம் அனுபவித்த
துன்ப துயரங்களை
அப்படியே சுமந்துகொண்டுதான்
உள்ளே நுழைகிறோம்.
1948ல் இலங்கை அடைந்த சுதந்திரம்
இனவாதம் அடைந்த சுதந்திரமாக
மாறிவிட்ட காரணத்தால்,
இக் கடை அரை நூற்றாண்டும்
இம்சையாகவே கழிந்தது,
இலங்கைத் தமிழருக்கு.

அரைவாசித் தமிழர்கள்
அகதிகளாக அன்னிய நாடுகளில்
அடைக்கலம் தேடி ஓடிவிட்ட நிலையில்,
இன்னும் சிலர் இங்கேயே
அனாதரவானவர்களாக
ஆகிவிட்ட நிலையில்,
அவர்கள் வாழ்ந்த
அழகிய பிரதேசங்கள்
சுடுகாடுகளாக மாறிவிட்ட நிலையில்,
கொடூர யுத்தத்தின்
துப்பாக்கி முனைகளால்
சுற்றி வளைக்கப்பட்ட
திறந்த சிறைச்சாலையொன்றின்
பலவந்தக் கைதிகளாக,
மனநிலை பேதலித்தவர்களாக,
எதிர்காலமற்று வாழும்
இலங்கைத் தமிழருக்கு
புதிய நூற்றாண்டின்
நுழைவாயிலைக் கடக்கும்
உணர்வே இல்லை.

கடலலை எழுந்து அடங்குவதைப்போல
சமாதானம் பற்றிய பேச்சு
அடிக்கடி எழுவதும்,
பின்னர் அப்படியே அடங்கிப்போவதும்,
இங்கு நாம் அடிக்கடி கண்டு
வழமையாகிப் போன விடயம்.
அண்மையிற் கூட ஏதோ
சமாதானப் பேச்சுக்கள்
நடைபெறப் போகின்றன என்ற
பாரிய ஆர்ப்பாட்டங்கள்
மேற்கொள்ளப்பட்டன.
சமாதானப் பேச்சுவார்த்தையானது
ஓர் இணக்கத் தீர்வை ஈட்டும்
குறைந்தபட்ச நம்பிக்கைகளையாவது
அறிகுறிகளாய்க் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் இங்கோ,
தீர்வுகள் பற்றிய எந்தக்
கருத்துருவமுமின்றி,
இருபகுதியும் ஒருவர்மீதொருவர்
உச்ச அளவு
அவநம்பிக்கை கொண்ட நிலையில்,
பேச்சுவார்த்தைகளில் இறங்குவது
சாத்தியமானதா என்பதும்,
அத்தகைய பேச்சுவார்த்தைகள்
விரைவிலேயே முறிந்துவிடுமென்பதும்,
அவ்வாறு முறியும் போது
இன்னும் மோசமான
அகோர யுத்தமொன்றே-
விளைவாகக் கிடைக்குமென்பதும்
புரியாத புதிரல்ல.

இலங்கை அரசாங்கத்தைப்
பொறுத்தவரையில்
பேச்சுவார்த்தை என்ற பதம்,
கடன்வழங்கும் நாடுகளைத்
திருப்தி செய்வதற்கே
அதிகளவு தேவைப்பட்டது.
கடன் வழங்கும் நாடுகளின்
கூட்டத்தினை ஒருவாறு
சமாளித்து விட்டதன் பின்
அந்தத் தேவையும் முடிந்து விட்டது.

யுத்தத்தின் மத்தியிலேயே
பேச்சுவார்த்தை என்பதை
இப்போது அது வலியுறுத்தி வருகிறது.
அப்படியானால், யுத்தம் புரியுமளவு
நம்பிக்கை அற்றவர்களுடன்
பேச்சுவார்த்தை நடத்தி
தீர்வை ஈட்ட முடியுமென
எப்படி அதனால் நம்ப முடிகிறது?
யுத்தத்தின் மத்தியில்
பேச்சு வார்த்தை என்று
கூறிக்கொண்டு
பேச்சுவார்த்தையிலன்றி
யுத்தத்திலேயே அது
நம்பிக்கை வைத்துள்ளது.

புலிகளும் மறுபுறம்
யாழ்ப்பாணத்தைக்
கைப்பற்றியே தீருவோமெனச்
சூளுரைத்துள்ளனர்.
யுத்தத்தில் நம்பிக்கை
வைத்துக் கொண்டு
நடத்த முனையும்
பேச்சுவார்த்தைகளில்
எப்படி நாம்
நம்பிக்கை வைக்க முடியும்?
அதனால், கடந்த நூற்றாண்டால்
கைவிடப்பட்ட நாம்
பிறக்கின்ற புதிய ஆண்டில்
புதிய வழிகளைத் தான்
தேடவேண்டியிருக்கிறது.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# ஆன்மீகம்

## 'சிவ தியானத்தில் ஆயுள் கூடுவது எப்படி?'



சிவன் என்று கூறும்பொழுது, அவர் உலக ராஜா. எமது உடலிலுள்ள ஆத்மா அவரை நினைத்து தியானத்தில் ஈடுபடும்பொழுது ஒரு தனி இன்பம் ஏற்படுகின்றது. உலக ராஜாவாகிய சிவனும் எமது உடலுக்கு ராஜாவாகிய ஆத்மாவும் ஒன்று சேரும்பொழுது, இது ராஜயோகம் என்னும் உயர்ந்த நிலையை அடைகின்றது. அந்நேரம் நடைபெறும் சுவாசம் சுகமாக நடைபெறுகின்றது. ஒவ்வொரு சுவாசத்திலும் சிவனிடம் இருந்து கிடைக்கும் சாந்தியை அனுபவம் செய்கின்றோம்.

சிவனின் யோகத்தில் இருக்கும்பொழுது, எம் மனதை எம்மையறியாமல் ஒரு காந்த சக்தி அழைக்கின்றது. அப்போது மற்றைய விஷயங்கள் மீது துறவு மனம் ஏற்படுகின்றது. துறவுமனம் என்றால், பிற இழுப்புக்களுக்கு இடம் இல்லை. மனதில் கவர்ச்சி இருந்தால் சிவன் நினைவு இராது. இந்த ராஜயோக தியானம் மூலம் எமது விகர்மம் விநாசம் ஆகின்றது. எவருக்கு இந்த யோகம் சரியாக இருக்கிறதோ அவரை, எந்தவித பழைய விகார சமஸ்காரமும் தன்வசம் இழுப்பதில்லை.

'ஓம் சாந்தி' பி.கு.விக்கி-கல்முனை.

## பார்த்து மணம் புரிவதே சிறந்தது

ஒருவரையொருவர் திருமணத்திற்கு முன்பு பார்த்துக் கொள்வது மிக அவசியமாகும். ஒவ்வொருவரும் தமக்குரிய வாழ்க்கைத் துணை பற்றி பல எதிர்பார்ப்புக்களை மனதில் வைத்திருப்பார்கள். அந்த எதிர்பார்ப்புகளுக்கேற்ற வகையில் தனது வாழ்க்கைத் துணை அமையாததை திருமணத்திற்குப் பிறகு அவர்கள் அறிய நேர்ந்தால், அவர்களின் நல்லுறவு பாதிக்கப்படலாம். அதனால் முன்பே ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வதே சிறந்தது.

முகீராபின் ஷுஃபா(ரலி) அவர்கள் ஒரு பெண்ணை மணம் பேசினார். அவர்களிடம் நபி(ஸல்) அவர்கள் "மணப்பெண்ணைப் பார்த்துக்கொள்! ஏனெனில் அவ்வாறு பார்ப்பது உங்கள் இருவருக்குமிடையே அன்பை ஏற்படுத்த ஏற்றதாகும்!"

"கன்னிப்பெண்ணாயினும், விதவையாயினும் அவர்களுக்கு மணமகளைப் பார்க்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறிய போது, "கன்னிப்பெண் (சம்மதம் தெரிவிக்க) வெட்கப்படுவாளே!" என்று கேட்டேன். அதற்கு நபியவர்கள் "அவளது மௌனமே அவளது சம்மதமாகும்,"என்று கூறினார்கள். அறிவிப்பவர் ஆமிஷா (ரலி). (ஆதாரம்-புகாரி, முஸ்லிம்)

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை 06.

## வெற்றி பெற

கர்த்தர் யோசுவாவிடம் அவன் செய்வதெல்லாவற்றிலும் வெற்றி பெற வேண்டுமானால், அவர் தாம் மோசேக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின் படியெல்லாம் நடக்க வேண்டுமென்றார். யோசுவா 1:9.

நாம் மகிழ்ச்சியான வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்கு என்ன செய்ய வேண்டும்?

நாமும் தேவனுடைய கட்டளைகளைக் கைக் கொண்டு நடந்தால், நாம் செய்யும் எல்லாவற்றிற்கும் வெற்றி கிடைக்கும்படி அவர் நமக்கு உதவி செய்வார்.

நமது வாழ்க்கையிலும் எத்தனையோ கவலைகளும் துன்பங்களும் இருக்கலாம். ஆனால் தேவன் அவையெல்லாவற்றினின்றும் நம்மை காப்பாற்றுவார்.

நாம் வேதாகமத்தைப் படித்து, அதிலுள்ள வசனங்களைத் தியானிக்கும் போது சரியானவற்றைச் செய்யக்கற்று கொள்கிறோம்.

ஆதலால் வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளைக் கைக் கொண்டால் உண்மையாகவே கர்த்தர் தமது குறைகளைப் போக்கி நம்முடைய வாழ்வை வளமாக்கி வெற்றிபெற தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

திருமதி. எஸ்.இந்திரா பாண்டியன்-தெமட்டகொட.

## கவிதைப் போட்டி இல.389



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 06.01.2001

கவிதைப் போட்டி இல.389
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.386

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியுக்க வைத்த கவிதைகள்



### பரிசுக்குரிய கவிதை

### விஷ விருட்சம்

தெற்கோடு வடக்கையன்று
சேர்த்து வைத்த இரயில் பாதை
சீரழியக் காரணமே - நடுவில்
போரரக்கன் நட்ட மரம்!

அ.சந்தியாகோ-கண்டி.

### தமிழர் நிலை!!!!

இருப்புப் பாதையோ இன்று
இடர் நிறைந்த பாதையென்று
விருப்பின்றி மக்களுமே
விட்டு விட்டார் அதை வெறுத்து;
ஆலமரம் அரசமரம்
அழகாக வளர்ந்து நின்று
நிழல் பரப்பும் நிலை கண்டால்
தமிழர் நிலை தெரியுமன்றோ!!!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

### பயனற்றது!

பயணிக்கும் பாதையிலே
பயனற்ற விருட்சம்!
பயனற்ற பாதையிலே
பாழாய்ப்போன யுத்தம்!!!

ஜி.கே.யோகச்சந்திரன்-
அக்கரைப்பற்று 07.

### யாழ்தேவி....

ஒய்யாரமாய் நிமிர்ந்து நிற்கும் ஆலமரமே!
எமக்காக சாட்சி சொல்!
யாழ்தேவியின் சத்தம் கேட்டு
எத்தனை வருஷமென்று?

எஸ்.மதுரன்-நீர்கொழும்பு.

### எதுதான் இணை?

இரக்கமில்லா மனித அரக்கர்களின்
மரத்துப்போன இதயமே என்றும் இரும்பாகும்-அந்த
இரும்புள்ளம் கொண்ட ஈனப்பிறவிகளையும் சுமக்கும்
இரும்புத் தண்டவாளமே உனக்கு எது தான் இணையாகும்?

த.தமயந்தி-சாம்பல்தீவு.

### வேடிக்கை!

போரோடு!
போய் விட்ட புகை வண்டி!
திரும்பி வரும்!
அறிகுறி இல்லையென்றா!
விழுதோடு!
கிளைப்பரப்பி விருட்சமாக!
நடு வீதியிலே....!
நிற்பதுவும் வேடிக்கைதான்!

ஹப்புத்தளையூர்-மனோ
கோபாலன்.

### தொடரும்....

வெடித்த குண்டால்
சேதம் ஏற்படாவிடினும்
தமிழர் எம் கைதுகள்
தொடர்கதை தானோ?

எஸ்.சசிதரன்-கொழும்பு 13.

### நீண்டு செல்வதேன்?

சந்திக்கு வந்தும்
சிந்தித்து சிந்தித்து
சந்திக்க மறுக்கும்
சமாதானப் பயணமே - நீ
வண்டவாளங்கள் பேசியே
நீண்டு செல்வதேன்? - இந்த
தண்டவாளங்களைப் போல்....?

எம்.ரீ.எம்.சைலாஸ்-கம்மல்துறை.

### வரலாறு

தண்டவாளம் போலவே
இணையாமல்
இருக்கிறோம்! அது நம் கோளாறு!
இணைவதற்காக இரத்தம்
சிந்துகிறோம்-இது நம் வரலாறு!

சுகுமாரன் சுபா- தலவாகலை.

### வடபுலம்

புலம் பெயர்ந்த மக்கள்
தடம் பெயர்ந்த தண்டவாளம்!
சுட்டெரித்த சுடுகாடாய்
வடபுலத்து வளங்கள்
களம் கண்ட தேசமிது!

தெ.லோஜனா-கொழும்பு 06.

### எல்லாமே போராலே!

ஆண்டாண்டு காலமாய்
ஆதரித்த சொத்துக்கள்-
இனவாதம்
தூண்டிலிட்ட போராலே
சீரழிந்து போகுதய்யோ!

ச.மகாலிங்கம்-வெலிமடை.

### வீரன்

பசுமையான இம்மண்ணில்
தீராத முடிவொன்றால்,
பாழான ரயில்பாதை, நடுவினிலே
போரின்றி இடம் பிடித்த ஆலமரம்,
வீரன்தான்!

எம்.சிராஜ்-கொழும்பு 12.

### பார்ப்போம்!

இணையாத இரு
சக்திகளை
இணைக்கும் பாலமாக
நோர்வேயின் முயற்சிகள்
சாதிக்குமா? சாத்தியமா?

எல்.பிரதாப்-மட்டக்களப்பு.

### மாந்தரைப் போல்...!

பார் அழியும்
போர் கொடுமையில்
உள்ள சொந்தங்களையெல்லாம்
இழந்து விட்டு மக்கள் தவிக்க,
மரத்திற்கும் இந்த நிலையோ....?

ஜெ.ஷாலினி-பாரதெக்க.

# வாசக[ர்]சாலை

அன்புடன் ஆசிரியருக்கு,

பல புதிய அம்சங்களுடன் முத்தாக வெளிவரும் முரசு மென்மேலும் வளர்ச்சிபெற வாழ்த்துகிறேன். அண்மையில் முரசில் வெளியான கட்டுரையொன்று தொடர்பாக வாழைச்சேனை-05 தைச் சேர்ந்த ஏ.எம்.நளீம் மற்றும் ஹல்கரனோயாவைச் சேர்ந்த எம்.பாலசுந்தரம் ஆகிய இருவரும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டது சுவாரசியமானதாகவும் மிகவும் பயனுள்ளதாகவும் காணப்பட்டது.

இருந்தும் இக் கட்டுரைகளை நன்கு அலசிப்பார்த்த பொழுது ஒரு தவறான வார்த்தை பிரயோகிக்கப்பட்டிருந்ததனை அவதானிக்க முடிந்தது. வாசக நண்பர்கள் இனிமேல் இத்தகைய ஒரு தவறை செய்துவிடக் கூடாது என்பதற்காக அன்புடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முரசு 385ல் வெளியான நண்பர் எம்.பாலசுந்தரம் அவர்களின் கட்டுரையில் 'நளீம் அவசரப்படுகிறார்' எனச் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் அதே பாலசுந்தரம் அவசரப்பட்டு ஒரு சொல்லை தவறாக பிரயோகித்தது தான் பெரும் வேடிக்கை. அதாவது அவர் தனது கடிதத்தில் "ஏன் முரசின் முதுகில் இனத்தை துஷ்பிரயோகம் செய்கிறது என்ற பாரத்தை சுமத்துகிறீர்கள்?" எனக் குறிப்பிட்டிருந்தார். இங்கே 'இனம்' என்ற தவறான அர்த்தத்தை தரக்கூடிய சொல் முரசின் கட்டுரையிலோ அல்லது நண்பர் நளீமின் கடிதத்திலோ பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. ஆனால் நண்பர் பாலசுந்தரம் நீங்கள் ஏன் பயன்படுத்தினீர்கள்? உங்களுக்கு அவசியம் இருந்ததா?

இந்த 'இனம்' என்ற சொல் தவறாக பயன்படுத்தப்படுவதனால் உள்நாட்டில் மட்டுமன்றி, உலகின் பல நாடுகளிலும் கொடூரமான யுத்தங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பது முரசு வாசகரான உங்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். ஆகவே எல்லோருக்கும் பொதுவான ஊடகமான முரசில் ஒரு குறுகிய எல்லையைக் கொண்ட 'இனம்' என்ற சொல் தேவையற்றதாகும். ஆகவே முரசில் மட்டுமல்ல ஏனைய ஊடகங்களாயினும் சரி, உரையாடலானாலும் சரி, ஏன் மனதளவில் கூட இதுபோன்ற பிரிவினை தரக்கூடிய சொற்களை பயன்படுத்தாமல் இருப்பது நன்மை தரும்.

து.உதயகுமார்-உக்குவளை.

மதிப்புக்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

தினமுரசு வழங்கும் அனைத்து அம்சங்களும் அருமை. குறிப்பாக 'ஆன்மீகம்' சிந்தனைக்கு விருந்தாக அமைந்திருந்தது. மற்றும் இதயரெத்தினம் அவர்கள் எழுதிய 'விடியல்' சிறுகதையும் சிறப்பாக இருந்தது. நல்ல படைப்புகளை வழங்கும் தினமுரசின் சேவை தொடர இனிய வாழ்த்துக்கள். நன்றி.

வா.மங்களா, வா.தங்களா-மட்டக்களப்பு.

பிரியமுள்ள முரசே,

உன்னிடத்தில் உள்ள அனைத்து ஆக்கங்களும் சுவையானவை. ஆக்கங்களில் அடங்கியுள்ள அம்சங்கள் எல்லாம் இனிமையானவை. அதிலும் 'சினிமா', 'பாப்பா முரசு','கவிதை போட்டி','சிந்தியா பதில்','விளம்பரங்கள்' என்பன சூப்பரோ சூப்பர். இதெல்லாம் மேலும் மேலும் வளர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சி.சரண்யா-கம்பளை.



வணக்கம்

அன்பான தினமுரசின் ஆசிரியர் அவர்களுக்கு! தங்களுடைய இதழை நான் தவறாது படித்து வருகின்றேன். அது எனது பொழுதுபோக்காகவும் கூட அமைகிறது.

இம் மடலை எழுதுவதற்கான காரணம் தங்கள் முரசில் தொடர்ந்து வெளிவரும் 'விக்கிரமாதித்தன்' கதையை படித்து சுவைத்துள்ளேன். அது என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

அதை ஒரு புத்தகமாக எனக்கு அனுப்பி வைப்பீர்களா? எவ்வளவு பணம் என்றாலும் பரவாயில்லை. தருவதற்கு தயாராக உள்ளேன். எனவே இதனை அனுப்பி வைப்பீர்கள் என நம்பிக்கையுடன் வழிமேல் விழிவைத்து காத்திருக்கிறேன்.

தி.தெய்வானை-யாழ்ப்பாணம்.

அன்புள்ள முரசே,
ஆயிரம் பத்திரிகைகள்
ஆகாயத்தையடையலாம்-ஆனால்
உன் உதயத்தை காணவே-தினம்
எம் கண்மலர்கள் காத்திருக்கின்றன
வாரமொரு முறை தவறாமல் நீ
வந்துவிடுகிறாய்.
ஆனால் நீ கொண்டு வரும் அனைத்து
அம்சங்களையும் அறிந்து முடிக்க ஒரு
வாரம் போதாதே.

வரணியூர்-கே.அப்பாஸ்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

# புலிகளின் போர் நிறுத்த அறைகூவல்

# ஏற்படுத்தியுள்ள பெரும் குழப்பம்

**விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்த அறைகூவல் நாட்டில் பலதரப்பட்ட குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதி நாட்டில் இல்லாத வேளையில் புலிகளால் விடுக்கப்பட்ட போர் நிறுத்த அறைகூவலை 'கண் பார்வையற்ற சிலர் யானையைத் தொட்டுப் பார்த்த கதை'யாக நிகழ்ந்திருக்கிறது. அமைச்சர்கள், அரசியல்வாதிகள் ஆகியோருடன் சில ஊடகங்களும் சேர்ந்து நாட்டு மக்களை பெரும் குழப்ப நிலைக்குள்ளாக்கி விட்டன.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்த அறிவித்தலைத் தொடர்ந்து பலரும் பலவிதமான வியாக்கியானங்களைச் செய்து வருகின்றனர். "விடுதலைப் புலிகளின் இந்த அறிவித்தலை அரசாங்கம் முற்று முழுதாக நிராகரித்து விட்டது." என்று பல குரல்கள் எழுந்துள்ளன. எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும், சில சிங்கள மற்றும் ஆங்கில ஏடுகளும் கூட, விடுதலைப் புலிகளின் அறைகூவலுக்கு அரசாங்கம் சாதகமான பதிலை அறிவிக்கவில்லை என்று கூறிவருகின்றன. இதனையொட்டி அரசாங்கம், சில அரசியல் வாதிகளும், பத்திரிகைகளும் "அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தவறான கோணத்தில் விமர்சித்து வருகின்றன." என்று குறை கூறியிருக்கிறது. அரசாங்கம், விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்த அறிவித்தலையிட்டு கருத்துத் தெரிவிக்கையில், "அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் போர் நிறுத்தம் பிரகடனப் படுத்தப் படாமலே பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தலாம்மென்றும் அப்பேச்சுவார்த்தைகள் நடைபெறும் தோரணையை அனுசரித்தே போர் நிறுத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வரலாம்" என்றும் கருத்துக் கூறியிருக்கிறது.

புலிகளின் போர் நிறுத்த அறிவித்தலையும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் சர்வதேச சமுகம் வரவேற்றிருக்கின்றது. புதிய ஆண்டின் இரு தரப்பினருக்குமிடையே நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படும் அமைதிப் பேச்சுவார்த்தைகள் இந்த நாட்டில் சமாதானம் ஏற்பட ஒரு கால்கோளாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி மாத மத்தியில் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் இலங்கைக்கு வரவிருக்கிறார் என்று தெரிய வருகிறது அந்த நாட்டின் ராஜாங்க அமைச்சர் ரேமண்ட் ஜோஹான்சன் சமாதானத்துக்கான சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பது தொடர்பாக தனது மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்.

## அபிப்பிராய பேதங்கள்

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு மாதகால போர் நிறுத்தத்தை அறிவித்ததைத் தொடர்ந்து உடனடியாகப் பலதரபட்ட வாதப்பிரதிவாதங்களும் அபிப்பிராய பேதங்களும் எழுந்தன. பாதுகாப்புத்துறை பிரதியமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த எடுத்த எடுப்பிலேயே, "அரசாங்கத்தைப் பொறுத்தவரை போர் நிறுத்தம் சாத்தியமில்லை," என்று கூறிவிட்டார். அதேவேளை பொது ஜன முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் டி. எம்.ஜயரட்ண விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவித்தலை மனப்பூர்வமாக வர வேற்பதாக அறிக்கை விடுத்துள்ளார்.

இதே காலகட்டத்தில் தகவல் துறை அமைச்சர் அனுர பியதர்ஷ யாப்பா புலிகளின் அறிக்கையைத் தான் உன்னிப்பாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்தார்.

நீதியமைச்சர் பட்டி வீரகோன் "புலிகளின் அறிவித்தல், நிலைகுலைந்து போயிருக்கும் அவர்களுடைய போராளிகளை மீண்டும் ஒன்று திரட்டி ஆயத்தப் படுத்துவதற்காகவே போர் நிறுத்தத்தைப் பயன் படுத்துவார்கள்" என்று கூறினார்.

இதற்கிடையில் ஜே.வி.பி. போன்ற கட்சிகள் விடுதலைப்புலிகளை போர் முனையில் முறியடிப்பதன் மூலமே இந்த நாட்டின் அமைதியை ஏற்படுத்த முடியும்" என்று தெரிவித்துள்ளன.

இத்தகைய குழப்பமான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருந்த வேளையில், ஜனாதிபதி சந்திரிக்கா நாட்டில் இல்லை. இதன் பயனாக அமைச்சர்களும் அமைச்சர்களும் அரசியல் வாதிகளும் தங்களுடைய சொந்தக் கருத்துகளை விருப்பு வெறுப்புகளை வெளியிட்ட வண்ணமிருந்தனர். இத்தகை சூழ்நிலையில் தான் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தல் ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ■

## யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் வீதி விபத்துக்கள்!

(யாழ் நிருபர்)

யாழ் குடாநாட்டில் வீதி விபத்துகள் அதிகரித்து வருகின்றன. இவை நாளாந்த நிகழ்வுகளில் ஒன்று என்பது போல் இன்று ஆகிவிட்டன. கடந்த ஜனவரி மாதம் முதல் குடாநாட்டில் இது வரை நிகழ்ந்த பல்வேறு வீதி விபத்துகளில் சுமார் இருபது பேர் வரை மரணமடைந்தும் சுமார் முப்பது பேர் வரை காயமடைந்தும் உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல்வேறு பகுதிகளிலும் இவ்விபத்துகளால் காயமுற்று, அநேகமாக மயக்கமடைந்த, கூடிய இரத்தப் பெருக்குடன் அனுமதிக்கப்பட்டு உயிரிழக்கும் சம்பவங்கள் கூடுதலாக யாழ். போதனாவைத்திய சாலையிலேயே நிகழ்கின்றன.

அதிர்ச்சியும் அதிகரித்த இரத்தப் பெருக்கும் உரிய குறுப் இரத்தம் உரிய வேளையில் கிடைக்காமையும், காயமுற்றவரை மருத்துவமனைக்குக் கொண்டு வருவதில் ஏற்படும் தாமதம் என்பனவும் இத்தகைய உயிரிழப்புகளுக்குக் காரணங்களாகின்றன எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சமீபத்தில் ஏழாலையிலிருந்து இடம் பெயர்ந்து உரும்பிராயில் வசித்து வந்த இளம் மாணவி ஒருத்தி இராணுவ வாகனத்தால் மோதப்பட்டு உடல் சிதறிப் பலியான சம்பவம் பலரது மனத்தையும் உலுக்கி விட்டது. சம்பவ வேளை தனது வாகனத்தின் பிரேக் சீராகச் செயற்படவில்லை என்று மேற்படி வாகனச் சாரதி நீதிமன்ற விசாரணையின் போது ஒப்புக்கொண்டார். இது போன்று இராணுவ அம்புலன்ஸ் ஒன்று மோதி திருநெல்வேலியில் யாழ்.பல்கலைக் கழக மாணவி ஒருத்தி படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வாரம் அனுமதிக்கப் பட்டுள்ளார். ■

## வாசகர்களுக்கு முரசின் ஈதுல் பித்ர் வாழ்த்துக்கள்

திருக்குர் ஆன் அகிலத்துக்கு அருளப் பட்ட அருள் நிறைந்த மாதத்தில் நோன்பு நோற்று ஐம்பெரும் கடமைகளிலொன்றை நிறைவேற்றி அகமகிழ்ந்து களிக்கும் நெஞ்சங்களுக்கெல்லாம் அவனருள் வெள்ளம் பெருகட்டும் என்று கூறி

**வாழ்த்துகிறோம்!**

## வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை

(காரைதீவு நிருபர்)

"அம்பாறை மாவட்டத்தில் தற்போது பலத்த மழை பெய்து வருகின்றது. அதற்கு நிவாரணம் தருமாறு பொதுமக்கள் கோரி வருகின்றனர். இதேவேளை கடந்த மாதம் வந்த வெள்ளத்திற்கான நிவாரணம் இன்னும் வழங்கப்படவில்லை என்ற அதிர்ச்சி தரும் தகவலையும் பொது மக்கள் தெரிவித்தனர். மேல் நடவடிக்கை எடுத்துப் பார்த்தபோது பிரதேச செயலாளர்கள் மற்றும் அது தொடர்பான அதிகாரிகள் இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலை தொடரக் கூடாது."

இவ்வாறு அம்பாறை மாவட்ட ஈபி.டி.பி. தலைமையகப் பொறுப்பாளர் வி.ரவிந்திரன் கமலன் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய வெள்ளத்துக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும், அம்பாறை மாவட்ட எம்.பி. குணசேகரம் சங்கரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளத்திற்கு 5 இலட்ச ரூபா அம்பாறை அரச அதிபரிடம் வழங்கப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த முயற்சியின் பேரில் மேற்படி 5 இலட்ச ரூபா கிடைக்கப்பெற்றது. ■

## "இலங்கைக்கு உதவி வழங்க வேண்டாம்!"

## ஐ.தே.கட்சி ஆர்ப்பாட்டம்.

பாரிஸ் நகரில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் உதவியாகக் கிடைக்கவிருக்கும் தொகைபற்றி எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. இக்கருத்தை ஐக்கிய தேசியக் கட்சியினர் கடந்த வாரம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளனர்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், அக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த உலகவங்கிக் கட்டடத்தின் முன்புறமாக ஐக்கிய தேசியக் கட்சியினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றினை நடத்தியுள்ளனர். இதன்பயனாகவே 'இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு உதவிகளை வீணடிக்கிறது' என்று தாங்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையிலேயே அந் நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்குவதை பின் போட்டுள்ளனர் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறிவருகின்றனர்.

இதேவேளை உதவி வழங்கும் நாடுகளை, "இலங்கைக்கு உதவிகளை வழங்க வேண்டாம்!" என்று ஐ.தே.கட்சியினர் சதி செய்து துரோகச் செயலில் ஈடுபட்டுள்ளனர் என்றவாறு அரசாங்கம் அக்கட்சி மீது கண்டனம் தெரிவித்துள்ளது. ■

## யாழ்ப்பாணத்தில் பெருகி வரும் குற்றச் செயல்கள்?

யாழ்குடாநாட்டில் மக்கள் இடம் பெயர்ந்தும் மற்றும் பல்வேறு வழிகளில் வார்த்தையில் விபரிக்க இயலாதவிதத்தில் அல்லலுற்று பஞ்சையாய், பராவிகளாய் அலைகின்ற இன்றைய போர்க்காலச் சூழலில் தம் பாலியல் வக்கிரம் தீர்த்துக் கொள்ள முனைப்புடன் முற்படும் காமுகர் கூட்டமும் தன் வேலையைக் கனகட்சிதமாகத் தொடர்ந்து செய்து கொண்டு தானிருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பணக்கொடுக்கல் வாங்கல், குடும்பப் பிரச்சனை, எல்லைப்பிரச்சனை, அடிதடி விவகாரம், இவற்றுக்கெல்லாம் பொலிசார் தம்மிடம் நேரில் வந்து மக்கள் முறையிட்டாலும் நேரடி விசாரணைகளில் இப்போதெல்லாம் ஈடுபடுவதில்லை என்றும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டால் ஒரு கடதாசித்துண்டில் எதிராளியின் முகவரி குறிப்பிடப்பட்டு அப்பகுதி கிராமசேவகர் ஊடாக, இருபகுதியினரும் குறிப்பிட்ட ஒரு தினத்தில் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. தம் பாதுகாப்புக்கருதி குக்கிராமங்கள், குச்சொழுங்கைகள், சனசஞ்சாரம் குறைவான பகுதிகளுக்கு வாகனங்களில் செல்வதைப் பொலிஸார் பெருமளவில் தவிர்த்து குறைத்து வருகின்றார்கள். விபரீதமெனக் கூப்பிடப்பட்டு திட்டமிட்டு விபரீதம் தமக்கு விளைவிக்கப்படலாம் என்ற அவர்களது இந் நிலைப்பாட்டிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்நிலையில் பொலிஸ் நிலையங்களுக்கும் மற்றும் குடாநாட்டில் இயங்கும் சில தமிழ்க்குழுக்களிடமும் சென்று தமக்கு இழைக்கப்பட்ட நம்பிக்கைதுரோகம், அநீதி என்பதைப் பற்றி கூடுதலாக முறையிடுவது திருமணமாகாத இளம் பெண்களே என்பதனை அவதானிக்க முடிகின்றது.

பசப்பு வார்த்தைகள் பேசி பிரஸ்தாப யுவதிகளின் வயிற்றில் சுமையை ஏற்றிவிட்டு சாதுரியமாகத் தப்பித்துக் கொள்ள முனைவதில் ஏற்கனவே ஸ்பரிச சுகத்தில் ஊறித்திளைத்த குடும்பஸ்தர்களும் அடங்குவர். நாளுக்கொரு இடமாக சொந்த இருப்பிடமின்றி ஒட்டிய வயிற்றுடன் ஒருவேளை, கஞ்சிக்கே வழியின்றி வாழ்வதங்கிய நிலையில் பரிதவிக்கும் சில நங்கையரை நாசூக்காகப் பேசித் தம் வலையில் வீழ்த்தி, தம் உடற்பசியைத் தீர்த்துக் கொள்வதில் ஒருசில வாலிபர் கூட்டமும் பின் நிற்பதில்லையாம். விசயம் முற்றியதும் களன்று விடுகிறார்களாம்.

எனவே இத்தகைய அவமான நிலையால் தம் உயிரையே மாய்த்துக் கொள்ளும் யுவதிகள் முடிவெடுக்கும் துர்ப்பாக்கிய நிலையும் அரும்பத் தொடங்கியுள்ளதாம்.

தற்போது குடாநாட்டில் இயங்கும் பொது அமைப்புக்கள்-குறிப்பாக மாதர் அமைப்புக்கள் இத்தகைய நிலையில் விரைவில் ஆற்றிடப் போகும் ஆக்கபூர்வமான பணி என்ன என மக்கள் அங்கலாய்ப்புடனும் ஆதங்கத்துடனும் கேள்வி எழுப்புகிறார்கள்.

## உள்ளூராட்சித் தேர்தல்கள் திட்டமிட்டபடி நடக்கும்!

உள்ளூராட்சித் தேர்தல்களைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நடத்தி முடிப்பதென பொதுஜன முன்னணியின் செயற்குழு தீர்மானித்திருக்கின்றது.

இதேவேளை வெளிநாடுகளில் பணிபுரியும் 6 இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை வாக்காளர்களும் இந்தத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு உரிய சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் கட்சி தீர்மானித்திருப்பதாக பொதுச் செயலாளர், அமைச்சர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார். ■

## கிழக்கில் மீண்டும் பெரும் மழை

## பெரும் மழை பலத்த காற்று!

பயிரழிவுகளாலும் பாதிப்பு அதிகரிக்கிறது.

பருவப் பெயர்ச்சி மழையுடன், பவன தாழ் அமுக்கம் சேர்ந்து கொண்டதால் கிழக்கில் மீண்டும் பெரும்மழையும், பலத்த காற்றும் வீசுகிறது.

தாழ்ந்த பகுதிகளிலுள்ள வயல்களில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதாலும் பயிரழிவுகளும் அமோகமாக ஏற்பட்டுள்ளதாலும் விவசாயிகள் பலத்த இழப்பைச் சந்தித்துள்ளார்கள்.

மக்கள் வெளியே செல்ல முடியாதபடி அடைபட்டுக் கிடக்கிறார்கள். கடந்த ஒரு வார காலமாக காரிருள் மேகங்கள் வானை மூடியபடி இடைவிடாது அடைமழை பெய்து வருகிறது. மழைகாரணமாக கிழக்கில் கிறிஸ்மஸ் கொண்டாட்டமும், நோன்புப் பெருநாளும் சோபிக்கவில்லை.

இதனிடையே மலையகத்தின் கிழக்குச் சரிவுகளிலும் பலத்த மழை பெய்து வருவதால் அங்கும் பயிரழிவுகளும், மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. ●

## வெள்ள நீருக்குள் இராணுவ முகாம்களும்

கிழக்கில் பெய்து வரும் பெருமழை வெள்ளப் பெருக்கின் காரணமாக இராணுவ முகாம்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

தாழ்ந்த பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் காவலரண்களுக்குள்ளும், பங்கர்களுக்குள்ளும் வெள்ளப் பெருக்கு நீர் புகுந்துள்ளது. சில முகாம்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. மட்டக்களப்பு களுவன்கேணிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாமுக்குள்ளும் நீர் புகுந்துள்ளது.

எவ்வாறாயினும் சோதனை, தேடுதல், கண்காணிப்பு நடவடிக்கைகளிலிருந்த தீவிரம் தளரவில்லை. ■

## கொட்டும் மழையிலும் இருட்டிலும்

## பயணிகள் நடக்க வைத்து சோதனை!

(நமது நிருபர்)

கிழக்கில் மீண்டும் பரவலாக பெருமழை பெய்து வருகிறது. எனினும் பாதுகாப்புத் தரப்பினரின் சோதனைகளும், கெடுபிடிகளும் குறைந்தபாடில்லை.

கொழும்பிலும், நாட்டின் இதர பகுதிகளிலுமிருந்தும் வரும் பயணிகள் மகாவலி கங்கைக்கு அருகிலுள்ள மன்னம்பிட்டிப் பாலத்தில் சோதனைக்குள்ளாக்கப் படுகிறார்கள்.

பெருமழை பெய்து வருகின்ற வேளையிலும் இருளிலும் மன்னம்பிட்டிப் பாலத்தில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு பயணிகள் பயணப்பொதியுடன் நடந்து செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கொட்டும் மழையிலும் நனைந்த படி பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் உட்பட அனைவரும் ஒதுங்கி நிற்க இடமில்லாது மகாவலி கங்கையின் ஓரமாக உள்ள மரங்களின் கீழ் தஞ்சமடைகிறார்கள்.

"எதற்காக இந்தக் கெடுபிடியான சோதனை? கொழும்பிலிருந்து யாராவது புலிகள் மட்டக்களப்புக்குள் ஊடுருவதைத் தடுப்பதற்காகவா," என்று பயணிகள் கேள்வி எழுப்புகிறார்கள். சோதனை செய்யப்படும் கடந்த 10 வருடகாலத்தில் எவராவது புலி மன்னம்பிட்டிப் பாலத்தில் மடக்கிப் பிடிக்கப் பட்டதாக சரித்திரமில்லை என்றும் பயணிகள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இதேவேளை, அவ்விடத்தைக் கடந்து செல்லும் பெரும்பான்மை இனத்தவர் பயணிக்கும் வாகனங்கள் எதுவும் இவ்வாறான சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களின் புனித நோன்பு காலத்தில் கூட இவ்வாறான கெடுபிடிச் சோதனைகள் தளர்த்தப் படவில்லை என்பதை நோன்பாளிகள் வேதனையுடன் முரசுக்குத் தெரிவித்தனர். ■

## பட்டமளிப்பு விழா ஊர்வலத்தால் பயணிகள் பட்ட அவஸ்தை!

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் ஏழாவது பட்டமளிப்பு விழா டிசம்பர் 20ம் திகதி வந்தாறுமூலையில் நடைபெற்றது.

பட்டமளிப்பு விழாவுக்காக கொழும்பு-மட்டக்களப்பு நெடுஞ்சாலைப் போக்குவரத்தைத் தடை செய்து ஊர்வலத்தை ஆரம்பித்திருந்தார்கள்.

சுமார் 45 நிமிட நேரம் இவர்கள் இருவழிப் போக்குவரத்தையும் தடைசெய்திருந்ததால் பயணிகள் பெரும் அவஸ்தைப்பட வேண்டியிருந்தது.

அவசர சிகிச்சைக்குச் செல்லும் நோயாளிகளும் கடமைக்குச் செல்லும் உத்தியோகத்தர்கள் மற்றும் விமானப் பயணத்திற்குச் செல்வோரும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார்கள்.

பயணிகளின் பொதுப் போக்கு வரத்து வாகனங்களைப் பல்கலைக் கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தடுத்து நிறுத்திய விதம் அதிருப்தியளிப்பதாக இருந்தது என்று வாகனக்காரர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

பட்டமளிப்பு விழா ஊர்வலத்தை பாதையின் ஒரு பகுதியிலோ பல்கலைக் கழகத்திற்குள்ளேயோ நடத்தியிருக்கலாமென்று பொதுமக்கள் கூறுகிறார்கள். ■

## மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணியின் பின்னடைவுக்கு காரணமான இருவரும்

# கூட்டணியிலிருந்து விலக்கப்படவேண்டும்.

நடந்து முடிந்த தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி அடைந்த பின்னடைவுக்கு காரணம்-ஏற்கனவே இம்மாவட்டத்தில் நாடாளுமன்ற பிரதிநிதிகளாக இருந்த நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் செயற்பாடுகளின் தாக்கமேயாகும். வன்னி மாவட்டத்தில் ஒரு விபத்தின் மூலம் நாடாளுமன்றப் பிரதிநிதியாகிய ரெலோ செயற்பாடுகளின் தாக்கம் நடந்து முடிந்த தேர்தலில் வன்னி மாவட்டத்தில் மூன்று பாராளுமன்றப் பிரதிநிதிகளை ஏற்படுத்திக் கொடுத்த செயலோடு, மட்டு மாவட்ட மூன்று நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் செயற்பாடுகளை ஒப்பிடும்போது, கூட்டணி உறுப்பினர்களை அவரவர் தொகுதி மக்களே நிராகரித்த காரணம் நன்கு புலப்படும். மட்டக்களப்பில் நாடாளுமன்றப் பிரதிநிதியாகிய ஜோசப் பரராஜசிங்கம் இம்முறை தன் தொகுதியான மட்டக்களப்பில் பெற்ற வாக்குகள் 7599. 1977ம் ஆண்டு மட்டக்களப்புத் தொகுதியில் கூட்டணியும்-தமிழரசுக் கட்சியும் சேர்ந்து பெற்ற மொத்த வாக்குகள் 51 ஆயிரத்துக்கும் மேற்பட்டதாகும். அதேபோல பட்டிருப்பில் 1977ம் ஆண்டு கூட்டணிக்கு 15000க்கும் மேற்பட்ட வாக்குகள் கிடைத்தன. கற்குடாவிலும் 16000த்துக்கு மேற்பட்ட வாக்குகள் கிடைத்தன. இவை கூட்டணியின் நிரந்தர வாக்குகளாகும். இந்த நிரந்தர வாக்கு மூலதானத்தைத் தேடி வைத்தவர்கள் அதற்காக உடல், பொருள், ஆவியைத்தந்தவர்கள். இந்தப் பாராளுமன்றப் பிரதிநிதிகளில் எவருமே இல்லை. இவர்கள் யார் யாரோ பாடுபட்டு கஷ்டப்பட்டு மூட்டிய தீயில் குளிர்காய வந்தவர்கள். பிறரின் உழைப்பில் உடலை வளர்த்துக் கொண்டு முன்னவர்கள் தேடி வைத்த வாக்கு வங்கிகளை தங்கள் செயற்திறமை இன்மையால் சிதைத்து விட்ட சீமான்கள். இன்று தங்களுக்குள்ளேயே அடிபடுகிறார்கள் என்றால் பார்க்கப் பரிதாபமாகவும் வேதனையாகவும் இருக்கிறது. கடைசி நேரத்தில் விடுதலைப் புலிகள் கைகொடுக்கா விட்டால், கூட்டணி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதியை மட்டுமே பெற்றிருக்கும். முன் பாராளுமன்றப் பிரதிநிதிகள் இருவரும் தங்கள் தங்கள் தொகுதிகளான மட்டக்களப்பிலும் பட்டிருப்பிலும் படுதோல்வி அடைந்துள்ளார்கள். மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கம் பெற்ற வாக்குகள் 7599. அதே தொகுதியில் தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஆலிம் முகமட் ஹிஸ்புல்லா பெற்ற வாக்குகள் 20010, அலி சாகிர் மௌலானா செய்யது பெற்ற வாக்குகள் 10991. எனவே இரட்டைத் தொகுதியான மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி படுதோல்வி கண்டு விட்டது. 1956ம் ஆண்டு தொடக்கம் 1977ம் ஆண்டு வரை மட்டக்களப்பு தொகுதியை தமிழரசுக் கோட்டையாக கட்டி வைத்தவர் அண்ணன் இராசதுரை.

> தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் ஆரம்பகால உறுப்பினர் **பூ.ம.செல்லத்துரை** அவர்களின் உள்ளக்குமுறல்

அந்தக் கோட்டையை அழித்தவர் ஒருவிபத்தில் நாடாளுமன்ற பிரதிநிதியாகி, மீண்டும் பிரதிநிதியாகி செயற்திறமை இல்லாமையால் மட்டக்களப்புத் தொகுதிக்கே அவமானத்தையும்-பழியையும் தேடித் தந்தவர் ஜோசப்பாகும். அவர் கௌரவமாக ஒதுங்கிக் கொண்டு மற்றவருக்கு இடம் விடுவதே தர்மீகக்கடமையாகும். நடந்து முடிந்த தேர்தலில் காலையில் தோல்வி ஏற்று வெளியேறியவர்-மாலையில் பிரதிநிதியாக அறிவிக்கப்பட்ட விந்தை வியப்பாக இருக்கிறது. இதைத் தொடர்ந்து 17.10.2000ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு ஹர்த்தாலே நடந்திருக்கிறது. இது கூட்டணி வரலாற்றில் இதுவரை கிடையாத மாபெரும் அவமானமாகும். ஒரு புகழ் வாய்ந்த தேசியக்கட்சிக்கு அவ மானத்தை ஏற்படுத்துவதை விட்டு விட்டு ஒதுங்கு வதே தமிழருக்கும் தமிழர் கூட்டணிக்கும் செய்யும் மாபெரும் புண்ணியமும் ஜனநாயக கடமையாகும். அதைச் செய்வார்களா?

அதேபோல பட்டிருப்புத் தொகுதியில் ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணியிடம் தோல்வி கண்டவர் பொன்.செல்வராசா. பொன். செல்வராசா பெற்றவாக்குகள் 5400. ஆளுங்கட்சிப் பிரதிநிதி சோ.கணேசமூர்த்தி பெற்ற வாக்குகள் 5228, எனவே பொன். செல்வராசாவை சோ.கணேசமூர்த்தி 228 வாக்குகளால் தோல்வி அடையச் செய்துள்ளார்.

பட்டிருப்புத் தொகுதி தனித்தமிழ் தொகுதியாகும். நீண்டகாலம் தமிழரசுக்கட்சியின் தலைவராக இருந்த அமரர் இராசமாணிக்கம் பிரதிநிதியாக இருந்து பாதுகாத்த தொகுதி-போராட்டங்களும் உயிர் சேதங்களும் அழிவுகளுமில்லாத காலத்தில் சாதி அடிப்படையில் சிற்சில காலங்களில் மாற்றுக்கட்சியினர் வென்ற போதிலும், யுத்தம் நிறைந்த இக்காலத்தில் உயிர், உடமை சேதங்கள் மிகுந்த இக்காலத்தில் ஒரு ஆளும் கட்சி உறுப்பினரால் தோற்கடிக்கப்பட்டதை என்ன என்று சொல்வது-மக்கள் மேல் குறை சொல்வதா? அல்ல நல்லபாம்பு படமெடுத்தாடியதைக் நாக்கிழியான்புழு ஆடிய ஆட்டத்தின் விளைவு எனவிட்டு விடுவதா?

எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணியின் சரிவுக்கு தாங்களே முழுக்க முழுக்கக் காரணகர்த்தாக்கள் என்பதை ஏற்றுக் கொண்டு ஜோசப் பரராஜசிங்கமும் பொன் செல்வராசாவும் ஒதுங்கிக் கொண்டு புதியவர்கட்கு வழிவிடுவதே சிறந்த, உகந்த வழியாகும்.

அமரர்களான தந்தை செல்வாவும் ஜி.ஜி.பொன்னம்பலமும், தொண்டமானும் இணைந்து உருவாக்கிய தமிழர் கூட்டணிக்கு இதுவரை காலமும் ஏற்படாத தேர்தலில் மோசடி என்ற அவமானத்தை ஏற்படுத்தி, அதை ஊரறிய உலகறிய வைக்க-வெற்றிகரமான ஹர்த்தாலும் நடந்து முடிந்த பின் பதவியில் ஒட்டி இருப்பது புத்திசாலியான செயலல்ல. ஜனநாயக மரபுமல்ல.

கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழர்கள் அடைந்த அவலங்களுக்கும் அகதி வாழ்க்கைக்கும் முற்றுப் புள்ளி வைக்கமுடியாதவர்கள் பாராளுமன்றக் கதிரைக்கு சுமையாக இருக்க வேண்டிய அவசியமும் அவசரமும் தமிழருக்கில்லை.

## சக்காத்து- (நிதிஉதவி)



கண்டியைச் சேர்ந்தவரும், தலைநகரில் வாழும் இஸ்லாம் மதத்தை தழுவியவருமான Mohamed Kapoor Alias Janakiram. தனது மனைவி Sithi Nazeema. இவர்களின் 24 வயது ஒரே மகன், கல்கிசை தோமஸ் கல்லூரி பழைய மாணவருமான Rahuman என்பவர் மூளை பாதிப்பால் இடுப்பு சீவனற்று, நடக்க முடியாமல், 5 வருடமாக உட்கார்ந்த நிலையில் இருக்கிறார்.

இவரின் சிகிச்சைக்காக தென்னிந்திய அப்பலோ மருத்துவமனை, 5 இலட்சம் கோருகிறது. தங்களது ஒரே மகனை குணமாக்குவதற்கு போதிய பணவசதியின்றி, துயரில் ஆழ்ந்திருக்கும் பெற்றோர், அனைத்து முஸ்லிம்களிடமும் புனித நோன்பின் சக்காத்தை தங்களுக்கு வழங்குமாறும், எதிர்வரும் நன்னாளை கொண்டாடும் இந்துக்களும், கிறிஸ்தவர்களும் உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

**பண உதவி வழங்குவோர்:**
Sithi Nazeema
Savings A/c 0140-164197-101, Seylan Bank. Dehiwela கிளை
**நேரில்:** 91, 2nd Lane, Badowita, Mt.Lavnia
விலாசத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி
அ.துஸியந்தினி

02.01.2001




அகிலவேந்தன்-இந்திரா காந்தியின் செல்வப் புதல்வி துஸியந்தினி தனது முதலாவது பிறந்த தினத்தை 2001.01.02. அன்று பம்பலபிட்டியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணன் மகேந்திரன், அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார் தயாளன், மதன், சுபன், பெரியப்பாமார் றகுவேந்தன், சாந்தன், பெரியம்மாமார், ராணி (சிங்கப்பூர்), லலிதா, குட்டி, நந்தினி, கிளாஸ்கா, மாமன்மார் குமார், கல்பிட்டி ராஜா, கொளஸ்றிகா, சித்திரவேல் குடும்பம், மாமிமார் உதயநிலா, சாரதா, அண்ணன்மார் கிசான், கேசவன், தம்பி மச்சான் செந்தூரன், வவுனியா சுரேஸ், ரேனு, டிலானி, தம்பி, புவனசுந்தரி, ஜோசேப், கிளி, ராஜா, ஜெகன், சுபோதினி, மோகன், நிறஞ்சனா, சுசிலா, தனுஸன், சூட்டி, பிரான்சிஸ் குடும்பம், பிறேமன், கம்ஸன், றமணன் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் திருமலை கோணேஸ்வர சிவ பெருமான் அருளால் நோய் நொடியின்றி பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: என்.ஏ.வேந்தன்.


## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்**
"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை**
"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், மகளின் திக்குவாய் குணமாகியது**
"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்.**
"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், 39 வயதில் அதிசயத் திருமணம்**
"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி**
"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்தால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டேம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி**
"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்த என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது**
"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி**
"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்**
"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், ஜாதகத்தில் கூறியது பலிதம்**
"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்**
"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், அதிசய அக்னி குண்டல பூஜை**
"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், அச்சொட்டான கைரேகை பலன்**
"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி**
"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நல முடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**
**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

| உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி | கொழும்பில் | நுவரெலியாவில் |
|---|---|---|
| Dr.P.K.Saamy J.D.G.A. NL JP<br>Hon. Prof. (IUMA)<br>Sri Durgaadevi Manthirika Uchchada Peedam. | No.162,<br>Kotahena Street,<br>Mayfield Road,<br>Colombo 13,<br>Sri Lanka. | 33, Daily Fair Complex,<br>Kandy Road,<br>Nuwara-Eliya.<br>052-22508, 052-35097. |

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**
**14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.**
**T.P : 888214 Fax : 682984**



**கணினி வகுப்பு** பாலர் வகுப்பிலிருந்து தரம் மூன்று வரையான மாணவர்களுக்கு Pentium iii கணினியில் பயிற்சியளிக்கப்படும்.

**TDM**

வயதெல்லை : நான்கிலிருந்து எட்டு வரை
கட்டணம் : மணித்தியாலத்திற்கு ரு 125/=

31A, Galpotha Street, Colombo 13. Sri Lanka
Tp. 074-613486, 078-686996



## Organ Music Class

| பம்பலப்பிட்டியில் Sat, Sun - 1pm | கொட்டாஞ்சேனையில் Mon, Fri - 5pm |
|---|---|
| EPI 316, Galle Road, Col-4, Tel: 075-516790 | IPS 64 2/2 Hinnyappuhamy Mw. Col-13. Tel: 075 - 354801,02 |

Music Sheets - Tamil, English, Hindi, Sinhala..




இசைபயிலும் மாணவர்களுக்காக எளியமுறையில் ஒழுங்மைக்கப்பட்ட இசைக் குறிப்புகள் (Staff Notation / ABCD with lyrics) விற்பனையாகின்றன. பிரதி 30/=


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி
ரா.ஜெனுசா

27.12.2000



சுவிஸ் ஜெனிவாவில், வசிக்கும், ராசு-ராணி தம்பதிகளின் சிரேஷ்ட, புதல்வி, ஜெனுசா தனது முதலாவது பிறந்த தினத்தை 27.12.2000 இல்லத்திலும் 24.12.2000 அன்று மண்டபம் Servetteத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார்.

ஜெனுசா குட்டியை அன்பு அப்பா, அம்மா, அசோக் அண்ணா, அவர்களுடன் இலங்கையில் இருக்கும் அம்மம்மா, அப்பம்மா, தில்லை மாமா குடும்பத்தினர், கோபாலு பெரியப்பா, சின்ராசுமாமா குடும்பத்தினர், மற்றும் ஜெனிவாவில் வசிக்கும், பாட்டி Swiss Lausanneல் இருக்கும் கணேஸ்மாமா குடும்பத்தினர், மற்றும் StGallen செல்லம்மா குடும்பத்தினர், மற்றும் Germanyல் இருக்கும் நர்முமாமா குடும்பத்தினர், சிவன் பெரியப்பா குடும்பத்தினர், Germany நாதன் குடும்பத்தினர் மற்றும் Swiss Bern.ல் வசிக்கும் நேசன்மாமா குடும்பத்தினர் மற்றும் Montreuxல் இருக்கும் கனகராசா சித்தப்பா குடும்பத்தினர், மற்றும் சுவிஸ் வரன் சித்தப்பா, Norwayல் இருக்கும் சிவா சித்தப்பா சாந்தன் மாமா, ரமேஸ்மாமா மற்றும் london மதிமாமா, மற்றும் Indiaல் வசிக்கும் தேவி அம்மம்மா, வசந்தன் மாமா, மற்றும், உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் செல்வி ஜெனுசாவை பல்கலைகளும் பெற்று பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன்
யதுசன்
(யது)

04.01.2001



கனடாவில் வசிக்கும், வடமராட்சி மூத்தவிநாயகர் கோவிலைச் சேர்ந்த யோகராஜா-வனஜா தம்பதிகளின் செல்வப்புதல்வன் யதுசன்(யது) 04.01.2001 அன்று தனது முதலாவது பிறந்தநாளை கனடாவில் கொண்டாடுகின்றார். யதுவை அப்பா, அம்மா, அப்பாச்சி, தாத்தா, அம்மம்மா, பூட்டி பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தி, அண்ணாமார், அக்காமார், மற்றும் உற்றார் உறவினர்கள் மூத்த விநாயகர் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# போரா? சமாதானமா?

## பேச்சுவார்த்தையில் கேள்விக்குறி

**1983** ஜூலை கலவரத்தின் போது, தமிழ் மக்களின் உயிர்கள், உடமைகள் பறிக்கப்பட்ட நிலையில், நாடு எரிந்த சாம்பலின் வெம்மையும் புகையும் தணியாத நிலையில் இந்நாட்டின் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமிழ் மக்களைப் பார்த்து விடுத்த கேள்வி இது.

இப்போது இலங்கை மக்கள் அனைவரின் முன்னும் விஸ்வரூபமாக எழுந்திருக்கும் கேள்வியும் அதுதான்.

தொடர்ந்து போர் நடத்திக் கொண்டிருக்கப் போகிறோமா? அல்லது சமாதானத்துக்காக முயற்சிக்கப் போகிறோமா?

தமிழீழ விடுதலைப் புலிகள் சென்ற ஞாயிற்றுக் கிழமைமுதல் ஒருமாத காலத்துக்கு ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளனர்.

இந்த யுத்த நிறுத்த அறிவிப்புக்கு அரசாங்கம் என்ன பிரதிபலிப்பைக் காட்டப் போகிறது என்றே சகலரும் எதிர்பார்த்தபடி இருந்தனர்.

நாட்டு மக்களுக்கு, குறிப்பாக யுத்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு, அடைமழைபோன்ற இந்த விடாத யுத்தத்திலிருந்து தற்காலிகமாகத் தன்னும் ஒரு இடைவேளை தேவையாக இருந்தது.

அத்தகைய இடைவேளை ஏற்படுத்தப்பட்டுவிட்டால் அதைப் பேச்சுவார்த்தைக்கான நல்ல சூழ்நிலையாக அமைத்துக் கொண்டு நீடித்த சமாதானத்தை நோக்கிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முனையலாம் என்பது இவர்களின் நப்பாசையாக இருந்தது.

பொதுவாக எதிரி தாக்கிக் கொண்டிருக்கும்போது அரச-படைகளால் யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ள முடியாது. ஆனால் எதிரியே யுத்த நிறுத்தத்தை முன்வந்து மேற்கொள்ளும் போது அரசாங்கத்துக்கு யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வது இலகுவாக அமைகிறது.

இத்தகைய யுத்த நிறுத்தமானது தனது குடிமக்களான பொதுமக்களைப் பராமரிப்பதற்கான வசதியான சந்தர்ப்பமாக அரசாங்கத்துக்குக் கிடைக்கிறது.

யுத்தத்தில் எதிரியுடன் மோதலிலீடுபடும் அரசாங்கத்துக்கு அம்மோதலில் பாதிக்கப்படும் பொதுமக்களைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் கூடப் பொறுப்புள்ள கடைமைதான்.

அதற்கான சந்தர்ப்பங்களை வீணாக்குவதென்பது பொறுப்பற்ற தனமாக ஆகிவிடும்.

புலிகள் விடுத்த ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்புக்கு அரசாங்க தரப்பிலிருந்து தெளிவான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

பிரதமர் வெளியிட்ட கருத்தானது. தடுமாற்றமானதாக இருந்தது.

இரண்டு கைகள் மோதினால்தான் ஓசை எழும். ஒருகை மட்டும் ஓசையை எழுப்ப முடியாது. ஒரு தரப்பு யுத்தத்துக்கு வராவிட்டால் மற்றய தரப்பு மட்டும் யுத்தம் புரிய முடியாது, என்று பிரதமர் தெரிவித்த கருத்தில் முடிவான ஒரு பதில் இருக்கவில்லை.

ஏதோ வேற்று நாடொன்றில் நிகழும் யுத்தத்தில் அபிப்பிராயம் கூறுவதுபோலவே அது அமைந்திருந்தது.

தாம் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெளிவாகத் தெரிவிப்பதாக அது இல்லை.

புலிகள் யுத்த நிறுத்தம் செய்ததை, எவ்வாறு வியாக்கியானப் படுத்துவது என்று புரியாத மலைப்பு அதில் தென்பட்டது.

அதை பௌத்த சிங்கள இனவாதத்துக்கு தமது அரசின் இராணுவ நடவடிக்கைகளின் வெற்றியாக வெளிக்காட்டி, அவர்களிடம் மெச்சுதல் பெறும் குறுகிய கால இலாபமாக்கிக் கொள்ளும் முனைப்பே அதில் தென்பட்டது.

எதிரி போர்க்களத்துக்கு வராவிட்டால் எப்படி நாம் போரிடுவது என்று கேட்பதில் தொனிக்கும் மமதையில், நாம் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டியேற்படும் என்று தெரிவிப்பதைவிட, 'சண்டையில் தோற்றவன் ஓடி ஒழிந்தால் நாம் எப்படிச் சண்டையை நடத்துவது என்று கேட்கும் எக்காளத்தனமே மிகைப்பட்டு நின்றது.

அதேவேளை சண்டையை நிறுத்தும் நோக்கம் தமக்கு உள்ளதா இல்லையா என்பது பற்றி முடிவற்ற கருத்தே தெரிந்தது.

அதேவேளை அரசாங்கத்தின் ஏனைய அமைச்சர்கள் விதம் விதமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

ஊடகத்துறை அமைச்சர் புலிகளின் இந்த ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை சாதகமானதாக வரவேற்றிருக்க, பிரதிப் பாதுகாப்பமைச்சர் யுத்த நிறுத்தத்தை நிராகரிப்பவராகக் கருத்து வெளிப்படுத்தியிருந்தார்.

இது குறித்து ஜனாதிபதியிடமிருந்து எந்தச் செய்தியும் வெளிவரவில்லை.

எவ்வாறாயினும் இறுதியாக அரசாங்கம் இந்த யுத்த நிறுத்தத்தை நிராகரிப்பதென முடிவெடுத்து அறிவித்திருந்தது.

அந்த அறிவிப்பானது ஜனாதிபதியின் சம்மதத்துடனான பிரதமர், வெளிநாட்டமைச்சர் ஆகியோரின் கூட்டறிவிப்பாக வெளியானது.

இப்படி ஒரு சிறிய விடயத்துக்கு, அதாவது யுத்தநிறுத்தம் பற்றிய அறிவித்தலொன்றுக்கு ஒரு கூட்டறிக்கைபோல இவ் அறிவிப்பை விடுவது ஒரு புறம் வேடிக்கையாகவும் மறுபுறம் அரசாங்கத்துக்குள் நிலவும் குழப்பகரமான சிந்தனையின் வெளிப்பாடாகவுமே புலப்படுகிறது.

இரண்டு கட்சிகள், இரண்டு தலைவர்கள், இரண்டு நாடுகள், என்பன கூட்டறிக்கை விடுவது சாதாரணமானது.

ஆனால் அரசாங்கத்தின் அறிவித்தலொன்றை அதே அரசாங்கத்தின் இரு அமைச்சர்கள் கூட்டாக வெளியிடுவது, அதற்கு ஜனாதிபதி வேறாக அங்கீகரிப்பதென்பன விநோதமான நடைமுறை.

எவ்வாறாயினும், இந்த அறிவிப்பே அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று ஆகிவிட்டது.

அவ்வறிவிப்பில் தாம் யுத்த நிறுத்தத்துக்கு முன்வரப் போவதில்லையென்றும், ஆயினும் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு அத்தினங்களில் மட்டும் யுத்த நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதாகவும், பேச்சுவார்த்தைக்குத் தாம் சம்மதித்துள்ளதற்கமைய யுத்த நிறுத்தமின்றியே பேச்சுவார்த்தையை நடத்தலாமெனவும் தெரிவித்துள்ளது.

இவ்வறித்தல் குறித்து தெளிவாய் ஆராய்ந்தால் அதில் அரசாங்கத்தின் பல தர்மசங்கடங்களைப் புரிந்து கொள்ளலாம்.

புலிகளின் இந்த ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்த அறிவித்தலானது அவர்களின் இராணுவ பலஹீனத்தின் வெளிப்பாடாகவன்றி புத்தி பூர்வமான ஒரு இராஜதந்திர நகர்வாகவே அமைந்துள்ளது.

இதில் தொழிற்பட்ட இராஜதந்திரமே அரசாங்கத்தை இதுதொடர்பான நிலைப்பாட்டை எடுப்பதிலும், அதுகுறித்து அறிவிப்பதிலும் ஒரு தடுமாற்றடைய வைத்துள்ளது.

அதாவது, யுத்த நிறுத்தம் செய்வது என்பதைவிட எப்போது யுத்தம் புரிவது என்பதைத் தாமே தேர்ந்தெடுப்பதே இராணுவ ரீதியில் புலிகளுக்கு அவசியமானது.

அதாவது தமக்குச் சாதகமான நேரத்தில் யுத்தம் புரிவது. அவசியமற்ற நேரத்தில் யுத்தத்தைத் நிறுத்திக் கொள்வது என்பது ஒரு கெரில்லாத் தந்திரம்.

புலிகள் இப்போது ஒரு வரன்முறையான படைக்குரிய குணாம்சங்களைக் கொண்டிருந்தாலும்கூட கெரிலாக்களுக்குரிய தந்திரோபாயங்களையும் பயன்படுத்தியே தமது இராணுவச் செயற்பாடுகளில் முன்னேறுவார்கள்.

அவர்கள் கெரிலாக்களாகவும், அதேவேளை ஒரு வரன்முறையான படையாகவும் ஒரு நிலையிலிருந்து ஒரு நிலைக்கு விரும்பிய போது மாறிக்கொள்ளும் சௌகரியத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை யுத்தத்தை எப்போதும் புரியலாம். இப்போதுதான் புரிய வேண்டுமென்ற அவசரமோ அவசியமோ இல்லை.

ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை எப்போதும் யுத்தத்தைப் புரிந்து கொண்டிருக்க வேண்டிய நிலை.

எதிரி ஒய்ந்திருந்தால் என்ன செயற்பாட்டில் இருந்தால் என்ன அவர்கள் தொடர்ந்து செயற்பாட்டில் தான் இருக்க வேண்டும் இது இராணுவ நியதி.

ஏனெனில் அவர்களின் கடமை எதிரிதாக்கும்போது தற்காத்துக் கொள்வதல்ல.

எதிரி தாக்காதவாறு தம்மைத் தற்காத்துக் கொள்வதும் கூடவென்றாலும் அதுமட்டுமல்ல,

எதிரியைத் தேடிச் சென்று தாக்கியழிப்பதும்தான். அத்தோடல்லாமல் எதிரி மீளவும் உருவாகாமல் அந்த அழிப்பை நிரந்தரமாக்குவதுவரை தொடர்ச்சியானது.

ஆனால் இங்கோ, அவையெல்லாம் எட்டாக் கற்பனையாக இருந்தாலும் எதிரியிடமிருந்து தற்காத்துக் கொள்ளும் அளவுக்காகவது எதிரியை எட்ட வைத்திருப்பதற்கான யுத்தத்தையாவது நடத்தியாகவேண்டிய கட்டாயத்தில் இராணுவம் உள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இராணுவம், தற்போதுதான் ஒருவாறு உயிரைக் காப்பாற்றிக் கொண்ட நிம்மதியை அடைந்துள்ளது.

ஆனையிறவு இராணுவ முகாம் சங்காரமாக்கப்பட்ட தொடர்விளைவில் தம்மைத் தக்க வைக்க திக்கு முக்காடிய இராணுவம் சந்திரிகா அரசின் இராஜதந்திர உறவுகளில் கைத்துணையால் ஒருவாறு இறுதிக் கட்டத்தில் தன்னைத் தற்காத்துக் கொண்டது.

ஆயினும் அந்த அபாய நிலைமையின் அனுபவத்தைக் கொண்டு அவ் அபாயம் திரும்பவும் எப்போதாவது தோன்றக்கூடுமென்பதில் இராணுவம் விழிப்பாக உள்ளது.

அவ்வாறு யாழ்ப்பாணம் புலிகளின் கையில் விழுவதை இந்தியாவும் விரும்பவில்லையென்பதை அது யாழ்ப்பாணத்தைப் பாதுகாக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு கொடுத்துவரும் படிப்படியான இராணுவ உதவிகளும் ஒத்தாசைகளும் எடுத்துக் காட்டுகின்றனர்.

இத்தகைய உதவிகளும் வசதி வாய்ப்புகளும் இருக்கும் நேரத்திலேயே யாழ்ப்பாணத்தை தமக்குப் பாதுகாப்பானதாக ஆக்கிக் கொள்வதே இராணுவத்தின் நோக்கமாக உள்ளது.

அதேவேளை இராணுவம் ஈட்டிக் கொண்ட பல்குழல் எறிகணைகளும் ஒலியை மிஞ்சிய அதிவேக யுத்த விமானங்களும், நவீன கடற்படைக் கப்பல்களும் புலிகளை யாழ் நகரை அண்மித்த அவர்களின் நிலைகளிலிருந்து பின்வாங்கவைக்கக்கூடிய சக்திமிக்கவையாக அமைந்துள்ளன.

இராணுவ உபகரனங்களின் இந்த வளர்ச்சி நிலையை ஈடுகட்டக்கூடிய தன்மையைப் புலிகள் ஈட்டுவதற்கு முன்னதாக அவர்களை யாழ்க்குடாநாட்டிலிருந்து பின்வாங்க வைத்துவிடவேண்டுமென்ற அவசரம் இராணுவத்துக்கு உள்ளது.

குறிப்பாக, புலிகள் யாழ்நகருக்கு அண்மைவரை நெருங்கிவந்துவிட்டதன் அபாயம் புலிகளின் நெடுந்தூர ஆட்லெறி சுடுகலன்கள் பலாலி விமான நிலையம்வரை எட்டிவிடக் கூடும் என்ற அச்சத்தை இராணுவத்துக்கு ஏற்படுத்தியிருந்தது.

புலிகளின் ஒருசில ஷெல்கள் பலாலி விமானத்தளத்தை எட்டியதாகவும் அறியக் கிடைத்தது.

இந்த அபாயத்திலிருந்து மீள யாழ் இராணுவத்துக்கு உள்ள ஒரே வழி புலிகளை பின்னோக்கித் தள்ளும் ஒரு இராணுவ நகர்வில் இறங்குவதுதான்.

புலிகளைப் பொறுத்தவரை ஆனையிறவு முகாம் தாக்குதல் போன்ற ஒரு தாக்குதலுக்கு உருவாக்கப்பட்ட படையணியை ஒரேயடியாகக் கைப்பற்றிய பிரதேசத்தில் தேக்கி வைத்திருப்பது அனாவசியமும் ஆபத்தும் கூட.

மீண்டும் ஒரு வினைத்திறன்மிக்க பாரிய தாக்குதல் திட்டத்துக்கு பயன்படுத்தக்கூடிய சக்தியை பரந்த ஒரு பிரதேசத்தில் நிலப்பரப்பில் சகட்டுமேனிக்காக தாக்குதலுக்கு ஆளாவது அர்த்த மற்றது.

இந்நிலை யாழ்ப்பாணத்தைப்பொறுத்தவரை புலிகளின் தந்திரோபாயம் ஊடுருவல் அணிகளை புகுத்துவதே.

இவ்வுடுருவல் அணிகள் இராணுவம் முன்னேறும் போது சிறிய எதிர்பார்ப்புகளுடன் பின்வாங்குவதும், பின்னர் இராணுவம் ஒய்ந்திருக்கும் போது மீண்டும் ஊடுருவுவதுமாகவும் இருக்கும்.

இது இராணுவத்துக்குத் தொல்லை கொடுக்கும் செயற்பாடாகவே தெடர்ந்து இருக்கும்.

அத்தோடு இராணுவத்தின் உசார் நிலையும் பலமும் மலிவடையும் போது எந்நேரம் ஒரு தாக்குதலை நடத்த வழிவகுப்பதாகவும் இருக்கும்.

எனவே இராணுவத்துக்கு இத்தொல்லை இருக்கும் வரை பதட்டம் தான்.

அதனால் அது இவ் ஊடுருவல் அணிகளை இயன்றவரை பின்னால் தள்ளி, அவற்றை எல்லைப்படுத்தி மீண்டும் ஆனையிறவு இராணுவ முகாம் போன்ற ஒரு முகாமை அமைப்பதுதான் யாழ்ப்பாணத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு இராணுவ அரணாக இராணுவத்துக்கு அமையும்.

அந்த இலக்கை வைத்துக்கொண்டு, (ஆனால் இராணுவ முகாம் அமைக்கும் எண்ணத்தை வெளிக்காட்டிக்கொள்ளாமல்) இப்போது ஒரு முனைப்பான இராணுவ நடவடிக்கையில் யாழ்ப்பாண இராணுவம் குதித்துள்ளது.

இதனை இடைநடுவில் கைவிடுவதானது யாழ்ப்பான இராணுவத்தைப் பொறுத்தவரையில் வேலி அடைக்காது தோட்டத்தைக் காவல் காப்பது போன்றது.

எனவே புலிகள் முன்வந்துள்ள யுத்த நிறுத்ததிட்டம் யாழ்ப்பாண இராணுவத்துக்கு அபாயத்தை விட்டுவைப்பது போலாகிவிடும்.

யுத்தம் நிகழாதிருப்பதானது புலிகளின் ஊடுருவல் அணிகளுக்கு வாய்ப்பானதாகிவிடும்.

இதனை முன்னிட்டுத்தான் இராணுவம் யுத்த நிறுத்தத்தை கடுமையாக எதிர்க்கிறது.

ஆனால் புலிகள் வெறுமனே இராணுவரீதியில் மட்டும் இந்த இராஜதந்திர நகர்வை மேற்கொள்ளவில்லை.

அரசியல் ரீதியிலும்தான் அவர்களது நகர்வு அமைந்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நிகழ்காலத்தைப் பயன் படுத்தி புலிகள் யுத்த நிறுத்த கோரிக்கையை முன்வைத்தார்கள்.

இதன் மூலம் புலிகள் வன்முறையில் நாட்டங்கொண்ட பயங்கரவாதிகள் என்ற கருத்தை முறியடித்து சமாதானத்தில் நாட்டங் கொண்டவர்களாகவும் பகைமையற்ற சூழ்நிலையை உருவாக்க விழைபவர்களாகவும் தம்மை வெளிக்காட்டிக்கொண்டார்கள்.

அதேவேளை அரசாங்கத்தை யுத்தப்பிரியர்களாகவும் சமாதான நாட்டம் அற்றவர்களாகவும் வைத்துள்ளார்கள்.

இதனால் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளை சமாளிப்பதற்கு இலங்கை பெருத்த சிரமப்பட வேண்டியிருந்தது.

அத்தோடு புலிகளின் இந்தக் கோரிக்கைகளுக்கும் ஏனைய தமிழ்க்கட்சிகள் மட்டுமல்ல, இலங்கையின் எதிர்க்கட்சியும் கூட துணைபோக வைக்கிறது.

இலங்கை ஒருவாறு உதவிவழங்கும் நாடுகளை சமாதானப்படுத்தி உதவிக்கான உத்தரவாதங்களை பெற்றுக் கொண்டாலும் பலத்தகேள்விகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

தாம்சமாதானத்துக்கு தயாரென்று உடன்படவைத்துள்ளது. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்குவதற்கான உத்தரவாதத்தை வழங்கவேண்டி ஏற்பட்டது.

உதவிகள் கிடைத்தாலும் இலங்கையின் சமாதான நாட்டத்தின் ஒரு சந்தேகக் கண்ணை உதவி வழங்கும் நாடுகள் மத்தியில் ஏற்படுத்தி வைத்துள்ளது.

இந்த உதவிகளும் கூட யுத்தத்தின் பாதிப்புக்குள்ளான புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், வறுமை ஒழிப்பு, கல்வி மேம்பாடு ஆகிய விடயங்களை மையமாக வைத்தே வழங்கப்படு வதற்கு இணங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்தக் கண்டத்திலிருந்து மீண்டுவிட்டாலும் புலிகள் விட்டுவிடவில்லை.

இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குத் தயாரெனக்கூறி ஆனால் யுத்தத்தின் மத்தியில் தான் பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாட்டை முன்வைத்திருந்தது.

இதனைச் சரிக்கும் முகமாக புலிகள் தாமே முன்வந்து ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்தார்கள்.

இந்த அறிவிப்பு கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தில் விடப்பட்டமை என்பது மற்றுமொரு தகுந்த உத்தியாக அமைந்தது.

மேற்குலகைப்பொறுத்தவரை கிறிஸ்துமஸ் பண்டிகைமிகப்பிரதானமானதும் மதிப்புக்குரியதுமாகும்.

இந்நாட்களில் சாந்திசமாதானம் மகிழ்ச்சி, நிலவவேண்டும் என்பதில் அவர்களுக்கு இரண்டுபட்ட கருத்துக் கிடையாது.

அப்படியான ஒரு தருணத்தில் இலங்கை இதை மறுக்குமானால் அது அநாகரிகமான முரட்டுத்தனமான சுபாவமாகவே வெளியுலகுக்குப்புலப்படும்.

இந்த வகையில் புலிகளால் தெரிவிக்கப்பட்ட ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தம் என்ற இராஜதந்திர நகர்வானது இலங்கையைத் தடுமாறவைத்து விட்டது. எனினும் ஒருவாறு இலங்கை இவ்யுத்தநிறுத்தத்தை நிராகரிப்பது என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

ஆனால் நீண்ட காலம் இந்த நிலையில் இலங்கை இருக்க முடியும் என்பது சந்தேகத்துக்கு இடமானது.

ஏனெனில் சர்வதேச அழுத்தங்களுக்கு அது உள்ளாக நேரிடும்.

இதேவேளை புலிகள் இலங்கையின் இந்த அறிவிப்பை அடுத்து அடுத்து நெருக்குதலையும் மேற்கொண்டுள்ளார்கள்.

அதாவது இலங்கையை யுத்த நிறுத்தத்திற்கு இணங்க வைக்க சர்வதேச நாடுகள் நிர்ப்பந்தம் நிறுத்தவேண்டுமெனக் கோரிக்கை விட்டுள்ளார்கள்.

வழமையாக இலங்கை ஒரு இனவாத நாடு, அதனோடு சமாதானப்பேச்சு சரிவராது என்று கூறி தமது யுத்தத்தை நியாயப்படுத்துகின்ற புலிகள் தற்போது, தலைகீழாக மாறி இலங்கையை யுத்தநிறுத்தத்துக்கும் பேச்சுவார்த்தைக்கும் வரும்படி கோருவதுடன் சர்வதேச நாடுகளையும் அதுகுறித்து வற்புறுத்தும்படி வேண்டுவது மாறுபட்ட ஒரு தந்திரோபாயமாக அமைந்துள்ளது.

இந்திய அமைதிப்படையுடனான யுத்தத்தின் போதும் இலங்கை அரசாங்கத்துடன் கூட்டுச்சேருகின்ற மாறுபட்ட தந்திரோபாயம் புலிகளால் பிரயோகிக்கப்பட்டது.

இத்தகைய மிக நெளிவு சுழிவுகளுடன் கூடிய உயர்ந்த கட்ட இராஜதந்திர தளத்தில் செயற்படுகின்ற புலிகளை இலங்கை அரசு எவ்வாறு சமாளிக்கப்போகிறது என்பதே கேள்வி.

எவ்வாறாயினும் பேச்சுவார்த்தை என்பது இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது.

அதற்கான நுழைவாயிலாக புலிகள் குறிப்பிடும் யுத்த நிறுத்தமென்பதுகூட இன்னும் ஈட்டப்படக்கூடியதாக ஆகவில்லை.

அவ்வாறான யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் ஏற்பட்டாலும்கூட அவை சமாதானத்தை நிலை நாட்டுவதற்கானதாகவா அல்லது போரை நியாயப்படுத்துவதற்கானதாகவா இருதரப்பாலும் பயன்படுத்தப்படும் என்பது சந்தேகத்துக்கிடமானது.

**நரன்**

# செய்திச் சிதறல்

✪ **யா**ழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியிலுள்ள மிருசுவிலில் அப்பாவிப் பொதுமக்கள் எட்டுப் பேரின் சடலங்கள்- சிலதலைகள் துண்டிக்கப்பட்டும், சிதையுற்ற நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கிறிஸ்மஸ் தினமான திங்கட்கிழமையன்று பகல் அங்குள்ள குடியேற்றத் திட்டத்தின் ஒரு குழியில் கிடந்த இச்சடலங்கள் மீட்கப்பட்டன. அண்மையில் இப்பகுதியில் இடம்பெற்ற மோதல்களைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறிய மக்களிற் சிலர் தங்களுடைய வீடுகளைப் பார்க்கச் சென்ற போதே துயரமிக்க இக் காட்சியைக் கண்டுள்ளனர். இவ்வாறு கொல்லப்பட்டுள்ளவர்களுள் ஐந்து வயதுச் சிறுவனுடைய சடலமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த 19ம் திகதியன்று படையினரின் அனுமதியுடன் தங்கள் வீடுகளைச் சென்று பார்க்கப் போனவர்களில் 9 பேர் காணாமற் போயிருந்தனர். இவர்களிலொருவர் மட்டும் தப்பிச் சென்று, காணாமற் போன எட்டுப் பேரும் படையினரால் தாக்கப்பட்டு கொலை செய்யப்படுவதை தான் நேரடியாகப் பார்த்ததாக முறையிட்டதைத் தொடர்ந்தே இச் சடலங்கள் மீட்கப்பட்டன.

✪ **மி**ருசுவிலில் காணாமற் போய் திங்கட்கிழமையன்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளவர்களைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு படையினர் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

✪ **டி**சம்பர் 22ம் திகதியன்று கைதடி, அரியாலைப் பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் பலத்த மோதல் ஏற்பட்டது. படையினர் பல பகுதிகளிலிருந்து முன்னேறியதாகவும் இரண்டு மணி நேரம் வரை எதுவிதமான எதிர்ப்பும் இன்றி முன்னேறி நாவற்குழிப்பாலத்தடியில் வந்து சேர்ந்த போது புலிகளின் பலத்த, எதிர்ப்பைச் சந்தித்தனர். இந்த மோதல்களில் இரு தரப்பினருக்கும் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. 35 படையினர் வரை கொல்லப்பட்டும், 75 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும், பலர் காணாமற் போயுமுள்ளனர். தரைவழித் தாக்குதல்களுடன் கடற்படையினரும், விமானப் படையினரும் இணைந்து தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது. விடுதலைப் புலிகளின் 50 சடலங்கள் வரை படையினர் கைப்பற்றியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

✪ **24ம்** திகதி நள்ளிரவுடன் ஒரு மாத காலத்திற்கு விடுதலைப்புலிகளின் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதனையொட்டி அமைச்சர்கள், அரசியல் வாதிகள், அரசியல் விமர்சகர்கள், பத்திரிகைகள் ஆகிய பலதரப்பிலிருந்தும் சாதக பாதகமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. வெளிநாடுகளைப் பொறுத்தவரையில், விடுதலைப்புலிகளின் ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்த அறிவித்தலை, வெகுவாக வரவேற்றுள்ளன. புலிகளின் அறிவித்தலை ஒரு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, நாட்டின் அமைதியை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தவறக் கூடாது என்று மிக்க மகிழ்ச்சியாகத் தெரிவித்துள்ளனர்.

✪ **வி**டுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தம் 24ம் திகதி நள்ளிரவுடன் ஆரம்பித்ததைத் தொடர்ந்து, அரசாங்கமும் நத்தார் பண்டிகைக்காக ஒரு நாள் போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தது. இதனால் நத்தார் தினத்தன்று எங்குமே மோதல்கள் இடம்பெறவில்லை என்று செய்திகள் கூறுகின்றன. இந்த நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று இந்த நாட்டிலுள்ள சகல இன மக்களும் பிரார்த்திக்கிறார்கள்.

# அண்டை மண்டலத்தில்....

# ஜெயலலிதா விடு தூது

**கானகன்**

'பசி வந்திட பத்தும் பறந்து போகும்' என்பது பழமொழி. நமது இன்றைய அரசியல் தலைவர்கள் பசியே அறியாதவர்கள்தாம், ஆயினும் அவர்களும் தங்கள் அதிகார வேட்டையில் எல்லாவற்றையும் துறக்கிறார்கள். சுய கௌரவம், தன்மானம் இவற்றைப் பற்றி இவர்கள் சிந்திப்பதே இல்லை. சிந்தித்தால் அரசியலில் முன்னேற முடியாதே!

தன்னைக் கடுமையாக விமர்சனம் செய்யும் பத்திரிகையாளர் சோ.ராமசாமியிடம் தற்போது சரணாகதி அடைந்திருக்கும் ஜெயலலிதா, இந்திய அரசியல் வீழ்ச்சிக்கோர் எடுத்துக்காட்டு. குறிப்பிடத்தக்க அளவு இந்த நாட்டு அரசியல்வாதிகள் சீரழியத் தொடங்கியது இந்திரா காந்தி காலத்தில்தான். சமகாலத் தலைவர்களின் முதுகெலும்புகளை முறித்துப் போட்ட சர்வாதிகாரிதான் அவர்.

உட்கட்சி ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்த அவரது நேரடி வழித்தோன்றல் அ.இ.அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா. எம்.ஜி.ஆர் கூட ஏறத்தாழ ஒரு சர்வாதிகாரியாகத்தான் கட்சியினை நடத்தி வந்தார். ஆயினும் அவரிடம் ஒரு மென்மை இருந்தது. கட்சியின் மூத்த தலைவர்களை மதித்து வந்தார்.



ஆனால் ஜெயலலிதாவோ, லூயி மன்னன் கூறியது போல எல்லாம் நானே, நானே கட்சி, நான் வைத்ததே சட்டம், முணுமுணுப்பவர்கள் என் எதிரிகள், என்ற ரீதியில் நடந்து கொள்பவர். தன் கட்சிக்காரர்களின் தன்மானத்தை ஈவு இரக்கமின்றி காவு வாங்கும் அவர், இப்போது தனது சுயகௌரவத்தை காற்றில் பறக்கவிட்டுவிட்டு, அபயக்குரல் எழுப்புகிறார். பாரதீய ஜனதாவின் உறவு வேண்டி சோவின் உதவியை அவர் நாடுகிறார். ஆனால் வாஜ்பேயி மசிவதாகத் தெரியவில்லை, வரலாறு நன்றாகவே பழி வாங்குகிறது. சோ.ராமசாமி வெறும் பத்திரிகையாளர் மட்டுமல்ல, தீவிர பாரதீய ஜனதா ஆதரவாளர். வாஜ்பேயி அரசால் மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டவர். அத்வானிக்கும் ஆர்.எஸ்.எஸ். வட்டாரங்களுக்கும் நெருக்கமானவர்.

சோ முப்பதாண்டு காலமாக தமிழக பத்திரிகை உலகில் தனக்கென்று தனியொரு இடத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கிறார். அவரது நையாண்டிகளும், சவுக்கடி போன்ற விமர்சனங்களும், யாருக்கும் அஞ்சாத அணுகுமுறையும், அவருக்கு அகில இந்திய அளவில் புகழைத் தேடிக் கொடுத்திருக்கின்றன.

அவரை ஒரு பிராமணர், பிற்போக்குவாதி, சனாதனி என்று இடதுசாரிகள் இகழ்ந்தாலும் கூட, ஒருவித நேர்மையினை அவரிடம் காணலாம். எந்த நிகழ்ச்சியினையும், எந்தத் தலைவரையும் அவர் சுயலாபத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளமாட்டார்.

ஆர்.எஸ்.எஸ். அபிமானி என்றாலும் கூட பாபர் மசூதி இடிப்பைக் கடுமையாக் கண்டனம் செய்தவர். அந்த வார துக்ளக் இதழ் அட்டை வழக்கமான கார்ட்டூன்கள் இல்லாது வெறும் கறுப்பாக வெளிவந்தது.

70களில் கருணாநிதி ஆட்சியின் யதேச்சாதிகாரமும், லஞ்சமும், அத்துமீறலும் தலைவிரித்தாடியபோது, முதல்முதலில் எதிர்ப்புக் குரல் கொடுத்தார் சோ. பின்னர் எம்.ஜி. ஆரை ஆதரித்து அவரது ஆலோசகரானார். ஆனாலும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், எம்.ஜி. ஆரையும் அவர் தயங்காது விமர்சிக்கத் தொடங்கினார்.

சோ மிகமோசமான பிற்போக்குவாதி என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர் நடுத்தர வர்க்கத்தில் ஒரு கணிசமான பகுதியினரின் நம்பிக்கையினை பெற்றிருக்கிறார். ஒரு கட்டத்தில் ஜெயலலிதாவிற்கும் ஆலோசகராயிருந்திருக்கிறார். 1991ல் ராஜீவ் படுகொலைக்குப் பிறகு ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பின்னர், மெல்ல மெல்ல சோ ஜெயலலிதா உறவு முறிய, மற்றவர்களைவிட மிகக் கடுமையாக அ.இ.அ.தி.மு.க. அரசை தாக்கத் தொடங்கினார் சோ.

ஏறத்தாழ ஏழெட்டாண்டுகள் சோவின் கடுமையான கணைகளை எதிர்கொண்டு வந்த ஜெயலலிதா, இப்போது எல்லாவற்றையும் மறந்து அவரை சந்தித்துப் பேசியிருக்கிறார். மூன்று முறை. இரண்டு முறை சோ போயஸ் தோட்டத்திற்குச் சென்றிருக்கிறார். கடைசி முறை ஜெயலலிதா துக்ளக் அலுவலகத்திற்கே சென்று சோவை சந்தித்திருக்கிறார். கடந்த வார சந்திப்பு அது.

பத்திரிகைகள் பரபரப்பான பல்வேறு ஊகங்கள். இதுவரை இருவருமே சந்திப்பு ஏன் நிகழ்ந்தது, என்ன அவர்கள் விவாதித்தார்கள் என்பது பற்றி எந்த வித விளக்கத்தினையும் தரவில்லை.

ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. ஜெயலலிதாதான் சோவின் உதவியை நாடுகிறார், அந்த உதவியைப் பெற என்ன விலையினையும் அவர் கொடுக்கத் தயாராக இருக்கிறார். தன்னை எதிர்ப்பவர்களை துச்சமாக மதிக்கும் ஜெயலலிதா, ராஜீவ் காந்தி உட்பட எந்தத் தலைவரும் தன்னை தனது இல்லத்தில் வந்து சந்திக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் அவர், சோ மாதிரியான அரசியல் அந்தஸ்து அதிகமில்லாத ஒரு நபரை, அதுவும் அவரது அலுவலகத்திற்கே சென்று, சந்திக்கிறார் என்றால் அதற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கத்தான் செய்யும், பாரதீய ஜனதாவிற்கு நட்புக்கரம் நீட்டுகிறார் ஜெயலலிதா என்றே பலரும் நம்புகின்றனர்.



முன்னாள் முதல்வர் மிக நெருக்கடியானதொரு காலகட்டத்தில் இருக்கிறார். இரண்டு வழக்குகளில் தண்டனை பெற்றிருக்கிறார். மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி அவரால் இனி ஆறு ஆண்டுகளுக்கு எந்தத் தேர்தலிலும் போட்டியிட முடியாது. அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால்தான் சிறப்பு நீதி மன்றங்களை ஒழித்துக்கட்டலாம். மெல்ல மெல்ல வழக்குகளையெல்லாம் வாபஸ் பெற்றுவிடலாம். அடுத்த தேர்தல் அவரைப் பொறுத்தவரை ஒரு ஜீவமரணப் போராட்டம். வெற்றி பெற யாருடன் வேண்டுமானாலும் அவர் கை கோர்க்கத் தயார். அவரது இன்றைய மனநிலையின் ஒரு பரிமாணமே அவர் பாரதீய ஜனதாவுடன் கூட்டணி வைத்துக் கொள்ள முயல்வது. மத்திய ஆட்சியில் இருக்கும் ஒரு கட்சியுடன் உறவு வைத்துக் கொள்வதன் மூலமாகவே அவரால் நீதிமன்றங்களை மிரட்ட முடியும். மேலும் தமிழகத்தில் பாரதீய ஜனதாவிற்கென்று சொல்லிக்கொள்ளும் அளவு செல்வாக்கு ஏதும் இல்லையாயினும், அது தி.மு.கவை விட்டு விலகுவதே கருணாநிதிக்கு ஒரு பின்னடைவாகக் கருதப்படும். வாஜ்பேயிக்கு பொதுவாக இருக்கும் நற்பெயரையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உறவு புதுப்பிக்கப்படாவிட்டாலும் கூட, குறைந்த பட்சம் ஜெயலலிதாவை தேர்தலில் போட்டியிட அனுமதிக்குமாறு தேர்தல் ஆணையத்தை மறைமுகமாக நிர்ப்பந்திக்கலாம். சோவைப் பொறுத்தவரை அவர் விடுதலைப் புலிகள் மனித குலத்தின் எதிரியென்றும், அவர்களது ஆதரவாளர்களை வளர விடுவது இந்தியாவின் இறையாண்மைக்கு ஆபத்து என்றும், விடுதலைப் புலிகளை கடுமையாக எதிர்ப்பவர்களே உண்மையான தேசபக்தர்களென்றும் நம்புபவர். அத்தகையதொரு நிலைப்பாட்டிற்காகவே வேறு எந்தக் குற்றத்தையும் அவர் மன்னிப்பார். அந்த அளவில் ஜெயலலிதா சோவிற்கு உடன்பாடானவர்தான். வீரப்பன் விஷயத்தில் ஒரேமாதிரிதான் பேசினார்கள்.

தவிரவும் இருவரும் பழைய நண்பர்கள். ஜெயலலிதா மீது தனிப்பாசம், அக்கறை சோவுக்கு உண்டு. விடுதலைப்புலிகள் விஷயத்தில் இருவரும் ஒத்துப்போகிறார்கள். மேலும் ஜெயலலிதாவால் சோவிற்கு இலவச விளம்பரம் வேறு கிடைக்கிறது. எனவே அவர் உதவ முன்வருகிறார் என்பதே பொதுவான கணிப்பு.

பாரதீய ஜனதாவில் ஒரு பிரிவினர் ஜெயலலிதாவுடன் மீண்டும் அணி சேர்வதில் தவறில்லை என்று கருதுவதாகக் கூறப்படுகிறது. காஞ்சி சங்கராச்சாரியார் தனது சிஷ்யர் முரளி மனோகர் ஜோஷி மூலமாக தூது விட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள இந்து முன்னணி போன்ற சங்க பரிவாரத்தினர் தி.மு.க. அரசு இந்துக்களுக்கு விரோதமான அரசு, அது நீக்கப்படவேண்டுமென்று வெளிப்படையாகவே பிரச்சாரம் செய்கின்றனர்.

சமீபகாலமாக பாரதீய ஜனதாவை விமர்சனம் செய்வதை ஜெயலலிதாவும் தவிர்த்து வருகிறார். அயோத்தி பிரச்சனை நாடாளுமன்றத்தில் சூறாவளியைக் கிளப்பியபோது அவர் மௌனம் சாதித்தார் என்பதை நாம் ஏற்கெனவே வாசகர்களுக்கு சொல்லியிருக்கிறோம். கடந்த வாரம் ஒரு செய்தியாளர்கள் சந்திப்பில் ஜெயலலிதா பா.ஜ.க. அணிக்கு தாவும் நோக்கம் ஏதும் இல்லையென்று சாதித்தார். அக்கட்சியைப்பற்றிய தனது மதிப்பீடு ஒன்றும் மாறவில்லை என்றவர், நாடாளுமன்ற வாக்கெடுப்புகளில் அ.இ.அ.தி.மு.க. வாஜ்பேயி அரசிற்கெதிராக வாக்களித்ததையும் சுட்டிக்காட்டினார்.

ஆனால் அப்போது கூட வாஜ்பேயியின் கூற்றுக்களை அவர் கண்டிக்க முன்வரவில்லை. துரதிஷ்டவசமானது, அப்படிச் சொல்லியிருக்க வேண்டாம், பிரச்சனையை இரு மதத்தலைவர்களும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம், பிரதமரே நீதிமன்றத் தீர்ப்பிற்கு கட்டுப்படுவதாகக் கூறியிருக்கிறாரே, இந்த ரீதியில்தான் ஜெயலலிதா பதிலளித்தார். ஒன்று பிரதமரை அவர் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை என்பது தெரிகிறது. இரண்டாவதாக இந்துவக் கொள்கைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்றுக் கொள்ளும் இந்துக்களின் வாக்குகளை இழக்க அவர் தயாராகயில்லை.

முஸ்லிம்களின் வாக்குகள்? அதற்குத்தான் இடதுசாரிக் கட்சிகளின் துணையிருக்கிறதே. எப்படியும் அவர்கள் பா.ஜ.க. இருக்கும் அணிக்கு வாக்களிக்கமாட்டார்கள். பாரதீய ஜனதா, பா.ம.க., ம.தி.மு.க. இவற்றுடன் புதிய அணி அமைந்துவிட்டலோ, முஸ்லிம்கள் வாக்கு தேவைப்படாது.

பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் தொடர்ந்து இரு வேறு குரல்களில் பேசி வருகிறார். ஒரு புறம் கருணாநிதியை சாடுகிறார். வன்னியர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர் என்கிறார். தேர்தல் நேரத்தில் கூட்டணி பற்றி முடிவெடுக்கப்படும் என்கிறார்.

இன்னொரு சமயம், இல்லையில்லை, தேசீய ஜனநாயகக் கூட்டணியிலேயே பா.ம.க. அடுத்த ஆண்டு தேர்தல்கள் வரை நீடிக்கும், பாண்டிச்சேரியில் மட்டும் பா.ம.க. தலைமையிலான அரசு அமைந்தால் போதும் என்கிறார்.

தனிப்பட்ட முறையில் செய்தியாளர்களிடம் பேசும் போது, ராமதாஸ், அவரது மகன் அன்புமணி இருவரும் தி.மு.க. தங்களை மதிப்பதில்லை, அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டு வைப்பது தவிர்க்க இயலாதது என்கிறார்கள்.

வடமாவட்டங்களில் செல்வாக்குடன் இருக்கும் பா.ம.க.வும், தென்மாவட்டங்களில் வலுவாக இருக்கும் அ.இ.அ.தி.மு.க.வும் இணைந்தால் அந்தக் கூட்டணிக்கு நல்ல வெற்றி வாய்ப்பு இருக்கும் என்றே கருதப்படுகிறது.

சமீபத்தில் மாநில புலனாய்வுத்துறை போலீசார் எடுத்த ஒரு கருத்துக்கணிப்பு அ.இ.அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியே வெல்லும் என்று கூறுகிறதாம்.

இந்த பின்னணியில் டாக்டர் ராமதாஸ் பா.ஜ.க.விடம் மீண்டும் அ.இ.அ.தி.மு.க.விடம் கூட்டு சேரலாம் என்று கூறி வருகிறாராம். வை.கோ.வைப் பொறுத்தவரை அவரே வாஜ்பேயியின் பிரதம தளபதி என்பது போல பேசி வருகிறார். நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வை ஆதரித்துப் பேசிய முதல் கூட்டணித் தலைவர் அவர்தான்.

அயோத்தி விஷயத்தில் ராமதாசும் பிரதமரின் கூற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பா.ஜ.க. அணி மாறினால் இவ்விருவரும் கூடவே செல்லத் தயங்கமாட்டார்கள் என்றே நம்பப்படுகிறது.

ஆனால் பாட்டாளி மக்கள் கட்சியினரை ஜெயலலிதா சேர்த்துக் கொண்டால் அங்கே தமிழ் மாநில காங்கிரசோ, இடது சாரிக் கட்சிகளோ இருக்காது.

ஜெயலலிதாவை நினைத்தால் பாவமாகத்தான் இருக்கிறது. எத்தனை விதமான கணக்குகளைப் போட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது. 1996 படு தோல்விக்குப் பிறகு, தன்னை மிகவும் கேவலமாகப் பேசியவர்களோடு கூட்டு சேர்ந்து, இரண்டாண்டுகளில் பிரமிக்கத் தக்க வெற்றி பெற்று, இந்திய அரசின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அளவு வலிமை பெற்றார். ஓராண்டிலேயே எல்லாவற்றையும் தனது மமதையினால் குட்டிச் சுவராக்கிவிட்டு, இப்போது எப்படியாவது மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்று துடிக்கிறார். பலிக்குமா அவரது முயற்சிகள்? அவர் அன்றாடம் தொழும் கடவுளுக்கே விடை தெரிந்திருக்கும். ■

# பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

**~குத்தியன்~**

பூனைக்கு மணிகட்ட ஓடித்திரிந்த எலிகள் பற்றிய பாலபாடம் தான் நினைவிற்கு வருகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என்ற அடிப்படையில் தடை செய்ய வேண்டும் என்ற அரசின் சர்வதேசத்தை நோக்கிய ஓட்டத்தைத் தான் குறிப்பிடுகிறேன்.

விடுதலைப்புலிகள் அமைப்புப்பற்றி குறிப்பிட்டு பிரிட்டிஷ் வெளியுறவு இணை அமைச்சர் பீற்றர் ஹெய்ன் தெரிவித்த கருத்தொன்றை கடுமையாக சாடியுள்ள இலங்கை வெளியுறவு அமைச்சர்,

"எந்தவொரு காரணத்திற்காகவென்றாலும் புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடைசெய்யாவிட்டால், பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் உள்ள உறவில் விரிசல் ஏற்படும்!" என எச்சரித்துள்ளார். அதே வேளை புலிகள் தம்மை பிரித்தானியா தடைசெய்தால் தாம் "எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் ஈடுபடமாட்டோம்!" என இலண்டனில் அறிக்கைவிட்டுள்ளனர்.

ஆக இரண்டு பக்கமும் இடிவாங்குவது பிரிட்டன் தான். 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பது பிரிட்டனுக்கு பொருந்துகின்றது.

தங்கள் நிர்வாக இலகுவிற்காக தனித்தனியே பிரிந்திருந்த கண்டி, கோட்டை, வன்னி, யாழ்ப்பாண இராச்சியங்களை ஒரே அலகாக்கி இலங்கையை ஆண்டவர்கள், பின்னர் சுதந்திரம் வழங்கிய போது, இதைமிட்டு எந்த ஏற்பாடும் செய்யாமல் சும்மா போனதால் வந்த வினைதானே பிரச்சனையாக இன்று இழுபறி நிலையில் தொடர்கிறது?

ஒன்றுபட்டிருந்த பாரதத்தை பாகிஸ்தான்-இந்தியா என இரண்டாகக் கூறு போட்டவர்கள் குட்டித்தீவான இலங்கையின் ஆதி வரலாற்றை அடியோடு மறந்ததால் யானையின் துதிக்கையில் நுளைந்த எறும்பு கொடுக்கும் தொல்லைபோல் புலிகளதும் இலங்கை அரசினதும் நிலை பிரிட்டனுக்கு பெரிய தலைமிடியாகிவிட்டது. 'ஏறச்சொன்னால் எருதிற்கு கோவம் இறங்க சொன்னால் முடவனுக்குக் கோபம்,' என்பது போல் அரசும் புலிகளும் மாறி மாறி தம் நிலைப்பாட்டை நியாயப் படுத்துகையில் பிரித்தானியாவின் நிலை தான் திரிசங்கு நிலையாகிவிட்டது.

"விடுதலைப் புலிகள் அமைப்பு ஐரிஷ் குடியரசு இராணுவம் போன்றது. அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாடுபிரிவதை அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா போன்ற நாடுகள் அங்கீகரிக்காது! ஆனால் தமிழ் மக்களின் சுயநிர்ணய கோட்பாட்டிற்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்கும்" என்று தன்னிலை விளக்கத்தை பிரிட்டிஷ் வெளியுறவு இணை அமைச்சர் வெட்ட வெளிச்சமாக கூறிவிட்டார்.

ஆக பிரிவினை இல்லை; சம உரிமை உண்டு என்பதே சாராம்சம். ஆனால் அரசு அதனை முழுமையாக ஏற்கவில்லை என்பதைத்தான், அரசின் சர்வதேச நாடுகள் நோக்கிய புலித்தடை முயற்சி தெரிவிக்கின்றது.

பேச்சுவார்த்தைக்கு வரமறுத்த புலிகளை, நோர்வே சமாதான ஏற்பாட்டாளரை இரகசியமாக சந்திக்கவைத்து பிரபாகரனிடம் அவர் பெற்றுவந்த உறுதி மொழிகள், 'ஆப்பிழுந்த குரங்கின் நிலை'யை அரசிற்கு ஏற்படுத்தியதாலா இந்த புலித்தடை முயற்சி எனும் பூனைக்கு மணிகட்டும் செயல் என வினவத் தோன்றுகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனையை எப்பொழுதுமே மகாபாரத கதையோடு ஒப்பிட்டுபார்க்க விளைவதுண்டு. ஈழத் தமிழர்கள் தம் அடிப்படை உரிமைகளை மகாபாரதத்தில் பாண்டவர் ஆட்சியில் உரிமைகேட்டு ஐந்து ஊர்கேட்டு, ஐந்து வீடாவது கேட்டு, அதன்பின் குருசேஷத்திர யுத்தத்தை நடத்தியது போல யோசித்து, பின் யாசித்து பண்டா-செல்வா, டட்லி-செல்வா, மாவட்ட சபை மாகாண சபை என பலவழிகளில் முயன்றும் இன்றுவரை அனுமார் வால் போல் நீண்டு கொண்டே போகும். இனப்பிரச்சனையின் அடிப்படைக் கோரிக்கைகள் நிறைவேறாமல் வெறுமனே புலிகளை தடை செய்வதால் மட்டும் தீர்ந்துவிடும் என்பதை எந்த யதார்த்த வாதியும் ஏற்கமாட்டார்கள்.

புலிப்பயங்கரவாதத்திற்கு வித்திட்டதே தீர்க்கப்படாத தமிழ் மக்களின் அபிலாசைகள் தான்.

புலிப் பயங்கரவாதத்தில் தங்கள் நிலை என்பது தமிழர்களின் அபிலாசைகள் தீர்க்கப்படும் வரை நீடிக்கக் கூடிய ஒன்றுதான்.

"நான் தருவதைத்தான் நீ கேட்க வேண்டும். அதை எந்த மறுப்பும் இன்றி ஏற்க வேண்டும்!" என்ற நிலைப்பாட்டை கொண்ட பேரினவாதிகளின் போக்கிற்கு அரசு அடிபணிந்தால் இனப்பிரச்சனை இன்னும் ஒரு தசாப்தத்திற்குமேல் நீடிக்கும். அதை விடுத்து அண்மையில் ஜனாதிபதி பாரிஸ் மாநாட்டிற்கு முன் வெளியிட்ட 'புலிகள் வந்தாலும் வராவிட்டாலும் அடுத்த வருடம் தீர்வுத்திட்டம் நிறைவேற்றப்படும்' என்ற நிலைப்பாடு உறுதியானால், உடனடியாக அரசு செய்யவேண்டியது இனப்பிரச்சனைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதொரு தீர்வுத் திட்டத்தை ஜனநாயக வழிக்கு வந்த மாற்று; தமிழ் கட்சிகளிடம் சமர்ப்பித்து அரசியல் சட்டமூலமாக்குவதுதான்.

அதை விடுத்து புலிகளை தடை செய்யும் நோக்கில் மட்டும் சர்வதேசத்தை நோக்கி பிசியாக ஓடித்திரிந்தால் சகலதும் பிசுபிசுத்துத்தான் போகும்! ■

அலசுவது - இராஜதந்திரி

# புரிந்துணர்வற்ற யுத்த நிறுத்தம்!

ஒருதலைப்பட்சமாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருந்த யுத்த நிறுத்த அறிவிப்பை சந்திரிகா அரசு நிராகரித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா சார்பில் பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை நிராகரித்துள்ளனர்.

இருந்தபோதிலும் இராணுவம் நத்தார் தினத்தை முன்னிட்டு ஒரு நாள் யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டதுடன், நத்தாருக்கு மறுதினம் மீளவும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.

வடக்கு-கிழக்கின் உள்நாட்டு யுத்தத்தைப் பொறுத்தவரை யுத்த நிறுத்த அறிவிப்புக்கள் புதிதானவையில்லை. ஏற்கனவே பலதடவைகள் இராணுவத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே யுத்த நிறுத்தங்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் மிகக் குறுகிய காலம் வரை மட்டுமே அந்த யுத்த நிறுத்தங்கள் நீடித்திருந்தன.

அரசபடைகளையும், தமிழீழ விடுதலைப்



புலிகளையும் எடுத்து நோக்கும் பட்சத்தில் இருதரப்புமே பெருமளவு கனரக ஆயுதங்களுடன் இடையறாது மோதல்களில் குதித்திருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இம்மோதல்களினால் படைத்தரப்புக்கும், புலிகள் தரப்புக்கும் மட்டுமல்ல, அப்பாவிப் பொதுமக்களுக்கும் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே யுத்த நிறுத்தங்கள் ஏற்படும் போதெல்லாம் சமரசமுயற்சிகள் குறித்து நிறையவே எதிர்பார்ப்புக்கள் மக்கள் மத்தியிலிருந்து வெளிவருகின்றன. ஆயினும் இதுவரை காலமும் ஏற்பட்ட யுத்த நிறுத்தங்கள் உரிய பயனைத் தராத நிலையில் யுத்த நிறுத்தங்கள் பற்றி மட்டுமல்ல, சமரச முயற்சிகள் குறித்துக் கூட மக்கள் அவநம்பிக்கை கொண்டோராகவே இருக்கின்றனர்.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கான சமரச முயற்சி நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் இலங்கை இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியம் உதவி வழங்கும் நாடுகளினால் பெரிதும் வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளும், சந்திரிகா அரசாங்கமும் நோர்வேயின் சமரச முயற்சிகள் குறித்து சாதகமான முறையிலேயே தமது நிலைப்பாடுகளை வெளியிட்டுள்ளன. நோர்வே அரச முக்கியஸ்தரான ரேமன்ட் ஜொஹான்சனும் இலங்கை அரச, மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் சமரச முயற்சிகள் குறித்து வெளிப்படுத்தும் சாதகமான போக்கையும் அண்மையில் வரவேற்றிருந்தார்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் நத்தார் பண்டிகையை அண்டியதாக டிசம்பர்மாதம் 21ம் திகதி முதல் புதிய ஆண்டின் ஜனவரி 21ம் திகதி வரை ஒருதலைப் பட்சமான முறையில் யுத்த நிறுத்தமொன்றை அறிவித்திருந்தனர்.

இந்த யுத்த நிறுத்த அறிவிப்புக்குச் சாதகமான முறையில் சந்திரிகா அரசாங்கமும் நடந்து கொள்ளுமென்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் புலிகள் தரப்பின் ஒருமாத காலயுத்தநிறுத்தத்துக்குப் பதிலாக நத்தார் தினத்தில் ஒரு நாள் மட்டுமே அரச தரப்பு யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ள முன்வந்திருந்தது.

வடக்கே கடந்த ஓரிருமாதகாலமாகவே இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்றவருகின்றன. தென்மராட்சிப் பகுதியை முழு அளவில் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் விதத்தில் 'கினிஹிர' என்ற இராணுவ நடவடிக்கை படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விடைபெற்றுச் செல்லும் இந்த ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இலங்கை இராணுவம் பாரிய பின்னடைவை ஆனையிறவுப் பிரதேசத்தில் சந்தித்திருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் 'ஓயாத அலைகள்' தாக்குதலில் ஆனையிறவு இராணுவத் தளம் வீழ்ச்சி கண்டிருந்தது. இதனையடுத்துப் பின்வாங்கிய படையினர் தென்மராட்சியில் நிலைகொள்ள எத்தனித்தனர். ஆயினும் புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்ட கடுந்தாக்குதல் தென்மராட்சியிலும் படையினர் தம்மைச் சுதாகரித்துக் கொள்வதைத் தடுத்திருந்தது.

தென்மராட்சிப் பகுதி தற்போதைய யுத்தச் சூழலில் கேந்திரமுக்கியத்துவம் மிக்கதாகவே இருக்கின்றது. ஆனையிறவுப்பிரதேசம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் தென்மராட்சியையும் பறிகொடுக்கும்பட்சத்தில் யாழ்குடாநாட்டில் இராணுவம் பாரிய நெருக்கடிகளுக்கே முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இதன் காரணமாகவே தென்மராட்சிப் பகுதியில் பொதுமக்களின் சொத்துக்கள், உடமைகள் என்பவற்றைக் கூடப் பொருட்படுத்தாத நிலையில் அப்பகுதியில் தத்தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டும் பொருட்டு படையினரும், புலிகளும் கடும் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இம் மோதல்களில் தென்மராட்சியையும், யாழ்ப்பாண நகரையும் இணைத்திருந்த கைதடிப் பாலமும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தென்மராட்சிப் பிரதேசத்தின் நிலத் தொடர்பு யாழ்ப்பாணத்துடன் துண்டிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் 'கினிஹிர' இராணுவ நடவடிக்கையின் ஏழாவது கட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இத்தருணத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பும் வெளியாகியிருந்தது.

'கினிஹிர' இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு தென்மராட்சியைப் படையினர் கைப்பற்றும் பட்சத்தில், அப்பிரதேசம் ஒரு கேந்திர முக்கியத்துவம் மிக்க இராணுவ மையமாக முழு அளவில் மாற்றியமைக்கப்படுமென்பதையே ஊகிக்க முடிகின்றது.

ஏனெனில் யாழ்குடாநாட்டை வன்னிப் பிரதேசத்தின் பெருநிலப்பகுதியுடன் இணைக்கும் பகுதியாகவே ஆனையிறவு விளங்குகின்றது.

எனவே ஆனையிறவைப் புலிகளிடம் பறிகொடுத்தநிலையில் மேலும் தாக்குதல்கள் ஏற்படுவதைச் சமாளிப்பதற்கு ஆனையிறவுக்கு வடக்கேயிருக்கும் தென்மராட்சிப் பிரதேசத்தைப் படையினர் தமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

வன்னிப்பெருநிலப்பகுதியிலிருந்து புலிகள் கடல் மார்க்கமாகவும், நீரேரிகள் வாயிலாகவும், தரைவழிப் பாதைகள் மூலமாகவும் தென்மராட்சியினுள் நுழைய முடியும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டை அரச படைகள் தமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு, தென்மராட்சியை ஒரு முக்கிய கேந்திரப் பகுதியாகக் கொள்ள வேண்டியதாகின்றது. எனவே தமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் தென்மராட்சியைக் கொண்டு வருவதன் மூலம் ஆனையிறவில் தமக்கு ஏற்பட்ட பின்னடைவை இராணுவத்தினர் ஈடு செய்து கொள்ளமுற்படுவார்கள் என்றே எதிர்பார்க்க முடியும்.

தென்மராட்சியைக் கைப்பற்றுவதற்கான 'கினிஹிர' என்றழைக்கப்படும் யுத்த நடவடிக்கை ஆரம்பமானது முதல் இராணுவத்தரப்புக்கு குறிப்பிடத்தக்களவு சேதம் ஏற்பட்டுள்ளது. இருந்தபோதிலும் தனது முன்னேற்றத்தை முன்னெடுப்பதிலேயே படைத்தரப்பு முனைப்பாக இருந்துவருகின்றது.

இந்நிலையில் புலிகள் அரசியல் ரீதியான பேச்சுக்களை ஆரம்பிப்பதில் தமக்கிருக்கும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாகத் தெரிவித்து ஒருதலைபட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளதையும் அரச தரப்பு நிராகரித்துள்ளமைக்கு தென்மராட்சியில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவநடவடிக்கையே முக்கிய காரணமாக இருக்கின்றதென்பதையே அனுமானிக்க முடிகின்றது.

புலிகள் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளின் பொருட்டு தமது தரப்பிலிருந்து யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிட்டிருக்கலாம். ஆனால் அந்த யுத்த நிறுத்தத்தை ஏற்பதன் மூலம் தென்மராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையில் ஒரு தோய்வோ அல்லது தளர்வோ ஏற்பட்டுவிடலாகாது என்பதையே இராணுவம் எதிர்பார்க்கின்றது. இதன் காரணமாகவே அரசு புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்புக்குப் பதிலளித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசியல் பேச்சுக்கள் முழுமையாக ஆரம்பிக்கப்படாத நிலையில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள முடியாதெனத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சார்பில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் யுத்த நிறுத்தம் குறித்து அரசதரப்பின் நிலைப்பாட்டைத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை, புலிகள் மீதான சந்திரிகா அரசின் சந்தேக உணர்வையும் சுட்டிக்காட்டுவதாகவே இருக்கின்றது.

அலசுவது - இராஜதந்திரி

இதற்கு இருதரப்புமே கடந்த காலங்களில் இடையறாத மோதல்களில் குதித்திருந்தமையும், யுத்த நிறுத்தங்கள் மீறப்பட்டமையுமே முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

எனவே அரசியல் சமரசா முயற்சிகள் தொடர்பாக அரச தரப்பும், புலிகளும் பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலும் பல தடவைகள் யுத்தநிறுத்தங்கள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் அந்த யுத்த நிறுத்தங்கள் தொடர்ந்து நீடிக்குமளவுக்கு ஆட்சியாளர் தரப்பிலும் புலிகள் தரப்பிலும் போதியளவு புரிந்துணர்வோ அல்லது நம்பகத்தன்மையோ நிலவவில்லை.

இரு தரப்புமே ஒன்றிடம் மற்றோன்று ஏமாறிவிடலாகாது என்பதிலேயே அவதானமாக இருந்துவருகின்றன. இதன் காரணமாக ஒரு சிறிய சர்ச்சை தொடர்பாகவும் இரு சராரும் முரண்பாடுகளில் இறங்கி மோதல்களில் குதித்து விடுகின்றனர்.

வடக்கு -கிழக்கு யுத்த வரலாற்றை எடுத்து நோக்கும் பட்சத்தில் மூன்று முக்கிய கட்டங்களில் ஏற்பட்ட யுத்த நிறுத்தங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் 1987ம் ஆண்டு கைச்சாத்தான சமயத்தில் முதல் தடவையாக யுத்த நிறுத்தம் இலங்கைப் படைத்தரப்புக்கும், புலிகள் தரப்புக்குமிடையே ஏற்பட்டது.

ஆனால் அந்த யுத்த நிறுத்தம் முறிவடைந்த நிலையில் இலங்கை-இந்திய ஒப்பந்த அமுலாக்கத்தை மேற்கொள்ள வந்திருந்த இந்தியபடையினர் புலிகளுடன் மோதலில் குதித்தனர். அச்சமயம் இலங்கை அரசதுருப்பினர் புலிகளுடனான நேரடி மோதல்களைத் தவிர்த்திருந்தனர். 1987ம் ஆண்டிலிருந்து 1989ம் ஆண்டுவரை இந்தியப் படையே வடக்கு-கிழக்கில் புலிகளுடன் முழு அளவில் மோதிக்கொண்டது.

இதனையடுத்து ஜனாதிபதியாக ரணசிங்க பிரேமதாச பதவியேற்றதும் இரண்டாவது கட்ட யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. இந்த யுத்தநிறுத்தத்தையடுத்து இலங்கையிலிருந்து இந்தியப்படை வாபஸ் பெற்றுக் கொண்டது.

புலிகளுக்கும் ஜனாதிபதி பிரேமதாச அரசுக்குமிடையே நிலவிய சமரசம் வெற்றியளிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதிலும் கூடத்தோல்வியே ஏற்பட்டதுடன் மீளவும் யுத்தநிறுத்தம் மீறப்பட்டிருந்தது.

இதனையடுத்து ஜனாதிபதி சந்திரிகா அரசு 1994ம் ஆண்டில் பதவிக்கு வந்ததும், புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு யுத்த நிறுத்தமும் அமுலுக்கு வந்தது.


ஆனால் அந்த யுத்த நிறுத்தம் கூட குறுகிய காலமே நீடித்ததுடன் மீளவும் கொடிய யுத்தம் அரச படைகளுக்கும், புலிகளுக்குமிடையே வெடித்திருந்ததையே அவதானிக்கமுடிந்தது.

இவ்வாறு மூன்று முக்கிய கட்டங்களில் சமரச முயற்சிகள் மட்டும் முறிவடையவில்லை. யுத்தநிறுத்தங்களும் தோல்வியையே தழுவியிருந்தன.

இந்நிலையில் புலிகளின் தற்போதைய யுத்த நிறுத்த அறிவிப்பை அரச தரப்பு ஏற்றுக் கொள்ளாமைக்கு, இருதரப்புக்குமிடையே நிலவும் புரிந்துணர்வற்ற போக்கும், சந்தேக மனப்பாங்குமே முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

இக்கட்டத்திலேயே ஒரு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தின் அத்தியாவசியத்தன்மை பெரிதும் தேவைப்படுவதாக இருக்கின்றது.

சமரச முயற்சிகள் மற்றும், யுத்தநிறுத்தங்கள் என்பவை தோல்வியைத் தழுவிய நிலையில் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தமொன்று ஏற்படாத நிலையில், மோதலில் குதித்துள்ளோரிடையே மீளவும்



சமரசத்தைக்கட்டியெழுப்புவது கடினமாதாகவே இருக்கும்.

ஆனால் இலங்கையின் வடக்கு கிழக்கு பிரச்சனைக்குத் தீர்வு காணும் விதத்தில் நோர்வே தற்போது வெளியிட்டுவரும் ஆர்வம் , அரசதரப்புக்கும், புலிகள் தரப்புக்குமிடையே தோன்றக்கூடிய அவநம்பிக்கைகள், பிளவுகள் என்பவற்றை நிவர்த்தி செய்வதாக அமையுமென்றே கருதமுடியும்.

புலிகளது யுத்தநிறுத்த அறிவிப்பை ஏற்க மறுத்து இலங்கைப் பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூட நோர்வே பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நோர்வே சமரச முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நிலையில், அதனூடாக புலிகள் யுத்தநிறுத்தம் பற்றிய தமது அறிவிப்பை வெளியிடவில்லை என்று அரசதரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே நோர்வே மேற்கொள்ளத் தொடங்கியிருக்கும் மத்தியஸ்தத்தின் முக்கியத்துவத்தையும் அரசதரப்பினர் ஏற்றுக் கொண்டுள்ளதன் மூலம் சமரச முயற்சிகளில் நோர்வேயை மையமாகக் கொண்ட மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் எதிர்காலத்தில் உரிய உத்வேகத்தைப் பெறுமென்றே ஊகிக்க முடிகின்றது.

இதன்மூலம் புலிகள் மற்றும் அரசதரப்புக்குமிடையே நிலவக்கூடிய சந்தேகங்கள், அவநம்பிக்கைகள் என்பவை உறைநிலையிலிருந்து உருகும் பட்சத்திலேயே நல்ல பெறுபேறுகளையும் எதிர்பார்க்க முடியும்.

## அதிரடி அய்யாத்துரை



***யுத்தத்தின் சத்தங்கள்*** நத்தார் முதல் ஓயலாம் என்றொரு எதிர்பார்ப்பு எல்லோரையும் சந்தோசப்படுத்துகிறது. ஆனால் யுத்த நிறுத்த அறிவிப்பு எதிரிகளுக்கு மட்டுமே பொருந்தும், துரோகிகளுக்கு அல்லவாம்.

***சமாதானம் எப்படியேனும்*** ஏற்படுத்தப்பட்டு விட வேண்டும் என்பதில் மற்ற எல்லாரையும் விட நீண்ட வெள்ளை உடுப்புப் போட்டவையள் தான் முன்னணியில் நிற்கின்றனர். பற்றுக்களைத் துறந்தவர்களின் சமாதானப் பற்று வெற்றிபெறப் பிரார்த்திப்போம்.

***காந்தமானவரை பாராளுமன்றத்தின்*** இரும்புக் கதிரைகள் கவருவதால் விடுதலை இயக்கத்தினுள் உட்கட்சிப் பூசலாம். மும்மொழிப் பாண்டித்தியம் பெற்ற அப்பு இதை நல்லா யூஸ் பண்ணுறாராம்.

***யாழ்ப்பாணத்தில*** மணிக்கூடுகளின்ரை விலையைக் குறைக்க வேணுமெண்டு விமானத்தில மணிக்கூடு கொண்டு போன வி.ஐ.பிக்கு கெட்ட நேரம் போல. பயணப்பொதி நிறையத் துடிச்சுக் கொண்டிருந்த மணிக்கூடுகளை கொண்டு போக சீருடை மறுப்பு. இது அரசியல் வியாபாரமோ? அல்லது வியாபார அரசியலோ?

***சட்ட நுணுக்கங்கள் தெரிஞ்சவை எண்டு*** சொல்லுகிற கூத்தணி உதயசூரியனாய் உதிக்க இயலாமல் சங்கடப்படுகினமாம். "நாங்கள் யோக்கியர்கள் இல்லை ஆனால் அவையைப் போல அயோக்கியர்கள் இல்லை" என்பதுதான் அவையளுக்கு முன்னுள்ள ஒரே தத்துவமாய் போயிருக்கிறது.

***மடு மாதாவைக் கும்பிடப் போன*** டாக்டரும் அவரது குழாமும் மன்னார் விஜயம் செய்து திரும்ப வேண்டியதாயிற்று. சாமி கும்பிடவும் ஆமி வழி வேணும் எண்டதை அவை இப்பவாவது விளங்கியிருப்பினமோ என்னமோ?

***நாடு பற்றி எரியுது*** இனப்பிரச்சனையால. பேச்சுவார்த்தை-யுத்த நிறுத்தம்-தீர்வுத்திட்டம் எண்டு என்னவெல்லாமோ கதைபடுகுது. ஆனால் பச்சைச் சிக்னல் கிடைக்கிற மாதிரியில்லை. எல்லாம் கப்சிப் இந்த மௌனம் கலகநாஸ்தியா? சம்மதத்தின் அறிகுறியா?

***பாரிசில கேட்டளவுக்கு*** பிச்சை கிடைக்கவில்லை எண்டு ராஜதந்திர வெற்றி கொண்டலாமாம்.

***யாழ்ப்பாணத்துக்கு*** பஸ்சில போகலாமோ? ஐஞ்சு வருசமாய் சேவை இல்லாததால பலபேருக்கு பாதையே மறந்து போச்சாம். காரைநகரில் இருந்து கதிர்காமத்துக்கு காரில போகப் போவதாய் சொன்ன ஈஸ்வரரும் அதை மறந்து போனாராம்.

திகில் தொடர்



**வா**ட்ச்மேன் சம்பூர்ண் சொல்லியதைக் கேட்டு யோகேஷ் அதிர்ந்தான்.

"என்ன சொல்றே ஒல்ட்டு மேன்?" என்றான்.

கிழவன் முகம் பயப்பீதியில் உறைந்து, நாக்கு உலர்ந்து போயிருந்தது.

"இப்போது நீ கண்டதும் கனவு தானா?"

"இல்லா... கனவு இல்லா... ஞான் தீர்ச்சையாக கண்ணைத் திறந்து நோக்கி.. குள்ளமாக ஜீவனுள்ள ஒரு ஜீவனைக் கண்டு. அதை இப்போழ் நினைச்சாலும் என்றே உயிர் நடுங்குது...."

மேற்கொண்டு பேச முடியாத நிலையில் கிழவனுடைய நடுக்கம் அதிகமாகியது.

"நீங்க நடுங்கத் தேவை இல்லை. ரத்னாவை ஆபத்திலிருந்து காத்தவன் நான். உன்னையும், என்னால் காப்பாத்த முடியும். என்ன நம்பு... எதுவாக இருந்தாலும் தைரியமாகப் பேசு."

"பே... பேசுறேன்."

"அந்த குள்ள உருவம் ஆணா? பெண்ணா?" ஒரு துப்பறியும் நிபுணர் போலவே மாறி விட்டான் யோகேஷ்.

இதன் மர்ம முடிச்சுக்களை அவிழ்த்தால், பத்திரிகைகளுக்கு சுவாரசியமான தீனி தர முடியும் என்ற நம்பிக்கை.

ஆனால், இதை போன்ற விவகாரங்களில் மூக்கை நீட்டினால், ஒளிந்து காத்து கொண்டிருக்கும் மரணக்கயிறு குப்ரென்று பறந்து வந்து தன் குரல்வளையை இறுக்கிக் கொள்ளும் என்பதும் அவனுக்கு புரிந்தது.

ஏவல், பில்லி, சூனியம் என்பது சக்தி வாய்ந்த மாந்திரீகர்கள் செய்யும் தீச்செயல்களாகும். அவை மனிதர்களையோ, அவர்களது உடமைகளுக்கோ தீங்கு விளைவிக்காது என்று சொல்ல முடியாது.

ஏவல்களில் எத்தனையோ வகை உண்டு, துஷ்ட தேவதைகளை கட்டுக்குள் கொண்டு வந்து மாந்திரீக சக்தியால் ஏவி விடுவதேயாகும்.

அப்படித்தான் இதுவும் இருக்கக் கூடுமோ? ஏவல், சூனியம் ஆகியவற்றை அலட்சியமாக எடுத்துக் கொள்ள கூடாது.'

"தாத்தா... கமான்... சொல். சரியாக நினைவுபடுத்திக் கொண்டு சொல்லு... அந்த உருவம் எப்படி இருந்தது?"

"பார்க்கிறதுக்கு அது பயங்கரமாக தெரிந்தது. வயசு எத்தனைன்னு மதிக்க முடியாத ஒரு பெண்தான்! மூணு அடிதான் உயரம் இருக்கும். தலைமுடிகள் எண்ணை காணாமல் பரட்டையாக இருந்தது. பின்னால் மட்டும் அருக்காணி போல் பின்னி, மேலே வில்லு போல் தூக்கிவிடப் பட்டிருந்தது. அதில் அலரிப் பூச்சரம் சுற்றப்பட்டிருந்தது.

சிவப்புப் பாவாடையும், ரவிக்கையும் போட்டு நெற்றியில் வட்டமான குங்குமம் அப்பப்பட்டிருந்தது."

கிழவனுக்கு மூச்சு வாங்கியது. பேச 'தம்' பிடிக்க வேண்டியதாக இருந்தது.

"அப்புறம்?"

"கழுத்தில் மாலை போல மனித மண்டை ஓடுகளை போட்டிருப்பதைக் கண்டேன்."

"சரி...."

"அது முழங்கைக்கு கீழே வெட்டி எடுக்கப்பட்டு, பாதி எரிந்த கையை கடித்து சதையை தின்று கொண்டிருந்தது. அந்த இராத்திரியிலும் கண்கள் மினுமினுக்க, வாயில் இரண்டு பற்கள் கத்தி போல் கூர்மையாக நீண்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன்."

"அது எதையோ சொல்லி எச்சரித்ததாக சொன்னாயே... என்ன சொன்னது? ஞாபகப் படுத்திச் சொல். பயப்படாதே!"

யோகேஷ் வற்புறுத்தினான்.

"நான் பார்த்த அந்த உருவம் ஒரு பெண் பிசாசு போலவே இருந்தது. அது என் பக்கமாக வந்து, 'ஏ... கிழவா... காதை கொடுடா,' என்றது இளக்காரமாக.

"அப்போது அதன் உடம்பிலிருந்து சுடுகாட்டுச் சாம்பல் வீச்சம் வந்தது. எரியும் பிரேதத்தின் நொடியும் வந்தது. பேசும் போது கவுச்சி நாற்றம். 'கேளடா... நீ கிழவனாக இருப்பதால் உன் சதையோ, இரத்தமோ எளசாக இருக்காது என்கிறதால உனக்கு உயிர் பிச்சை அளிக்க ஆயானிடம் கேட்கிறேன். ஆனால், நீ ஒரு காரியம் செய்யணும்.' 'எ.. என்ன காரியம், என்று நான் தட்டுத்தடுமாறிக் கொண்டே கேட்டேன்.

அது, என்னை முட்டைக் கண்களைத் துருத்தி கொண்டு பார்த்தது. ஒரு மாதிரியாக கனைத்துக் கொண்டே பேசியது. 'கேள் கிழவா... நீ காவல்காரனாக இருக்கும் மங்கள விலாஸ் மாளிகை எங்க ஆயான் அமைத்திருக்கும் பிசாசுக் கோட்டையாகும். சர்வ பிரேத பைசாசங்களின் வாச பூமியாக்கும். இந்த மங்கள விலாஸ் மட்டும் இல்லை.... சுற்றியிருக்கிற ஒரு கிலோமீட்டர் பரப்பளவு நிலமும், நீரும், ஏரியும் ஆயான் பிரதேசம் தான்! உனக்கு மட்டுமே இங்கே உயிர் வாழ அனுமதி உண்டு. வேறு யார் நடமாடினாலோ, தங்கினாலோ உயிருக்கு உத்திரவாதம் இல்லை. பசி கொண்டு அலையும் ஆவிகள் ஏதோ ஒரு கூட்டில் ஒட்டிக் கொண்டு வந்த உயிரைக் குடித்து விடும்.' இப்படி எச்சரிக்கை செய்த குட்டிப் பிசாசு என்னை துன்புறுத்தாமல் இருட்டோடு போய் கலந்து ஆகாசமார்க்கமாய் காணாமல் போய் விட்டது." என்று முடித்தான் வாட்ச்மேன் சம்பூர்ண்.

கிழவன் சொன்னது நம்பக்கூடியதாக இல்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை.

"ஆயான் என்பது என்ன தாத்தா?"

"கேரளத்தில் பிரதான மாந்திரீகனை ஆயான் என்றே விளிக்கும்"

வாட்ச்மேன் சம்பூர்ண் சொன்னதிலிருந்து சில முக்கியமான விஷயங்களை யூகித்து கொண்டான் யோகேஷ்.

'அதாவது, ஒரு மாந்திரீக கும்பலுக்கு பலகோடி ரூபாய் மதிப்புள்ள நில புலன்களும், பிரம்மாண்டமான மங்கள விலாஸ் மாளிகையும் இலக்காகி இருக்கிறது என்பதுதான் அது!

ஆனால், ஒன்று மட்டும் உறுதி..... ஆயான் என்று அழைக்கப்படும் பிரதான மாந்திரீகனான அவன், யாருக்காகவோ தான் இந்த ஏவல் வேலைகளை செய்திருக்க வேண்டும்.

தன்னிச்சையாக ஒரு மாந்திரீகன் விலைமதிப்பற்ற இத்தகைய சொத்துக்களை முடக்கிப் போடுவதாலோ, கதாநாயக நடிகனைகொன்று, சினிமா படக் கம்பெனியை சீரழிப்பதாலோ எத்தகைய லாபமும் அடைய முடியாது.

இத்தகைய வேலைகளின் பின்னணியில் இருந்து பயன் பெற நினைக்கும் பயனாளி யார்?

ரகசியமாக காத்திருந்து. அவனை கண்டு பிடித்தே ஆக வேண்டும்,' என்று யோகேஷ் முடிவு செய்து கொண்டான்.

தன் மனதில் வேரூன்றிய சந்தேகத்தை களையவும், உண்மைகளை கண்டுபிடித்து படப்பிடிப்பு குழுவினரை காக்கவும் வாட்ச்மேனிடம் சில கேள்விக் கணைகளை தொடுக்கலானான்.

"ஆயான் யார் என்பது தெரியுமா?"

"தெரியாது."

"நரபலி கொடுக்கப்பட்ட இடமாவது தெரியுமா?"

"எனிக்கி எதுவுமே தெரியாது. எல்லாமே சொப்பனம் போலவே இருக்கும்."

"சிவப்பு பாவாடை உடுத்திய பரட்டைத் தலைக்காரி மனித இனமா?"

"அப்படியும் சொல்ல முடியாது. பூமியிலிருந்து ஆகாசத்துக்கு போன போது கொஞ்சம் கொஞ்சமாக சிறியதாகி பின், மறைந்து போனது."

"சரி.... நன்றாக ஞாபகப்படுத்திக் கொண்டு சொல் தாத்தா. குறி சொல்லும் அந்த கருத்த குட்டியை பற்றியது தான் அது.... குறிகாரி.... ஈனாப் பேச்சி...."

யோகேஷ், அந்த பெயரை சொன்னதும் தளர்ந்து போயிருந்த வாட்ச்மேன் கிழவன் உடம்பு பூராவும் புது இரத்தம் பாய்ந்தது போல் புத்துணர்வு பெற்று நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"ஆங்க்.... அங்ஙனே தன்னே... கருப்பி எங்கிற போதிலும் நல்ல சவுந்தர்யம் உண்டு.... அவள் என்னை நே.... நேசிச்சு.... காதல்னு ஞான் பறஞ்சா களியின்னு சிரிக்கருதே.... தம்புடு.... காதலுக்கு வயசில்லா....."

சிரிப்பு வந்த போதிலும் யோகேஷ் அடக்கிக் கொண்டான்.

"அது சரிதான் பெரியவரே.... உமது காதலியை நான் பாக்கணுமே!"

"பார்க்கலாம்.... ஆனால், ஆ பொட்டச்சியோட வீடு எங்கே இருக்குதின்னு தெரியாது. எப்போதாகிலும் வரும்.... குறி கேட்கலியா குறின்னு விளிக்கும்"

கிழவனுக்கு மேற்கொண்டு அவளை பற்றிய எந்த விவரமும் தெரியவில்லை.

"கனவில் ஒரு பெண்ணின் தலையை வெட்டி நரபலி கொடுத்த பயங்கரத்தை பார்த்ததாக சொன்னியே.... அந்த இடம் எப்படி இருந்தது?"

"நானும் பலமுறை யோசிச்சு.... எதுவுமே தெரியல தம்பி.... நீ என்றே மகன் போல...."

"மகனா?"

"இல்லா.... பேரன்... அது கொண்டாண இப்போது ஒரு சங்கதி சொல்றேன். நீ ஜீவிக்கணும். கல்யாணம் கழிச்சு, குழந்தைக் குட்டிகளோட வாழணும்... அது கொண்டு, ஞான்கால் பிடிச்சு கேட்கிறேன். தம்பி... நீ இந்த ஊருக்கு அந்நியன். இந்த வீட்டுப் பக்கமே வராதே.... அம்பராம்பாளையத்தையே மறந்திடு. இங்கே வாசம் செய்கிற பேய்களும், பிசாசுகளும் உன் இரத்தத்தையே குடிச்சு சாகடித்து விடும்..... போய்க்கோ."

கிழவன் இரண்டு கைகளையும் தூக்கிக் கும்பிட்டு வெளியே போகும்படி மன்றாடி கேட்டுக் கொண்டான்.

ஆனால், யோகேஷ், அவனையே பார்த்தபடி, சிந்தனையோடு உட்கார்ந்திருந்தான்.

அப்போது, "அய்யய்யோ" என்ற அலறல் சப்தம் கேட்டது.

திடுக்கிட்டு, தலையை உயர்த்தி வாசல் பக்கமாகப் பார்த்தான் யோகேஷ். வாட்ச்மேனும் தான்!

பட அதிபரின் உதவியாளனான சலாம் சுப்பையா "ஆபத்து....ஆபத்து" என்று பெருங்கூச்சலிட்டபடியே ஓடி வந்தான்

"ஆபத்தா? யாருக்கு?" என்று கேட்டான், யோகேஷ்.

"நடிகை ரத்னாவுக்குத்தான்!" பதறினான் சலாம் சுப்பையா.

(திகில் தொடரும்)




திகில் கதை மன்னன்

பி.டி.சாமி

## கிளின்ரன்-மோனிக்கா பற்றி

## ஹிலாரி எழுதிய புத்தகம்



**கி**ளின்ரன்-மோனிக்கா விவகாரம் உலகையே ஒரு கலக்குக் கலக்கியிருந்தது. பத்திரிகைகளும் மக்களும் போட்டி போட்டுக் கொண்டு கருத்துக்களைக் கூறி வந்தாலும் பதில் கூற வேண்டிய கிளின்ரனின் மனைவி ஹிலாரி தனது கணவரை மன்னித்து விட்டதாகக் கூறி அதிகம் வாய் திறக்காமல் இருந்தார்.

சிறந்த வக்கீல், அமெரிக்காவின் முதல் பெண்மணி போன்ற பதவிகளில் இருந்து வந்த ஹிலாரி, இப்போது நியூயோர்க் செனட் தேர்தலில் வெற்றி பெற்று செனட் உறுப்பினராகவும் இருக்கிறார்.

செனட் உறுப்பினராக இருக்கும் ஹிலாரி ஒரு புத்தகம் எழுதியுள்ளார். என்ன புத்தகம் தெரியுமா? கிளின்ரன்-மோனிக்கா பற்றிய புத்தகம்.

இப்புத்தகத்தை வெளியிடுவதற்கு முன்னரே புத்தக வெளியீட்டு நிறுவனம் 'பெரிய' தொகை ஒன்றை ஹிலாரிக்கு வழங்கி விட்டது.

இப்புத்தகத்தைப் பற்றி ஹிலாரி கூறும் போது,

"மோனிக்கா விஷயத்தில் பலரும் பலவிதமான கருத்துக்களைக் கூறினார்கள். இதில் சம்பந்தப்பட்ட நான் என்ன நினைத்தேன் என்பதைக் கூறுவதற்கு இந்தப் புத்தகம் ஒரு நல்ல வாய்ப்பு.

'கணவனின் தவறை உங்களால் எப்படி ஏற்றுக் கொள்ள முடிகிறது?' என்று பெண்ணீயவாதிகள் பலரும் கேள்வி கேட்டனர். அவர்களுக்கும் சேர்த்து என் புத்தகம் பதில் சொல்லும்" என்று தெரிவித்துள்ளார்.

இப் புத்தகத்திற்கு அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

## ஜப்பான் பெண்களின் சிகரெட் மோகம்



**ஜ**ப்பான் பெண்களிடையே சிகரெட் குடிக்கும் மோகம் முன்பை விடப் பல மடங்கு அதிகரித்துள்ளது.

ஜப்பானில் 1990ல் 4 சதவீதமாக இருந்த 'சிகரெட் பிடிக்கும்' பெண்களின் எண்ணிக்கை 10 வருடத்தில் 13 சதவீதமாக அதிகரித்துள்ளது.

ஜப்பான் பெண்களிடம் ஏற்பட்டுள்ள இந்தத் திடீர் சிகரெட் மோகத்திற்குக் காரணம், வெளிநாட்டு சிகரெட் கம்பனிகளின் வித்தியாசமான விளம்பரங்களும் விளம்பர யுக்திகளும்தான் என்று கூறப்படுகிறது.

சில வெளிநாட்டு சிகரெட் கம்பனிகள் தங்களது வியாபாரத்தைப் பெருக்க ஜப்பானில் உள்ள முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்கள், மகளிர் விடுதிகள் போன்றவற்றிற்கு இலவசமாக ஏராளமான சிகரெட்டுகளை வாரி வழங்குகின்றனர்.

சில கம்பனிகள் வீதிகளில் வருவோர் போவோரிடம் 'நோட்டீஸ்' கொடுப்பது போல் இலவசமாக சிகரெட்டுக்களை வழங்குகின்றனர். இதனால் புகை பிடிக்காதவர்களைக் கூட புகை பிடிக்கத் தூண்டி விடுகின்றனர்.

இங்கு ஒருவருடத்தில் வீதிகளில் விநியோகிக்கப்பட்ட சிகரெட்டுக்களின் எண்ணிக்கை ஒன்றரைக் கோடிக்கும் அதிகம்.

மீனுக்குப் புழுவைக்காட்டி ஏமாற்றுவதுபோல் ஓசியில் சிகரெட் கொடுத்து புகைக்கும் ஆசையை உசுப்பி விட்டிருக்கின்றனர் சிகரெட் நிறுவனத்தினர்.

ஃபிரான்ஸில் 27 சதவீதமான பெண்களும், அமெரிக்காவில் 22 சதவீதமான பெண்களும் ஜப்பானில் 13 சதவீதமான பெண்களும் புகை பிடித்து வருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

## கறுப்பு பர்தாவுக்கு எதிர்ப்பா?

**ஈ**ரான் நாட்டில் பெண்கள் கறுப்பு நிற பர்தா அணிவது வழக்கம். கறுப்பு நிற பர்தா அணிந்தால் பெண்களின் மனதில் மந்தநிலை ஏற்பட்டு தற்கொலை எண்ணம் உருவாகி விடுவதாக அந்நாட்டைச் சேர்ந்த அலி ரெஷா ஆமீர்பூர் என்பவர் தனது ஆய்வின் மூலம் கண்டறிந்திருப்பதாகக் கூறியுள்ளார்.



பெண்களின் மனநிலையைப் பாதிப்படையச் செய்கின்ற கறுப்பு நிற பர்தாவுக்குப் பதிலாக ஊதாநிற பர்தா அணிந்தால் மனதிற்குப் புத்துணர்ச்சி கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர் தனது ஆய்வின் முடிவை ஈரான் அரசாங்கத்திடம் அனுப்பி வைத்துள்ளார். அரசாங்கம் இவரது கருத்தை ஏற்றுக் கொண்டால் ஈரான் பெண்மணிகள் நீல நிறங்களில் வலம் வருவார்கள்.

## தாயை அலங்கரித்த சேய்கள்



**தி**னமும் குழந்தைகளைச் சீவிச் சிங்காரித்து அழகு பார்ப்பது அம்மாமார்கள் தான் இந்த அம்மாக்களை குழந்தைகள் அலங்கரித்தால் எப்படி இருக்கும்?

இப்படி ஓர் எண்ணத்தை அண்மையில் போட்டியாக நடத்தியது ஒரு தனியார் நிறுவனம். இந்தியாவின் சென்னை, ஹைதராபாத் நகரங்களில் இப்படி ஒரு வித்தியாசமான போட்டி நடந்தது.

இந்தப் போட்டியில் 400 குழந்தைகள் கலந்து கொண்டு தமது தாய்மாருக்கு அலங்காரம் செய்தனர். ஒவ்வொரு குழந்தையிடமும் ஒரு தட்டு நிறைய மேக்-அப் பொருட்கள் வழங்கப்பட்டன.

போட்டி தொடங்கியதும் குழந்தைகள் தமது தாய்மாரின் முகங்களில் சாயங்கள், லிப்ஸ்டிக், கண்மை பூசி அழகான அம்மாக்களாக அலங்கரித்தனர்.

சில குழந்தைகள் தங்களது அம்மாக்களின் முகத்தில் சாயங்களையும் கண்மைகளையும் தாறுமாறாகப் போட்டு பார்ப்போரை சிரிக்க வைத்து விட்டன.

சிறப்பாக அலங்காரம் செய்த குழந்தைக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அத்துடன் போட்டிக்கு வந்திருந்த அத்தனை குழந்தைகளுக்கும் சிறப்புப் பரிசுகள் கொடுக்கப்பட்டன.



## தேர்தலின்போது தேம்ஸ் நதியில்

← உலக நாடுகள் எல்லாவற்றாலும் கவனிக்கப்பட்ட அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடுகள் நடத்திமிருப்பதாகப் பல குற்றச்சாட்டுகள். நவம்பர் 7ம் திகதி நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் டிசம்பர் 14ல் தான் ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானித்தது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் மகனும், குடியரசுக் கட்சி வேட்பாளருமான வில்லியம் டபிள்யூ புஷ், அமெரிக்காவின் 43வது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்கத் தேர்தலின் போது, இங்கிலாந்தின் தேம்ஸ் நதியின் மேல் அமெரிக்க ஜனாதிபதிக்குப் போட்டியிட்ட அல்கோர் மற்றும் வில்லியம் புஷ் ஆகியோரது இராட்சத உருவ பலூன்கள் பறக்க விடப்பட்டன.

## ஆயிரங் காலத்துப் பயிர்

↓ 'திருமண வைபவத்தில் ஆடு, மாடுகளை உள்ளே விடமாட்டார்கள். ஏன் தெரியுமா?' என்று கேட்டு 'திருமணம் தான் ஆயிரங்காலத்துப்பயிராயிற்றே. ஆடு, மாடுகள் அதைத் தின்று விடும். அதனால் தான் அவைகளை உள்ளே விடமாட்டார்கள்' என்று சிலரிடம் 'கடி' வாங்கியிருப்பீர்கள் அல்லது 'கடி'த்திருப்பீர்கள்.

சீனாவில் நடைபெறும் திருமணங்களுக்கு ஆடு, மாடுகளை உண்மையிலேயே உள்ளே விடமாட்டார்கள் போல்தான் தெரிகிறது. காரணம் இதுதான்.

சீனாவின் வரலாற்றுச் சின்னமாக விளங்கும் சீனப்பெருஞ் சுவர் அருகில் வருடந்தோறும் ஒரு நாளில் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான திருமணங்கள் நடக்கின்றன.

இத்திருமணத்தில் மணமக்கள் மோதிரம் மாற்றிக் கொண்டதும், தமது வாழ்க்கையும், தாம் வைக்கும் செடி போல வளர வேண்டும் என்று மனதார நினைத்து மரங்களை நாட்டுகின்றனர்.



## பற்ற வைத்துச் சாதனை

தனது தாடி மற்றும் மீசையில் மெழுகுவர்த்திகளைக் கொழுத்தி வைத்து, அவை கீழே விழுந்து விடாமல் எரியச் செய்து சாதனை படைத்துள்ளார் இவர்.

இவரது பெயர்-ராஜேந்திரகுமார். இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள அலஹாபாத்தைச் சேர்ந்த இவர், 30.10.2000 அன்று இச்சாதனையைச் செய்த போது எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இது.

இந்தச் சாதனையைச் செய்ததன் மூலம் ராஜேந்திரகுமார் உலக சாதனைப் புத்தகமான கின்னஸ் புத்தகத்தில் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார்.

(படஉதவி: மோகன்-கிங்கை)





## ஆடார் கொடுத்த அசத்தல் போஸ்


→ குழந்தைகளின் இரசனையே தனி தான். அழகுணர்ச்சிகளை அவதானிப்பதில் அவர்களுக்கு நிகர் அவர்கள்தான்.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் கவுண்டி ஆண்டு விழா வருடம் தவறாமல் நடந்து வருகின்றது. இவ்விழாவில் குழந்தைகளுக்குப் பிடித்தமான அம்சங்களுக்குக் குறைவே இருக்காது.

தொடர்ச்சியாக சில நாட்கள் நடக்கும் இந்த விழாவில் சிறார்களுக்குப் பிடித்தமான விளையாட்டு அம்சங்களுடன் மினி வனவிலங்குக் காட்சியும் கண்டிப்பாக இடம்பெறும்.

வனவிலங்குக் காட்சியில் தனது சொல்லுக்குக் கட்டுப்பட்ட ஆடொன்றை ஃபோட்டோவுக்கு போஸ் கொடுக்க வைக்கிறான் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன்.

கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் கண்களை மூடிக்கொண்டு என்னமாய் ஓர் அசத்தல் போஸ் கொடுக்கிறார் இந்த ஆடார்!



பிரசாந்த்-நேத்ரா ரகுராம்
படம்: மஜ்னு

## சத்யராஜைக் காப்பாற்றிய எ...

சத்யராஜின் 'என்னம்மா கண்ணு' படத்தில் ... பாடலுக்கு மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை கிராபிக்ஸ் ... வைத்தனர்.

இப்போது சத்யராஜ் நடிக்கும் 'லூட்டி' பட... சண்டைபோட்டு சத்யராஜை காப்பாற்றுவது போல் ...

'லூட்டி' படத்தின் கதைப்படி சத்யராஜும் வடிவேலு... மன்றத்தில் சாட்சி சொல்வதற்காக விசுவை அழைத்து... எதிர்ப்படும் பொன்னம்பலமும் விவேக்கும் விசுவைக் கடத்...

சத்யராஜும் வடிவேலுவும் அவர்களைத் தொட... அடி உயரமுள்ள டைனோசர் ஒன்று வாலால் அடித்... கவிழ்க்கிறது.

'யாராவது வந்து எங்களைக் காப்பாற்ற மாட்டா... ராஜ் அலற. 'இதோ நானிருக்கிறேன்' என்று எம்.ஜி.ஆ... வரையும் காப்பாற்றுகிறார்.

எம்.ஜி.ஆர். மற்றும் டைனோசரை கம்ப்யூட்டர் கிரா... மாக்கியுள்ளார்கள்.

சத்யராஜ்-ரோஜா-மும்தாஜ் உட்பட பலர் நடிக்க, ... இப்படம் பொங்கலன்று வெளியாகவுள்ளது.



## ஹொட்டலில் இருந்து விரட்டப்பட்ட நடிகை

திரையுலக மறுபக்கம் (179)

தமிழ்நாட்டிலிருந்து: மயன்

முன்னழகில் மந்த்ராவுக்குப் போட்டி போட்டு வரும் மும்பை நடிகை இவர். இந்த நடிகை அறிமுகமான 'நேரம்' சரியாக அமையாததால் தொடர்ந்து இவருக்குப் படங்கள் வரவில்லை.

தாராளமயக் கொள்கை மற்றும் அனுசரிப்புகள் உபயத்தால் இந்த நடிகைக்கு ஓரிரு படவாய்ப்புகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இருப்பினும் கதைக்கு அவ்வளவு முக்கியமல்லாத துண்டு துக்கடா வேடங்கள் தான்.

'சீமாட்டிகளே சீமான்களே' என்பதை ஆங்கிலத்தில் தலைப்பாக வைத்து தயாராகும் படமொன்றில் இவரும் ஒரு நாயகி. சமீபத்தில் இப்படத்தின் படப்பிடிப்புக்காக மும்பாயிலிருந்து சென்னைக்கு வந்தார் இவர்.

இவருக்கு தமிழ்நாட்டிலுள்ள பிரபல நட்சத்திர ஹொட்டல் ஒன்றில் அறையெடுத்துக் கொடுத்திருந்தனர் படத்தின் தயாரிப்பாளர்கள். முதல் நான்கு நாட்கள் படப்பிடிப்பு. அடுத்த நான்கு நாட்கள் விட்டு மறுபடியும் நான்கு நாட்கள் படப்பிடிப்பு என்று நடிகைக்குக் கூறப்பட்டது.

இது இந்த நடிகை நடிக்கும் இன்னொரு படத்தைத் தயாரிக்கும் நிறுவனத்திற்கு தெரியவந்தது. உடனே அந்நிறுவனம் படப்பிடிப்பு இல்லாத நான்கு நாட்களும் தமது படத்தில் நடிக்குமாறு கேட்டது. நடிகையும் அதற்கு ஒப்புக்கொண்டார்.

படப்பிடிப்பு இல்லாத நான்கு நாட்களுக்கு ஹொட்டல் வாடகையை தான் கொடுப்பதாக ஹொட்டல் நிர்வாகத்திற்கு தெரிவித்தார் நடிகை. ஹொட்டல் நிர்வாகமும் அதற்கு உடன்பட்டது.

ஹொட்டலுக்கு அந்த நான்கு நாட்களுக்கான வாடகையை காசோலையாக கொடுத்தார் நடிகை. திரையுலகப் புள்ளிகள் கொடுக்கும் காசோலைகள் பெரும்பாலும் வங்கிக்குச் சென்று பணமாகாமல் உடனே திரும்பிவிடும்.

நடிகை ஹொட்டல் வாடகையாக கொடுத்த காசோலையும் காசாகாமல் திரும்பி விட்டது.

படப்பிடிப்பை முடித்துக் கொண்டு நள்ளிரவில் ஹொட்டலுக்கு திரும்பிய நடிகையிடம் காசோலை பணமாகாமல் திரும்பிய விபரத்தைக் கூறிய ஹொட்டல் நிர்வாகி உடனே பணத்தைச் செலுத்தும்படி கண்டிப்புடன் கூறினார்.

இந்த நடிகையின் கைவசம் அப்போது பணம் இருக்கவில்லை. இதனால் கோபமடைந்த நிர்வாகி நடிகையுடன் வாக்கு வாதப்பட்டார்.

இதைப் பெரிய அவமானமாக நினைத்த நடிகை தனது உதவியாளர்கள் சகிதம் ஹொட்டல் நிர்வாகியை எச்சரித்துவிட்டு, அந்த நேரத்திலேயே தன்னை அந்த ஹொட்டலில் தங்க வைத்த தயாரிப்பாளரின் வீட்டிற்கு சென்றார். அங்கு சென்ற நடிகை 'இப்படியான ஹொட்டல்களில் எல்லாம் ஏன் தங்க வைக்கிறீர்கள்?' எனக் 'காச் மூச்' என்று கத்திவிட்டு உடனடியாகவே மூட்டை முடிச்சுக்களுடன் மும்பை பறந்து விட்டார்.

## 'பெப்ரவரி 14.. லவ்வர்ஸ் டே.'

பெப்ரவரி மாதம் 14ம் திகதி காதலர் தினம் என்பது தெரியும். இதே பெயரில் தெலுங்குப் படமொன்று தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

படத்தின் தலைப்பைப் பார்த்ததும் ஏதோ காதல் கதையுள்ள படமென்று நினைத்து விடாதீர்கள். இது முழுக்க முழுக்க அக்ஷன் படம்.

இதில் சுமன்-பானுப்பிரியா, அல்போன்ஸா ஆகியோர் நடித்துள்ளனர்.

இசை: விஜய் ஆனந்த், வசனம்: சாந்த குமார், திரைக்கதை-இயக்கம்: சீனு.

## புதுமுகங்கள் நடிக்கும் 'என் மடிசார் மாமி'

கே.சி.கம்பைன்ஸ் என்ற படநிறுவனம் தயாரிக்கும் புதிய படம் 'என் மடிசார் மாமி'.

இப்படத்தில் புதுமுகங்கள் நாயகன்-நாயகியாக நடிக்கிறார்கள். சதீஷ்குமார் நாயகனாகவும், சௌம்யா நாயகியாகவும் நடிக்கிறார்கள்.

இவர்களுடன் பிரதாப் சந்திரன், ஷகீலா, கலா, உஸ்மான் ஆகியோரும் நடிக்கின்றனர்.

சங்கீதராஜன் இசையமைக்கும் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் ஆகிய பொறுப்புக்களை ரோஷன் என்பவர் ஏற்றிருக்கிறார்.



குனால்-கரண்
படம்: பார்வை ஒன்றே போதுமே

## காதோடு சொ...

நாக்கினால் மூக்கைத் தொட்டு நடிக்க ... செய்து கொண்டு வெளிநாடு சென்றா... திரையில் நடித்துக்கொண்டிருக்கிறா... தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறா... படுகிறேன். 'அது' பற்றிக் கவலை ... அதிபர்களுக்குத் தூது அனுப்பி ...

தனக்கு மனேஜராக இருந்... அத்துடன் போலிஸிலும் ... உள்ளே தள்ளியிருந்தார் ... பொண்ணுக்காக ... கிறேன்... அந்தப் பொ... நல்லாயிருக்குமா? ...

தற்போதைய ... நெழுத்து நகைச்... லகரம் ... ஒரு படத்தில் ... தொடர்ந்து ... கோடி ... கிறாராம் ...

...யாக நடி... படத்தில் ... அதன் பின் ... வெங்கட். இப்போது ... நடித்து வருகிறார். சுந்தர்.சி இயக்கும் 'உள்ளம் ... கதாநாயகனாக நடிக்க, கௌரவே...

## ரஜினியின் அ...

ரஜினியின் அடுத்த படத்திற்கு அது... வைச்சல கதை இலாகா மூலம் கதை தயாராகி விட்டது. இயக்குநர், நாயகி ஆகியோரும் முடிவாகி விட்டனர்.

சந்தனக் கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்ட கன்னட ...

நடிகர் ... அறிவிப்பை ... ராஜகுமார் ... ரஜினி பட... ரஜினியின் ...

முகப்பில்: பிரபுதேவா-அஞ்சலா சவேரி, படம்: உள்ளம் கொள்ளை போகுதே

## ...ஜி.ஆர்

## மாதவன்-ஜோதிகா நடிக்கும் 'டும் டும் டும்'

'அலைபாயுதே' வெற்றிப்படத்தைத் தொடர்ந்து மணிரத்னம் தயாரிக்கும் படம் 'டும் டும் டும்' இப்படத்தை மணிரத்னத்திடம் உதவியாளராகப் பணியாற்றிய அழகப் பெருமாள் இயக்குகிறார்.

கார்த்திக் ராஜா இசையமைக்க, ராம்ஜி ஒளிப்பதிவு செய்யும் இப்படத்தில் மாதவன் ஜோதிகா முதல் முறையாக இணைந்து நடிக்கின்றனர்.

இவர்களுடன் வையாபுரி, விவேக், சின்னி ஜெயந்த், வி.கே.ராமசாமி, மணிவண்ணன், கௌதம், ரிச்சா, கல்பனா ஆகியோருடன் பிரபல மலையாள நடிகர் முரளியும் நடிக்கிறார்.

இதன் முதல்கட்டப் படப்பிடிப்பு முடிவடைந்து, இரண்டாவது கட்டப் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது.

## ராஜூ சுந்தரம் நடிக்கும் 'பூ பூவே'

'இது நம்ம ஆளு' படம் உட்பட 25 படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த ராஜ்பிரீத், (கிழக்குக் கரை' படத்தில் வில்லனாக நடித்தவர்) முதன் முறையாகத் தயாரிக்கும் படம் 'பூ பூவே'

நடன இயக்குநரும், பல படங்களில் பாடல் காட்சிகளுக்கு நடமாடியவருமான ராஜூ சுந்தரம் இப்படத்தின் கதாநாயகனாக நடிக்கிறார். 'ஜீன்ஸ்' படத்தில் முக்கிய வேடத்தில் நடித்த ராஜூ சுந்தரம் கதாநாயகனாக நடிக்கும் முதல் படம் இது. இவருடன் 'காதலர் தினம்' கதாநாயகன் குணாலும் நடிக்கிறார்.

மற்றும் வடிவேலு, நாகேஷ், விஜயசக்கரவர்த்தி, வையாபுரி, சரத்பாபு, நாசர், கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

தேவா இசையமைக்கும் இப்படத்தின் ஒளிப்பதிவை தயாரிப்பாளர் ராஜ்பிரீத்தே கவனிக்கிறார்.

கதை, திரைக்கதை அமைத்து இயக்குகிறார் கலையரசன் என்ற புதியவர்.

# சினி விசிட்



விக்ரம்-தேவயானி
... விண்ணுக்கும் மண்ணுக்கும்

## உதயமாகவுள்ள 'உதயா'

'துள்ளாத மனமும் துள்ளும்' வெற்றிப் பட ஜோடி விஜய்-சிம்ரானை வைத்து 'உதயா' என்ற படத்தை தயாரித்தார் பிரமிட் நடராஜன். அவர் தயாரித்த ஏனைய படங்கள் தோல்வியைத் தழுவ 'உதயா'வை வெளியிடமுடியாமல் அவதிப்பட்டார்.


இப்போது விஜய்-சிம்ரான் நடித்த 'ப்ரியமானவளே' வெற்றிகரமாக ஓட, விஜயின் தந்தையும் இயக்குனருமான எஸ்.ஏ.சந்திரசேகரன் 'உதயா' படத்தை பிரமிட் நடராஜனிடமிருந்து வாங்கியுள்ளார். 'உதயா' விரைவில் உதயமாகவுள்ளது.

## மறுபடிஇணையும் சிம்ரன்

தெலுங்கில் பெரு வெற்றி பெற்ற 'சமரசிம்ஹாரெட்டி' படத்தில் பாலகிருஷ்ணா-சிம்ரான் ஜோடியாக நடித்திருந்தார்கள். இப்படம் 'சண்முகபாண்டியன்' என்ற பெயரில் தமிழில் வெளியானது.

இப்போது இந்த வெற்றிப்பட ஜோடி மறுபடி புதிய படமொன்றில் இணைகிறது. 'சமரசிம்ஹாரெட்டி' படத்தை இயக்கிய கோபால் என்பவர் தான் இந்தப் படத்தையும் இயக்கவுள்ளார்.

இதுவும் சிம்ரான் உபயத்தில் தமிழில் மொழி மாற்றப்படும் என்று நம்பலாம்.



உதய்கிரண்-ரீமா சென்
படம்: சித்திரம்

## ...ல்லுகிறோம்

... ராணி நடிகை காதல் திருமணம் ... இந்தியா திருமதி சின்னத் ... பெரிய திரையில் நடிக்க ... எல்லாம் கட்டுப ... என்று தாகா ஒருவர் மூலம் பட...

... 'குளம்பாள்' நடிகை ... சில நாட்கள் ... வந்த பனேஜர். அந்தப் ... எல்லாம் பார்த்திருக் ... செய்து விட்டதே அது ... புலம்பித் திரிகிறாராம்.

... இருக்கும் அந்த மூன் ... படத்தில் நடிக்க பதினைந்து ... வருகிறாராம். அடுத்து இவர் ... நடிக்கப் போகிறாராம். ... எப்படியானது, ஒரு ... என்று சவால் விட்டிருக் ...

... சென்னையை விட்டு ... நடிகை அன்னை ... படமொன்றில் ஒரு ... இதையடுத்து ... ஒரு பாடல் காட்சிக்கு ... வைக்க படையெடுத்து ... நடிகையின் 'ஒத்துழைப் ... இரண்டெழுத்துப் படத் ... செய்த இலவச பிர ... இதற்குக் காரணமாம்.


## ...றுபடி நடிக்கிறார்

... தொடரில் நாயகி ... 'தினந்தோறும்' என்ற ... நடித்திருந்தார். ... நடிக்காமல் இருந்த தீபா ... போகுதே' படத்தில் ...

... போகுதே' படத்தில் பிரபுதேவா ... தோன்றுகிறார்.

## ...அடுத்த படம்

... பின் புதிய பட ... தீர்மானித்தார். ... சிடுசிக்கப்பட்டிருப்பதால் ... வருகின்றன. விரைவில் ... எதிர்பார்க்கலாம்.



சரத்குமார்-மீனா
படம்: ரிஷி

## மினி சினி

✣ சத்யராஜ்-ரம்பா-கௌசல்யா நடிக்கும் 'குங்குமப்பொட்டுக் கவுண்டர்' படத்தில் இரண்டு நாயகிகள் போதாதென்று இப்போது ராதிகா சௌத்ரியையும் சிறிய வேடமொன்றில் நடிக்க வைத்துள்ளனர்.

✣ மணிரத்னத்தின் 'அலைபாயுதே' படத்தில் மாதவனின் தந்தை வேடத்தில் நடித்தவர் பிரபல தயாரிப்பாளர் 'பிரமிட்' நடராஜன். இவர் இப்போது 'வாஞ்சிநாதன்' படத்தில் கலக்டல் அரசியல்வாதியாக நடித்து வருகிறார்.

✣ என்.டி.ஆர்.பாலகிருஷ்ணா கதாநாயகனாக நடிக்கும் தெலுங்குப் படமொன்றில் அவருக்கு ஜோடியாக சஷ்மிதா சென் இரண்டு நாட்கள் நடித்தார். இப்போது சஷ்மிதாவை நீக்கி விட்டு சோனாலியைக் கதாநாயகியாக்கியுள்ளனர்.

✣ லிவிங்ஸ்டன் கதாநாயகனாக நடித்து, பாதியில் நிறுத்தப்பட்டிருந்த 'லவ் பண்ணுங்க சார்' படத்தின் படப்பிடிப்புக்கள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. படத்தின் பெயரும் 'புத்திசாலி' என்று மாற்றப்பட்டுள்ளது.

✣ 'பட்ஜெட் பத்மநாபன்' வெற்றிப்படத்தை தந்த பிரபு-டி.பி.கஜேந்திரன் கூட்டணி மறுபடி இணைகிறது. இன்னமும் பெயர் சூட்டப்படாத இப் படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடிக்கிறார் 'வானவில்' நாயகி அபிராமி.

✣ அண்மையில் வெளியான 'கண்டேன் சீதையை' படத்தில் முதல் தடவையாக சொந்தக் குரலில் பாடிய விவேக், 'ஜூட்டி' படத்திலும் சொந்தக் குரலில் பாடல் ஒன்றைப் பாடவுள்ளார். இப்படத்தில் விவேக்குடன் வடிவேலுவும் இணைந்து சொந்தக் குரலில் பாடுகிறார்கள்.

✣ 'சேது' பட இயக்குநர் பாலா, தனது அடுத்த படமான 'நந்தா' படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடிக்க புதுமுக நாயகி ஒருவரைப் பல மாதகாலம் தேடினார். இப்போது தனது முடிவை மாற்றிக் கொண்டு லைலாவை கதாநாயகியாக ஒப்பந்தம் செய்துள்ளார்.

✣ மலையாள இயக்குநர் சித்திக் இயக்கத்தில் விஜய்-சூர்யா இணைந்து நடிக்கும் 'ப்ரெண்ட்ஸ்' படத்தில் விஜய் ஜோடியாக தேவயானியும் சூர்யா ஜோடியாக விஜயலட்சுமி என்ற புதுமுகமும் நடித்து வருகிறார்கள்.

## ஷங்கரின் 'ரோபோ'

தனது படங்களில் இடம்பெறும் பாடல்களில் கம்பியூட்டர் கிராஃபிக்ஸ் மூலம் வித்தைகள் காட்டி வந்த இயக்குநர் ஷங்கர், 'ஜீன்ஸ்' மற்றும் 'முதல்வன்' ஆகிய படங்களில் பல காட்சிகளை கம்பியூட்டர் தொழில்நுட்பத்தால் பிரமிக்க வைத்தார்.

இப்போது இவர் முழுக்க முழுக்க கம்பியூட்டர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 'சயன்ஸ் ஃபிக்ஷன்' எனப்படும் விஞ்ஞானப் படம் ஒன்றை இயக்கவுள்ளார். இது சிறுவர், சிறுமியரைக் குறி வைத்து எடுக்கப்படும் ஒரு நகைச்சுவைப் படம் ஆகும்.

இதற்கு 'ரோபோ' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் கமல் கதாநாயகனாக நடிக்கிறார். 'இந்தியன்' படத்திற்குப் பின் ஷங்கர் இயக்கத்தில் கமல் நடிக்கும் படம் இது.

# கடல் தேவதைக்குக் காணிக்கை செலுத்தக் கூடிய கூட்டம்

இற்றைக்குச் சரியாக ஒரு வருடத்தின் முன் பிறந்தது, இன்றுடன் மறைந்து போகும் பழைய ஆண்டு.

2000மாம் ஆண்டு பிறப்பை உலகம் மிகப் பிரமாதமாக கொண்டாடி வரவேற்றது. ஒவ்வொரு நாட்டிலும் இக்கொண்டாட்டங்கள் வெவ்வேறுபட்டிருந்தன.

புத்தாண்டை வரவேற்பதற்கு பிரேஸில் நாட்டின் ரியோடிஜெனிரோ நகரில் கிழக்குக்கரையோரத்தில் 3.5 கோடி மக்கள் ஒன்று திரண்டனர். அந்த மக்கள் வெள்ளத்தில் மூன்றில் ஒரு பங்கினைத்தான் இங்கு பார்க்கிறீர்கள்.

ஆபிரிக்கக் கடல் நீர் தேவதையான 'லெமாஞ்சா'வை வாழ்த்தி வணங்குவதற்காகவே இந்தக் கூட்டம் திரண்டது. தேவதைக்கு இவர்கள் ஆபரணங்கள், வாசனைத் திரவியங்கள், பூக்கள், சாம்பெய்ன் குடிவகைகள் என்பவற்றை கடலுக்குள் வீசி காணிக்கையாகச் செலுத்தினர்.



## மாட்டிய மைனர்

வாட்டியது நெஞ்சம்
பூட்டிய மனதுக்குள்
புகுந்து விட்டவளை எண்ணி
வீட்டை மறந்தான்-தன்
பாட்டிலே நடந்து,
பாடியும் திரிந்தான்
பாவை அவளைப் பார்த்து
பகிடியும் பண்ணியவண்ணம்,
"சேட்டை விடாதே" என்றாள்.
கேட்டால்தானே இவன்
சேட்டைக்கழற்றியபடி
மோட்டர் சைக்கிளில்
முட்டி மோதியபடி,
எட்டிச் சென்றாள் அவள்
கிட்டச் சென்றான்.
கிண்டல் அடித்தபடி-அன்று
காட்டிவிட்டால் அவளும்
போட்டிருந்த செருப்பால்
மாட்டிய மைனர்
பூட்டி வைத்த மனதுடன்
கேட்டைத் திறந்து-தன்
வீட்டை அடையும் வரை
வாட்டியது நெஞ்சம்-அன்று
வாங்கியதை எண்ணி!

பற்குணன் அம்பிகாபதி- மன்னார்.

## நல்லதோர் வீணையையே...

இன்ப இசை விளையும்
அரியதொரு வீணையையே
மிக்கவிலை கொடுத்து வாங்கிவந்து
துடைத்துத் துலக்கிப் பட்டுத்
துகிலில் தைத்த உறையிலிட்டு
தங்க நூலிழையால் கட்டி
கண்ணாடிப் பேழையதில்
பூட்டி வைத்தானே ஒருவன்.....!
***
இசை ஞானமறியா செவிட்டுமைப்பிறவி
மூர்க்க மதி மூடனவன்
தான் நினைத்த போதிலதைத்
தொட்டு இசை மீட்ட நிதம்
தோன்றியதோ இனிய நாதமல்ல
அபசுரமாய் ஒலித்த
அதன் அவலகீதம் தான்....!
****
பார்ப்போரை பரவசத்தில் ஆழ்த்தும்
அதன் அழகு நேர்த்தியினை
தானும் கண்டு மிக இறுமாந்திருந்தான்
உள்ளிருந்தே கறையான்
அரித்ததனை அறியாமல்
எடுத்தே ஒருநாள் தூசிதட்ட
உள்ளீடு உதிர்ந்து மண்ணாய்
மாறியே உருக்குலைந்ததுவே!

ராஜி-வவுனியா.

## நாம் சுமக்கும் ஆயுதம்!

இப்போது
நானும் கூட
அதைத் தான்
கையில்
வைத்திருக்கிறேன்.
***
ஏன்...! இப்போது
அதைத்தான்
எங்களூரில் எல்லோருமே!
தூக்கியிருக்கிறோம்.!
***
என்
தோளும் கையும்
விரும்பியும்
விரும்பாமலும்-இன்று
அதைத்தான்
சுமக்கின்றன.!
***
என் கண்களில்
தெறிக்கும்
ஒவ்வொரு விம்பமும்
அதுவாகத்தான்
தெரிகிறது.!
***
என்ன செய்ய... என்
(இந்த) தேசத்தில்
வாழ்கின்ற
அனைத்து தரப்பினரும்
அதைத்தானே!-இன்று
சுமக்க வேண்டியுள்ளது.!
***
என் தந்தையும்,
தாயும்-அவர்
முந்திய முழுவதும்,
பந்துக்கள், குழவி
அனைவரும்
வந்து குலாவி...
***
மண், கரி
தின்று-நடை
கற்றெழுந்து...
சிந்துகள் பாடி
சீர்ப்படி
நெல் விளைத்து
புழுதி மணம்
மாறாத-புது
நெல்லுச் சோறுண்டு
***
புகழாய், மகிழ்வாய்
வாழ்ந்த மண்
இந்த மண்!-அந்த
மண்ணிலேயே...
வாழ்வுக்காய்
எத்தனை நாள்
ஏங்குவோம்-அதுவும்
இளைஞர் நாங்கள்
எதுக்காக ஏங்க வேண்டும்?
***
அதனால் தான்-நாங்கள்
அதைச் சுமப்பதற்காய்
உறுதி எடுத்தோம்
இப்போது-என்
கையும் தோளும்
'மண்வெட்டி' என்ற
அதைத்தான்
சுமக்கின்றன!.

சம்பூர்.எம்.வதனரூபன்.

## தேன் கிண்ணம் — விளங்கிக் கொள்

காதலிக்கும்
காதலருக்கு
காதலின் அர்த்தம்
புரிந்திருந்தால்,
காதலில்
தோற்பது
யாருமில்லை!
தோற்ற நீ
அவன்(ர்)
வர்க்கத்தை
வெறுப்பாயானால்,
சூனியமாவது
உன் வாழ்வே...!
காதல் கடந்து
கல்யாணத்தில்
தோற்பது
கடைசிவரை
சீதையாய் வாழும்
பெண்கள் தான்
என்பதை
விளங்கிக் கொள்!

ஜெ.ஜெசி-மட்டக்களப்பு.

முரசு 395ல்
அக்கரைப்பற்று 07
க.அஜந்தக்குமார் எழுதிய
'மறந்துவிடாதே'
கவிதைக்கு பதிலாக
அமைந்த கவிதை இது.

## சோம்பல்

சுறுசுறுப்பு
என் பரம்பரை எதிரி!
அருவருப்பு
என் உற்ற நண்பன்!
***
கொட்டாவி
என் பிரிய(ா)க் காதலி!
தூக்கம்
என் அன்பு மனைவி!
***
கும்பகர்ணனே
என் குல தெய்வம்!
அவனே எனக்கு,
வாழ்வளித்த வள்ளல்!
***
நண்பகலே
என் வேலைக்கேற்ற
நேரம்!
'சோம்பேறி'தான்
நான் பெற்றுக் கொடுக்கும்
பட்டம்!
***
பணக்கார
வீடுகள்தான்
என் வசிப்பிடம்...
அவர்கள் மேனிகளோ
எனக்கு இருப்பிடம்!
***
வயிறு நிறைய
உண்டு
மல்லாக்கப் படுப்பதே தான்
நான் கற்றுக் கொடுக்கும்
பயிற்சி!
***
தேவையற்ற கற்பனை
அளவு கடந்த யோசனை
இதுவே நான்
முதலில் கற்றுக் கொடுக்கும்
பாடம்!
***
நான் குடியிருக்காத
இடமென்றால்,
உழைப்பாளிகளின்
உடம்பொன்றே...!

வாழைச்சேனை-
ஷல்மானுல் ஹரீஸ்.

## புத்தாண்டே நீ வருவாய்

புதுவாழ்வு எம்மில்
பூத்துக் குலுங்க,
புத்தாண்டே நீ வருவாய்
நித்தம் எம் வாழ்வில்
நிரந்தர குதூகலம் தோன்றிட
புத்தாண்டே நீ வருவாய்
சித்தம் கலங்க வைக்கும்
சீர் கெட்ட யுத்தம்
நிரந்தரமாய் மடிய
புத்தாண்டே நீ வருவாய்
முத்தான தித்திக்கும் முரசு
நித்தம் எம் கையில் தவழ
புத்தாண்டே நீ வருவாய்!

த.அஜந்தக்குமார் -
யார்வத்தை,வதிரி.

## பேனா நண்பர்கள்



பெயர்: ஜே. கோகுலதீபன்
வயது: 16
முகவரி:
வைரவ புளியங்குளம்,
வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்: வி. பிரியா
வயது: 19
முகவரி:
குரு குல வீதி,
தம்பிலுவில்-02.
பொழுது போக்கு:
வானொலி, ரீ.வி.

# நில் – கவனி – முன்னேறு

☛ அன்பும், கருணையும் உடையவராய் இருங்கள். அது உங்களது முகத்துக்குப் பொலிவைத் தருவதுடன், மற்றவர்களை உங்களிடத்தில் ஈர்க்கும் விசையாக செயல் படும்.

☛ மற்றவர்களுடன் உரையாடும் போது உரத்தக்குரலில் பேசாதீர்கள். முக்கியமாகத் தொலைபேசியில் பேசும்போது.

☛ நீங்கள் மற்றவர்களுக்குச் சொல்வதையே நீங்களும் நடைமுறையில் கடைபிடியுங்கள். உங்கள் பேச்சுக்கும் செயலுக்கும் துளியும் வித்தியாசமில்லாதவாறு நடந்து கொள்ளுங்கள்.

☛ உங்கள் நலனை முன்னிட்டு மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாதீர்கள்.

☛ எத்தகைய மோசமான நிகழ்ச்சியிலும், எத்துணை மோசமான நபரிடத்திலும் உங்களுக்கு ஒரு செய்தி அல்லது படிப்பினை இருக்குமென்பதில் முனைப்பாய் இருங்கள்.



☛ புதிய நண்பர்கள் அறிமுகம் ஏற்படும்போது விவாதங்களை முற்றிலுமாக தவிருங்கள்.

☛ உங்கள் தோற்றம் மற்றும் உடைகளை விடவும், உங்கள் வார்த்தைகள்தான் உங்களின் மதிப்பை உயர்த்தும் உண்மையான சாதனம் என்பதை உணர்ந்து கொண்டு பேசுங்கள்.

☛ மற்றவர்களை உளப்பூர்வமாய் மரியாதை செய்யுங்கள். போலியான உபசரணைகளை முற்றிலும் தவிருங்கள்.

☛ இலக்கை நோக்கிய பயணங்களின் போது இடையூறுகளைப் பொருட்படுத்தாதீர்கள்.

☛ யாரைப் பற்றியும், எதைப்பற்றியும் மேலோட்டமாக விமர்சிக்காதீர்கள். ஆழ்ந்த அறிவோ அல்லது அனுபவமோ இல்லாத பட்சத்தில்.

☛ சுய முயற்சியில்லாத வெற்றியும், தகுதியில்லாத புகழும் நெடுநாள் நிலைக்காது என்பதை மனதில் நிலைநிறுத்துங்கள்.

☛ நீங்கள் என்னவாக விரும்புகிறீர்களோ அதனை மீண்டும் மீண்டும் நினைத்துப் பாருங்கள்.

# இந்தவாரம் உங்கள் பலன்

31.12.2000 முதல் 06.01.2001வரை

ஜோதிடர் 'கீர்னர'

**மேடம் :**
மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறும். பரீட்சைகள், எடுத்தமுயற்சிகள் யாவும் திருப்திகரமாக அமையும். தொழில் கிடைக்காதோர் காத்திருப்போர் அனைவருக்கும் வெற்றிகள் கிடைக்கும். துலாராசிக்காரர்களால் நன்மைகள் தொடரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஊதா: எண் : 02.
அதிஷ்ட திகதிகள் : 02, 31.

**இடபம் :**
உறவினர்கள் வருகையுடன், கொடுக்கல்வாங்கல்கள் கடன் பிரச்சனைகள் தீரப்பெறும். திருமண சுபகரும விடயங்கள் நடைபெறும். பகைவர்கள் நண்பர்களாவார்கள். புதிய முயற்சிகள் கைக்கூடும் ரோகிணி நட்சத்திரக்காரருக்கு திருப்புமுனையாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண் : 09.
அதிஷ்ட திகதிகள் : 03, 04.

**மிதுனம் :**
உடல் நோய்துன்பம் நிவர்த்தி பெறும். எதிர்கால திட்டங்கள் தீட்டப்படும். தொழில், பணவசதி என்பன பெருகப் பெறும். கடன் பிரச்சனைகள் பைசலாகும். திருவாதிரை நட்சத்திரருக்கு வேலை வாய்ப்புக்கள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண் : 08.
அதிஷ்ட திகதிகள் : 02, 04.

**கடகம் :**
புதிய திட்டங்கள் உருவாகும். தீராத பிரச்சனைகள் தீர்வு கிடைப்பதுடன், பண பொருள் உதவிகள் அமையும். பெண்களால் பிரச்சனைகள் ஏற்படும். ஆயிலியப் பெண்களுக்கு தடைகள் விலகி திருமண சுபகரும நிர்ணயம் நடைபெறும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 01, 04.

**சிம்மம் :**
தொழிலிலுள்ள கஷ்டங்கள் நீங்கப் பெறும். இழுபறியான நிலையுடன் கடன் பிரச்சனைகள் விலகிக்கொள்ளும். நீண்டநாள் விடங்கள் தீரப்பெறும். பிரிந்த உறவுகள் வந்துசேரும். மகரபூர நட்சத்திரர் நன்மைகளை பெற முயல்வார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : கலப்பு வர்ணம்;எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 05, 06.

**கன்னி :**
கவலைகளை மறக்கும் காலம். உடலில் உள்ள நோய்துன்பம் மறையும். பிரயாண பலன்கள் வெற்றியாக அமையும். அலைச்சல் செலவுகளை தவிர்த்துக் கொள்ளவும். வெளிநாட்டு பிரயாண வாய்ப்புக்கள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண் : 07.
அதிஷ்ட திகதிகள் : 31, 02.

**துலாம் :**
மனக் குறைகள் விலகும், எதிர்பார்த்த திருமண முயற்சி அல்லது காதல் விவகாரங்கள் தீரப்பெறும். எதிர்கால பலதிட்டங்கள் நடைமுறைக்கு வரப்பெறும். பணப் பொருள் வசதிகள் பெருகும். சுவாதி பெண்களுக்கு யோகமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 01, 05.

**விருட்சிகம் :**
புகழ் பதவிகள் அமையும். பிள்ளைகளால் உதவியும் பணவசதிகளும் ஏற்படும். தனித்த நிலை சிலவேளை காட்டும். பெண்களால் சில பிரச்சனைகள் ஏற்படலாம். உலோகத்துறையில் தொழில் செய்வோருக்கு வருமானங்கள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 04.
அதிஷ்ட திகதிகள் : 01, 06.

**தனுசு :**
தொழில் திருப்தியாக நடைபெறும். தூர உள்ளோரின் உதவி ஒத்துழைப்புக் கிட்டும். சிறுவர்களுக்கும் குடும்பப் பெண்களுக்கும் முன்னேற்றமான காலமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 03.
அதிஷ்ட திகதிகள் : 01, 03.

**மகரம் :**
குடும்ப கவலைகள் விலகிக் கொள்ளும். கல்வியுடன் தொடர்புடைய விடயங்கள் வெற்றியைக் கொடுக்கும். கடன், கொடுக்கல் வாங்கல்கள் சீராக இருக்கும்.உயர்கல்வி வாய்ப்புக்கள் பெறலாம். பிள்ளைகளால் ஒத்துழைப்பு உதவி என்பன கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண் : 03.
அதிஷ்ட திகதிகள் : 03, 06.

**கும்பம் :**
குழப்பநிலை மறையும். எதிலும் நம்பிக்கை பிறக்கும். தூரதேச தொடர்புகளால் ஆதாயம் ஏற்படும். எதிர்பார்த்த முக்கிய விடயம் சீக்கிரம் கைகூடும். வாகனங்களைக் கவனமாகப் பாவித்து வரவும். சதயக்காரருக்கு நல்லவாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மரூண் வர்ணம்; எண் : 04.
அதிஷ்ட திகதிகள் : 31, 04.

**மீனம் :**
கவலைகள் மறையும். பிரயாணமும் இடமாற்றமும் காணப்படும். பெரியோர்களின் ஆசிர்வாதமும், ஆலயதரிசனமும் கிடைக்கப் பெறும். பணவசதிகள் மனதிற்குப் பூரிப்பான சம்பவங்கள் இடம்பெறும். உத்திரட்டாதி பெண்களுக்கு வசதி, வாய்ப்புக்கள் உயர்வு பெறும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்:
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 01, 05.

லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## உடல் நலத்திற்கு தேவைப்படும் என்சைம்கள்



உடல் நலத்திற்கு விட்டமின்கள் மட்டும் உதவுவதில்லை. அவற்றுடன் சேர்ந்து தாதுப் பொருட்களும் என்சைம்கள் எனப்படும் இரசாயன திரவக் கூட்டுப் பொருட்களும் உதவுகின்றன.

என்சைம்கள் பச்சைக்காய்கறிகள், கீரை வகைகள், பழங்களில் அதிகம் உள்ளன. உணவு உண்பதில் சில குறிப்பிட்ட வரையறைகளைப் பின்பற்றினால் உடலுக்குத் தேவையான தாதுப்பொருட்களும் என்சைம்களும் கிடைக்கும்படி செய்யலாம்.

என்சைம்கள் உணவுச் சமிபாடுக்கு மட்டும் உதவுவதில்லை. பலவிதமான மருந்துகளின் தாக்கம் உடலில் ஏற்படுவதையும் நீக்குகின்றன. பழங்களில் எளிதில் சமிபாடடையக் கூடிய 'ஆர்கானிக்' அமிலங்கள் அடங்கியுள்ளன. இதனால் தான் பழங்களைச் சாப்பிட்டாலோ அல்லது பழச்சாறு குடித்தாலோ சிறிது நேரத்தில் புத்துணர்ச்சி கிடைத்து விடுகிறது.

இரத்தத்தை சுத்திகரிக்க ஒட்சிசன் எனப்படும் பிராணவாயு அதிகம் தேவை. இரத்தத்தில் ஒட்சிசன் அளவை அதிகரித்து இரத்தத்தை சுத்திகரிக்கவும் என்சைம்கள் உதவுகின்றன.

இந்த என்சைம்கள் நாம் உணவுகளைச் சமைக்கும்போது அழிந்து விடுகின்றன. காய்கறிகளை நிறைய எண்ணெய் ஊற்றி, வதக்கி உப்பு, காரம் சேர்த்துச் சமைக்கும் போது விட்டமின், கனியுப்புக்களுடன என்சைமகளும அழிந்து விடுகின்றன.

உணவில் தினமும் ஒரு பகுதியாவது பச்சைக்காய்கறிகள், கீரைவகைகள், பழங்கள் இருப்பதுபோல் பார்த்துக் கொள்வது அவசியம்.


சமைத்த உணவுகளைத் தொடர்ந்து உண்டு வந்தால் தோலில் சுருக்கங்கள் ஏற்படும், பலவீனம் ஏற்படும்.

பப்பாளியில் அடங்கியுள்ள 'பபாயின்' என்ற என்சைம்கள் உணவு சமிபாட் டிற்கு உதவுவதுடன் குடல் புழுக்களையும் அழிக்க வல்லது.

பப்பாளியில் உள்ள 'அர்ஜினி', 'கார்பைன்', 'பெப்ரின்' ஆகிய என்சைம்கள் ஆண்மை அதிகரிப்புக்கும், சீரான இரத்த ஓட்டத்திற்கும் உதவுகின்றன

## விட்டு விட்டு உடற் பயிற்சி செய்யுங்கள்!

உடலை 'ஸ்லிம்' ஆக வைத்துக் கொள்வதில் இளம் பெண்கள் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதற்காக உடற்பயிற்சி செய்யும் பெண்களின் தொகையும் அதிகரித்து வருகின்றது. அழகு நிலையங்களுக்குப் படையெடுக்கும் பெண்களை உடற்பயிற்சி நிலையங்களிலும் இப்போது காணக் கூடியதாக இருக்கின்றது.



உடற்பயிற்சி செய்யும் போது ஒரேயடியாக ஒரு மணித்தியாலமோ அல்லது அரைமணித்தியாலமோ தொடர்ந்தாற்போல் செய்வதை விட, அரை மணி நேரத்திற்கு ஒருமுறை பத்து நிமிடங்கள் என்று விட்டு விட்டுச் செய்வது இன்னும் நல்ல பலனைக் கொடுக்கும் என்று சமீபத்திய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

காலையில் எழுந்ததும் வேகமாக நடப்பது, சைக்கிள் ஓட்டுவது, நடைப்பயிற்சி செய்வது என்று ஒட்டுமொத்தமாக உடற்பயிற்சி செய்பவர்களை விட, விட்டு விட்டு உடற்பயிற்சி செய்பவர்களின் இதயம், சுவாசப்பை ஆகியவை நல்ல முறையில் இயங்குகின்றன என்றும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

உடல் எடையைச் சீராக வைத்துக் கொள்பவர்கள் தங்கள் உடலைப் பாதுகாக்க ஒரு நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது நல்லது ஆனால், அது நீண்ட நேரமாக இல்லாமல் ஒரு நாளில் பத்து நிமிடங்கள் கூட ஒதுக்கினால் போதுமானது. ஆனால், அந்தப் பத்து நிமிடங்களில் வேறு எந்தச் சிந்தனையுமின்றி ஒரு முகமாக உடற்பயிற்சி செய்யவேண்டும். தினமும் சரியாகஅந்தப் பத்து நிமிடங்களை உடற்பயிற்சிக்கு ஒதுக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு அரைமணித்தியாலம், ஒரு மணித்தியாலம் என்று உடற்பயிற்சி செய்து விட்டு பிறகு அடுத்த இரண்டு நாட்கள் செய்யாமல் விட்டு விட்டு, பிறகு திரும்பவும் இரண்டு நாட்கள் உடற்பயிற்சி செய்வது கூடாது.

உடல் எடையைக் குறைக்கவிரும்புவர்கள் அரை மணி நேரத்திற்கு ஒரு முறை பத்து நிமிடங்கள் என்று விட்டு விட்டு உடற்பயிற்சி செய்தால் நல்ல பயன் கிடைக்கும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** IV

பெயர்:.....................

முகவரி:.....................

.....................

தொழில்:.....................

கையொப்பம்:.....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-01-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா

69

# மோனிக்கா என் மோனிக்கா

பேர்ணி லிவின்ஸ்கி தனது மகள் மோனிக்காவுக்கு மத்திய புலனாய்வுத் துறையினரால் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதை, தன் முன்னாள் மனைவி மூலம் அறிந்ததும் பதறிப் போனார். எப்படியாவது தன் மகளை சிக்கலிலிருந்து மீட்க வேண்டும் என்று துடித் தார்.

பேர்ணியும் மார்சியாவும் விவாகரத்துச் செய்து கொண்டதன் பின்னர் அதிகமாகச் சந்தித்தது கிடையாது. ஆனால் தனது பிள்ளைகள் இருவரிடமும் பேர்ணி அதிக பாசம் வைத்திருந்தார்.

வாஷிங்டன் நகரை நோக்கி தனது சகோதரி தெப்ராவுடன் பயணம் செய்து கொண்டிருந்த மார்சியாவுடன் பேர்ணி பல தடவைகள் தொலைபேசித் தொடர்பு கொண்டார்.

பேர்ணியும் மார்சியாவும் விவாகரத்துச் செய்ததிலிருந்து தெப்ரா, பேர்ணியுடன் பேச்சு வார்த்தை வைத்ததேயில்லை. இருப்பினும் மகள் மோனிக்காவுக்கு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர் அறிந்ததும், அவர் எத்தகைய பரபரப்புடன் செயற்பட்டார் என்பதை தெப்ரா இந்தச் சந்தர்ப்பத்தில் அறிந்து கொண்டாள். மார்சியாவுடன் பேர்ணி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவதையெல்லாம் மார்சியா தனது சகோதரியிடம் விவரமாகக் கூறி வந்தாள்.

சகோதரிகள் இருவரும் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிற வேளையில் ரிட்ஸ் ஹோட்டல் 10, 12ம் இலக்க அறையில் மோனிக்கா, அவளைச் சுற்றியிருந்த விசாரணை அதிகாரிகளிடமிருந்து எவ்வாறு தப்பிக்கொள்ளலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தாள். தனது தயார் தனக்கு உதவிக்கு வரப்போகிறாள் என்பதை அறிந்ததும் அவளுக்கு ஓரளவுக்கு தெம்பு பிறந்தது. மார்சியா வரும்வரை இந்த அறைக்குள் அடைப்பட்டுக் கிடப்பதை மோனிக்கா விரும்பவில்லை. எனவே கட்டடத்தின் அடித் தளத்திலுள்ள அங்காடியில் உலாவி பொழுதைக் கழிக்கலாம் என்று நினைத்தாள்.

விசாரணை அதிகாரியான எம்மிலை அணுகினாள். தன்னுடைய எண்ணத்தை அவரிடம் சொன்னாள். அத்துடன் தன்னுடைய சிநேகிதியான ஆஸ்லே ரேயின்னுடன் தனக்கு அன்று மாலையில் சந்திப்பதற்கான ஏற்பாடு இருப்பதாகவும் அது நடைபெறுவதற்கு முடியாத நிலையிருப்பதால், அவளுக்குத் தொலைபேசித் தொடர்பு கொண்டு திட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று சொல்லியாக வேண்டும். ஆகவே கீழே சென்று அவளுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் கூறினாள்.

எம்மில் தன்னுடைய உதவியாளர்கள் இருவரை அழைத்து கட்டடத்தின் கீழ் தளம் வரை சென்று வருமாறு பணித்தார். மோனிக்கா கீழ் மாடிக்குச் செல்லத் தயாரான போது அங்கிருந்த அதிகாரிகளி வொருவரான ∴பல்லன் என்பவர் எம்மிலிடம் வந்து ஏதோ இரகசியம் பேசினார். இதனைத் தொடர்ந்து எம்மில் சற்றுப் பொறுக்குமாறு மோனிக்காவுக்குச் சைகை காட்டினார்.

இந்தச் சம்பவங்கள் எல்லாம் வெள்ளிக்கிழமைதான் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அடுத்துவரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் விடுமுறையாதலால் சில விடயங்களைச் செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே, இடையில் ஒரு நாடகமாட வேண்டும் என்று அந்த அதிகாரிகள் தீர்மானித்தனர்.

கைது செய்யப்படுபவர் எவராயினும் அவர் எத்தகைய நிலையிலும் தனது வழக்கறிஞரைக் கண்டு ஆலோசனை பெறுவதற்கு, கைது செய்யும்அதிகாரிகள் ஏற்பாடு செய்தேயாகவேண்டும். அவ்வாறு வசதி செய்து கொடுக்கப்படாவிட்டால் அதனால், சட்டப்பிரச்சனை ஏற்படலாம். எனவே மோனிக்கா விரும்பியபடி அவளுடைய வழக்கறிஞர் கார்ட்டர் என்பவருடன் தொடர்பு கொள்ள முயற்சியெடுப்பதென ∴பல்லன் தீர்மானித்தார். அவருக்கு நன்கு தெரியும்- வாஷிங்டனில் எந்த வழக்கறிஞரும் வெள்ளிக்கிழமை மாலை தங்கள் அலுவலகங்களில் இருக்க மாட்டார்கள் என்பது. அவர் இல்லாவிட்டால், அவருடைய 'பேஜர்' என்ற தகவல் பதிவு சாதனத்தில் செய்தியைப் பதிவு செய்து வைத்தால் பின்னர் விசாரணையின்போது உதவும், என்று அதிகாரிகள் சிலர் கருதினர்.

இந்தச் சம்பவத்தை மனதில் வைத்துக் கொண்டு கார்ட்டரின் தொலைபேசி இலக்கத்தை மோனிக்காவிடம் கேட்டு வாங்கி தொலை பேசியில் தொடர்பு கொள்ள முயன்றார். காட்டர் அலுவலகத்தில் இல்லையென்றதும் 'பேஜர்' மூலம் தொடர்பு கொண்டு, மோனிக்காவிடம் கொடுத்து அவளுடைய தகவலைக் பதிவு செய்யுமாறு ∴பல்லன் மோனிக்காவிடம் கூறினார். மோனிக்காவும் அவ்வாறே செய்தாள்.

இதனைத் தொடர்ந்து மோனிக்காவுக்கு காவலாக அனுப்பப்பட்ட இரு அதிகாரிகளுடன் மோனிக்கா அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

அங்காடியில் கூடுமானவரை தன் முகத்தை மகிழ்ச்சியாகவே வைத்துக் கொள்ள மோனிக்கா முயன்றாள். தன்னுடன் வந்த அதிகாரிகள் இருவருடன் கலகலப்பாவே உரையாடினாள். 'இவர்களுடன் நல்ல மாதிரி நடந்து கொண்டால் அதனால் நன்மையடையலாம் என்று அவள் உள்மனம் கூறியது. அவர்களை அழைத்துக் கொண்டு சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றாள். வகை வகையான உணவுப் பண்டங்களை அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தாள். அவர்கள் விரும்பிய மதுபானத்தைச் சுவைப்பதற்கும் வாங்கிக் கொடுத்தாள். எப்படியாவது தனது தாயாரும் சித்தியும் அங்கு வந்து சேரும்வரை காலத்தைக் கடத்த வேண்டுமென்பது தான் அவளது திட்டமாக இருந்தது.

தனது சிநேகிதியான ஆஸ்லே ரேயின்சுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்த்தாள். அவள் மூலமாக பெட்டி கியூரியைத் தொடர்பு கொண்டு தன்நிலையை சுருக்கமாக விளங்கப்படுத்திவிடலாம் என்றும் நினைத்தாள். ஆனால் ஆஸ்லேயும் அப்போது அங்கிருக்கவில்லை. ஆகவே 'பேஜர்' இல் தொடர்பு கொண்டு பதிவு செய்தால். பின்னர் வேறு எவராவது கேட்டறிந்து விடக்கூடும் என்பதனால் அதைத் தவிர்த்தாள். இந்தத் தொலைபேசி அழைப்பு அவளுடன் வந்த அதிகாரிகள் இருவர் முன்னிலையில் தான் இடம்பெற்றது.

மேலும் சற்று நேரம் மூவரும் உலவினார்கள். பின்னர் கழிப்பறைக்குச் செல்ல விரும்புவதாகச் சொல்லிக் கொண்டு அவ்வறையொன்றினுள் நுழைந்தாள். அதற்குள்ளும் தொலைபேசி ஒன்று காணப்பட்டது. அதன் மூலம் பெட்டி கியூரியைத் தொடர்பு கொண்டு அவள் மூலம் கிளின்டனை எச்சரிக்கலாம் என்று நினைத்தாள். ஆனால் அந்தத் தொலைபேசி அழைப்பு சீராக இயங்கவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த மோனிக்கா, அந்தப் பகுதியில் ஒரு தாய் தன் குழந்தையை வைத் துக் கொண்டு அதன் உள்ளாடைகளைச் சீர் செய்து கொண்டிருந்ததைக் கண்டாள். அந்தத் தாயாரிடம் பெட்டி கியூரியின் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து தன்னுடைய நிலைமையைச் சுருக்கமாகச் சொல்ல எண்ணினாள். ஆனால் அவளால் அதனை நிறை வேற்ற முடியவில்லை.

பின்னர் மூவரும் பழையபடி அவர்களுக்குரிய அறைக்குப் போய்ச் சேர்ந்தனர்.

அங்கிருந்த அதிகாரிகளுக்கும் சோர்வு ஏற்பட்டுவிட்டது. எனவே அங்கிருந்த தொலைக்காட்சிப் பெட்டியில் இடம்பெற்ற மார்லின் மன்றோ நடித்த படக்காட்சிகளைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தனர்.

## மகளுக்கு உதவ வந்த தாயார்



இவ்வளவு காலம் கடந்த பின்னர், தன்னுடைய தாயார் தன்னிடம் கூறியபடி இது வரை வந்து சேரவில்லையே என்று ஏங்கினாள்.

அப்போது மணி பத்துக்கு பதினாறு நிமிடங்கள் இருக்கின்றன என்று மணிக்கூடு காட்டியது. அப்போது அறையின் கதவு மணி ஒலித்தது. ஓர் அதிகாரி கதவைத் திறந்ததும் மார்சியாவின் உருவம் தெரிந்தது. தன்னைக் காப்பாற்ற வந்த வான தேவதைபோல் அப்போது மோனிக்காவுக்கு அவள் தயார் காணப்பட்டாள். ஓடிச் சென்று மார்சியாவை அணைத்துக் கொண்டாள். இருவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

மார்சியா, அங்கு நின்றிருந்த விசாரணை அதிகாரிகள் அனைவரையும் பார்த்து, "நான் தான் மார்சியா, மோனிக்காவின் தாயார்," என்று அறிமுகப்படுத்திவிட்டு, தனது மகளின் தலையைத் தடவியபடி "எதற்கும் பயப்படாதே மகளே! எல்லாமே சீராக நடைபெறப் போகிறது. ஆகவே கலங்காமல் இருக்க வேண்டும்," என்றும் கூறினாள்.

ஸ்டாரின் அதிகாரிகளும் தாய்க்கும் மகளுக்குமிடையில் அப்போது ஏற்பட்டுள்ள தனிப்பட்ட உறவைப் பிரிக்கத் துணியாமல் விட்டுக் கொடுத்த வண்ணமிருந்தனர்.

சில நிமிட நேரம் வரை இருவரையும் ஒன்றாக கலந்துரையாடவிட்டு விட்டு அங்கிருந்த மற்றுமொரு அதிகாரி மார்சியாவைப் பார்த்து, "காலம் வேகமாகக் கடந்து போய்க்கொண்டிருக்கிறது. உங்கள் மகள் மோனிக்கா எங்களுடன் ஒத்துழைக்கவில்லையானால், சட்டப்படி ஒரு வழக்கில் உண்மை வெளியாகி குற்றவாளிக்கு தண்டனை வழங்குவதைத் தடுக்கமுற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 27 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும். இதனால் அவருடைய வருங்காலமே இருளடைந்து போகப் போகிறது", என்று கண்டிப்பாகக் கூறினார்.

(வருவாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி. சி.ஜீவராணி, 122, யாழ் வீதி, வவுனியா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பாப்பா முரசு சிறுகதை

# யாரடா அது?

அக்பர், அறிவில் சிறந்த அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்களை மிகவும் கௌரவிப்பார். அவர்களுக்கு நிறைய பொருட்களை பரிசாகக் கொடுத்து கௌரவிப்பார்.

ஒரு நாள்—

அக்பரின் அரண்மனைக்கு பன்மொழிப் புலவர் ஒருவர் வந்திருந்தார். அவர் வட நாட்டு, தென்னாட்டு, மேல் நாட்டு மொழிகளில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார். பல நாடுகளுக்குச் சென்று தமது திறமையைக் காண்பித்து பரிசுகள் பல பெற்றிருந்தார்.

அவரை சிறப்பாக வரவேற்ற அக்பர், பார்சி மொழியில் அவருடன் பேசினார். பன்மொழிப் புலவரும் அரசர் கேட்ட கேள்விகளுக்கு வெகு அழகாக, கருத்தாழமிக்க பதில்களைக் கூறி அசத்தினார்.

மற்ற மந்திரிகளும் தங்களுக்கு தெரிந்த மொழிகளில் பல கேள்விகள் கேட்டனர். அத்தனை கேள்விகளுக்கும், அத்தனை மொழிகளில் மிக அழகாக பதில் சொன்னார். அவரது அறிவையும், மொழிப் புலமையையும் கண்டு அரசவை மகிழ்ச்சியில் திளைத்தது.

அக்பருக்கு பன்மொழிப்புலவரைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி, "தாங்கள் எங்கள் அவைக்கு வந்ததில்மிக்க மகிழ்ச்சி. நீங்கள் இந்த அவையில் சில காலம் எனது விருந்தினராகத் தங்கியிருந்து எங்களைக் கௌரவிக்க வேண்டும்," என்றார் அக்பர்.

புலவரும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தார். அரசருக்கு பன்மொழிப் புலவரின் தாய்மொழி எது என்று தெரிந்து கொள்ள மிகவும் ஆசையாக இருந்தது. "தங்களது தாய்மொழி என்ன?" என்று கேட்டார் அரசர்.

அதற்கு புலவர், "அரசே! உலகிலுள்ள அத்தனை மொழிகளையும் எமது தாய் மொழியாகவே நேசிக்கிறேன்" என்று பார்சி மொழியில் பதிலளித்தார்.

அரசர் எவ்வளவு கேட்டும் புலவர் தம்முடைய தாய் மொழியைக் கூறவில்லை. அரசருக்கோ எப்படியாவது இவரது தாய மொழியைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.



"பீர்பால்! இவ்வளவு திறமை படைத்தவர், தம்முடைய தாய்மொழியைச் சொல்ல மறுப்பதேன்?" என்றார் அரசர்.

அரசரின் ஆர்வத்தைக் கண்ட பீர்ப்பால், "உங்களுக்கு அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நான் உதவுகிறேன். இன்றிரவு என்னுடன் வாருங்கள்," என்றார் பீர்பால்.


நள்ளிரவு நேரம்-

பீர்பாலும், அரசரும் பன்மொழிப்புலவர் தங்கியிருந்த அறைக்குச் சென்றனர். நன்றாக தூங்கிக் கொண்டிருந்தார் புலவர். பீர்பால் சட்டென்று புலவரின் தொடையில் ஓங்கி அடித்தார். வலியில் துடித்து எழுந்த பன்மொழி வித்தகர், 'அட எவுடுரா அதி?' (யாரடா அது?) என்று கேட்டபடியே துள்ளி எழுந்தார்.

உடனே பீர்பால் "அரசே! இப்போது பேசினாரே இதுதான் இவருடைய தாய்மொழி; தெலுங்கு. எத்தனை மொழிகள் கற்றிருந்தாலும் ஆபத்து ஏற்படும்போது உள்ளத்தின் அடியில் கிடக்கும் தாய்மொழி தான் முதலில் வரும்," என்றார் பீர்ப்பால்.

துடித்து பிடித்து எழுந்த பன்மொழிப் புலவரும் பீர்பாலின் அறிவுத்திறமையைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தார். □





எலும்புத்துண்டை எடுக்க முயலும் நாயாருக்கு வழிகாட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **06.01.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **375**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 373

**பரிசுக்குரியவர்:**
ரா. நிர்மலமோகன்ராஜ்,
நீர்/அல்ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எல்.வஜனுகன், ஹைலண்ட்ஸ் ம.ம.வி., அட்டன். | எஸ்.பத்மராஜா, நு/சென் ஜோசப் தமிழ் மகாவித்தியாலயம், மஸ்கெலியா. |
| சி.கிருஷ்ணபிரசாந், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை. | பா.தேவிகா, விவேகானந்தபுரம், நாவற்குடா. |
| த.தர்ஷனி, புனித அன்னம்மாள் பெண்கள் மகா வித்தியாலயம் கொழும்பு 13. | கே.ஹனோஜா, இஸ்ட்டொக்கோம் தமிழ் வித்தியாலயம், சாமிமலை. |
| தா.திலீபன், கமு/கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. | என்.அமல்ஷன், றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், வத்தளை. |
| வி.பிரதீபன், பாரதி மகா வித்தியாலயம், பதுளை. | ரா. றேச்சல் நிலூஷிக்கா, விகாரமகாதேவி பாலிகா மகா வித்தியாலயம், கண்டி. |

## தீயை அணைக்க வெடிமருந்து



தீயை அணைப்பதற்காக தண்ணீரை எடுத்து வந்து ஊற்றுவார்கள். தண்ணீரை ஊற்றும் போது நெருப்பிற்கு ஒட்சிசன் கிடைக்காமல் நெருப்பு அணைந்து விடுகிறது.

சிலவகை நெருப்புகளை வெடி மருந்து கொண்டு அணைத்து விடலாம். வெடிமருந்து விரைவாகத் தீப்பிடித்து விரைவில் எரிந்து விடும். இதன் மூலம் புகை ஏற்பட்டு, எரியும் பொருளுக்கு ஒட்சிசன் கிடைக்காமல் செய்து நெருப்பை அணைத்து விடும்.

## சரியா? பிழையா?

**★ அவுஸ்திரேலியக் கண்டம் தான் உலகில் மிகவும் உலர்ந்த கண்டம் ஆகும்.**



*சரி. அவுஸ்திரேலியாக்கண்டத்தில் வருடத்தின் சராசரி மழைவீழ்ச்சி அளவு 16 அங்குலம். ஏனைய கண்டங்களின் சராசரி மழைவீழ்ச்சி அளவு 26 அங்குலம் அவுஸ்திரேலியாக் கண்டத்தில் மழை பெய்வது மிகக் குறைவு. அடிக்கடி இங்கு வரட்சி ஏற்படும். மிக வெட்பமான உள்பகுதியில் பெரும்பாலும் மழை நீர் விரைவில் ஆவியாகி விடும்.*



**★ கடல் நீர் எப்போதும் நீல நிறமாகவே இருக்கும்.**

*பிழை. கடல் நீர் சிவப்பு, வெள்ளை, மஞ்சள், கபில நிறங்களில் கூட இருக்கும். கடல் மட்டத்தின் மேல் காணப்படும் 'பிளான்க்டான்' எனப்படும் சிறிய உயிரினத்தைப் பொறுத்துத்தான் இந்த நிறமற்றம் ஏற்படும். ஆபிரிக்காவின் செங்கடலின் கடல் நீர் சிவப்பாகக் காணப்படும்.*

## பாலைவனத்தில் சத்தம் ஏன்?




பாலைவனங்களில் பயணம் செய்பவர்கள் சில நேரங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் போலவும் விமானம் ஓடுதளத்தில் இருந்து புறப்படுவது போலவும், மிருகங்கள் உறுமுவது போலவும் சத்தங்கள் கேட்பதாகச் சொல்வார்கள்.

இதற்கு என்ன காரணம் என்று தெரியுமா?

இரவு நேரங்களில் கடும் குளிரால் பாலைவனப் பாதைகள் சுருங்கி இருக்கும். பகலில் கடும் வெயிலால் பாறைகள் வெடிக்கும். மண்குவியல் வேகமாகக் கீழ் இறங்கும்.

இதுதான் மேற்குறிப்பிட்ட சத்தங்கள் எழுவதற்குக் காரணம் ஆகும்.



## மர்மத் தொடர்

05

# மேனகாவின் மேகம்

"மிஸ்டர் கிஷோர்....! உங்களை ஹாஸ்பிடலைஸ் பண்ணிட்டு, நான் சுபமங்களா கல்யாண மண்டபத்துக்குப் போய் கல்யாண மாப்பிள்ளை தேவேந்திரன் கொலை சம்பந்தமா என்கொயரியை ஆரம்பிக்கணும்."

கிஷோர் பெருமூச்சு விட்டார். "எனக்கு இப்ப இருக்கிற வேலையெல்லாம் கைக்குக் கிடைச்ச கொலையாளியை தப்பிக்க விட்டுட்டோமேங்கிறதுதான்...."

"அவனை நீங்க தனியா ஹேண்டில் பண்ணியிருக்கக்கூடாது, மிஸ்டர் கிஷோர்."

"சுலபமா மடக்கிடலாம்னு நினைச்சு தப்புக்கணக்கு போட்டுட்டேன். கொலையாளிக்கு ஃபைட் சென்ஸ் அதிகம். நான் எதிர்பார்க்காத ஒரு விநாடியில் என்னை வீழ்த்தி விட்டான்."

ஹாஸ்பிட்டலுக்குள் நுழைந்தார்கள். டாக்டர் ஜெயராமனைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி இன்ஸ்பெக்டர் கிஷோரை ட்ரீட் மெண்டுக்காக ஒப்படைத்து விட்டு பராத்தகன் வெளியே வந்தபோது, அந்தப் பெண் பத்திரிகை நிருபர் எதிர்ப்பட்டாள்.

"குட்மார்னிங் இன்ஸ்பெக்டர்."

"ஓ.....! நிவேதிதாவா.....! அதுக்குள்ளே நியூஸை மோப்பம் பிடிச்சுகிட்டு வந்துட்டியா....?"

"எந்த நியூஸ் ஸார்.....?"

இன்ஸ்பெக்டர் பராத்தகன் நடந்து கொண்டே பேசினார்.



"என்ன தெரியாத மாதிரி கேட்கிறே.....? பூமல்கரை கல்யாண மண்டபத்தில் பொண்ணு கழுத்துல தாலி கட்ட இருந்த மாப்பிள்ளை மர்டர். கொலையாளியை ஃபாலோ பண்ணிட்டு வந்த இன்ஸ்பெக்டர் கிஷோரும் தாக்கப்பட்டு இப்போ ஹாஸ்பிடல்ல அட்மிட் செய்யப்பட்டிருக்கார்."

நிருபர் நிவேதிதா இன்ஸ்பெக்டர் பராத்தகனைத் தொடர்ந்து வந்தாள்.

"ஸார்.... காலங்கார்த்தால இது ஹாட் நியூஸ் தான். ஆனா அதை விட ஹாட் நியூஸ் ஒண்ணும் என் கைவசம் இருக்கு. இதை உங்ககிட்ட சொல்றதுக்காகத்தான் வந்தேன்."

பராத்தகன் நின்றார்.

"இதைவிட ஹாட் நியூஸா?"

"ஆமா..... ஸார்!"

"என்ன...! சொல்லு....?"

"ஸார்.... இது ஓர் அண்டர் கிரௌன்ட் நியூஸ். வெளியே இதுவரைக்கும் தெரியாத நியூஸ்."

"சஸ்பென்ஸ் வைக்காமே சொல்லு...."

நிவேதிதா குரலைத் தாழ்த்திக் கொண்டாள். "ஸார் ரெண்டு நாளைக்கு முந்தி அதாவது ஏப்ரல் இருபத்தெட்டாம் தேதி கனகு என்கிற ஒரு ஆயுள் தண்டனைக் கைதியை உடல்நலம் சரியில்லைன்னு ஜி.ஹெச்ல அட்மிட் பண்ணினாங்க. அந்த விஷயம் உங்களுக்குத் தெரியுமா.....?"

"தெரியாது....! அது ஜெயில் செக்ஷன். என்னோட நாலெஜுக்கு வர வாய்ப்பில்ல. சரி அந்தக் கைதிக்கு இப்போ என்ன...?"

நிவேதிதா குரலை இன்னமும் தாழ்த்திக் கொண்டாள்.

"அந்தக் கைதி கனகு இப்போ ஹாஸ்பிட்டலில் இல்லை ஸார்....?"

"இல்லைன்னா என்ன அர்த்தம்....? உடம்பு குணமாகி மறுபடியும் ஜெயிலுக்கு போய்ட்டானா....?"

"இல்லை ஸார், ஹாஸ்பிட்டல்ல அட்மிட்டான அன்னிக்கு இராத்திரி எப்படியோ காவலுக்கு இருந்த செக்யூரிட்டிகளை ஏமாத்திட்டு தப்பிச்சுட்டு போய்ட்டான்."

பராத்தகன் திடுக்கிட்டார். "அப்படி ஒரு கைதி தப்பிச்சுட்டு போயிருந்தா, எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் நியூஸ் வந்திருக்குமே...."

"நியூஸ் எப்படி ஸார் வெளியே வரும்...? அதுல சம்பந்தப்பட்டவங்க எல்லாருமே கமுக்கமாக இருந்து விஷயம் வெளியே போகாமே திரைமறைவுல அந்தக் கைதியை தேடிக்கிட்டு இருக்காங்க. இதுக்கு டாக்டர்களும் உடந்தை."

"இது நிஜமா...?"

"நிஜமோ நிஜம் ஸார்....!"

"உனக்கு எப்படித் தெரியும்....?"

"என் ஃப்ரண்ட் ஒருத்தி ஜி.ஹெச்ல வேலை பார்க்கிறா. லேப் டெக்னீஷியன். அவ மூலமா எனக்கு நியூஸ் வந்தது. அது உண்மையா பொய்யான்னு தெரிஞ்சுக்கத்தான் உங்களைப் பார்க்க ஸ்டேஷனுக்குப் போனேன். நீங்க இந்த ஹாஸ்பிடல்ல இருப்பீங்கன்னு ஸ்டேஷன் ரைட்டர் சொன்னார். ஏன் ஸார் ஒரு ஆயுள் கைதியை தப்ப விட்டுட்டு போலீஸார் இவ்வளவு கமுக்கமா இருக்கிறது சரியா...?"

இன்ஸ்பெக்டர் குணசேகர் அந்த பாக்கெட் டைரியின் முதல் பக்கத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க, சப் இன்ஸ்பெக்டர் கார்வண்ணன் முகம் முழுவதும் குழப்பத்தை ஒட்ட வைத்துக் கொண்டு மெதுவாய் பக்கத்தில் வந்து நின்றார்.

"என்ன ஸார்....?"

"இந்த டைரியோட முதல் பக்கத்தைப் பாருங்க."

கார்வண்ணன் வாங்கிப் பார்த்தார். குத்தீட்டி ஒன்று இருதயத்துக்குள் சொருகிக் கொண்டு நிற்பதைப் போன்ற ஒரு ஸ்டிக்கர், டைரியின் முதல் பக்கம் பூராவும் அடைத்துக் கொண்டு தெரிந்தது.

"இது ஏதோ தீவிரவாத இயக்கம்னு நினைக்கிறேன் ஸார்!" கார்வண்ணன் டைரியின் மற்ற பக்கங்களைப் புரட்ட சங்கேத மொழியில் ஏதேதோ வார்த்தைகள்.

பறக்கும் யானை. ப்ரிக் ஸில்க், கோட்சே, பொதுக் கூட்டம், வாக்கிங், பிரசாதம்.

"ஏதாவது புரியுதா கார்வண்ணன்?"

"ஒண்ணும் புரியலை ஸார்..."

"டெலிஃபோன் நம்பர் ஏதாவது இருக்கா பாருங்க....!"

கார்வண்ணன் பக்கங்களைப் புரட்டினார். பத்துப் பதினைந்து பக்கங்கள் காலியாக இருந்தது. அதற்குப் பின் வந்த ஒரு பக்கத்தில் டெலிஃபோன் படம் வரைந்து அதற்கு அருகில் பால்பாயிண்ட் பேனாவால்

**கிரைம்சக்கரவர்த்தி**

**ராஜேஷ்குமார்**

0000000 ஏழு சைபர்கள் எழுதப்பட்டிருந்தன.

"ஸார்... இதைப் பாருங்க....!"

குணசேகர் வாங்கிப் பார்த்தார். இரு புருவங்களுக்கு மத்தியில் ஒரு முடிச்சு விழுந்தது.

"இப்படி ஒரு ஃபோன் நம்பரா....! இருக்காதே?"

அந்த ஏழு சைபர்களையும் உற்றுப் பார்த்தார்.

ஒரு நிமிஷம்....

இரண்டு, நிமிஷம்.... மூன்று நிமிஷம்.... நான்காவது நிமிஷம்.

ஏதோ புரிகிற மாதிரி இருந்தது.

இன்ஸ்பெக்டர் குணசேகர் சப்-இன்ஸ்பெக்டர் கார்வண்ணனிடம் அந்த ஏழு சைபர்களையும் காட்டிக் கேட்டார்.

"கார்வண்ணன்....! இந்த சைபர்களை மறுபடியும் பாருங்கள். உங்களுக்கு ஏதாவது வித்தியாசமா தெரியுதா?"

அவர் வாங்கிப் பார்த்து விட்டு தலையாட்டினார். "ஒண்ணும் தெரியலையே ஸார்... ஏழு சைபர்கள் மட்டும்தான் தெரியுது."

"பார்வையை இன்னும் கொஞ்சம் துல்லியமாக்கி பாருங்கள்."

பார்த்தார். அவர் முகம் ஒரு மாறுதலுக்கு உட்பட்டபின் குணசேகரிடம் நிமிர்ந்தது.

"யூ ஆர் கரெக்ட்.... அந்தப் புள்ளிகளில் தான் விஷயமே இருக்கு. நம்பர் யார்க்கும் தெரியக்கூடாதேங்கிறதுக்காக இந்த ரகசியப் புள்ளிகள்...."

"இந்தப் புள்ளிகளை வெச்சுகிட்டு நாம எப்படி ஸார் டெலிஃபோன் நம்பரைக் கண்டுபிடிக்கப் போறோம்....? கடல்ல ஊசியைப் போட்டுட்டு தேடி எடுக்கிற மாதிரிதான் ஸார் இது!"

"இல்லை கார்வண்ணன்! கொஞ் சம் முயற்சி பண்ணி கண்டு பிடிச்சுடலாம். இதில் இருக்கிற முதல் ப்ளஸ் பாயிண்ட் என்ன தெரியுமா? இது ஏழு இலக்கங்களைக் கொண்ட ஃபோன் நம்பர் மெட்ராஸ், பெங்களூர் போன்ற பெரிய நகரங்களுக்குத்தான் இந்த ஏழு இலக்க டெலிஃபோன் எண் இருக்கும். ஸோ, சர்ச்சில் பவுண்டரி ஒரு லிமிட்டுக்குள்ளதான் இருக்கும்...."

கார்வண்ணன் தன் சட்டைப் பாக்கெட்டிலிருந்து ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு அந்த ஏழு சைபர்களையும் டைரியில் இருந்த மாதிரியே போட்டார். பிறகு முதல் சைபருக்கு மேலே ஒரு புள்ளி-இரண்டாவது மூன்றாவது சைபர்களுக்குக் கீழே இரண்டு புள்ளி- புள்ளி நான்காவது சைபருக்கு மேல் ஒரு புள்ளி- ஐந்தாவது சைபருக்கு கீழே ஒரு புள்ளி. ஆறாவது ஏழாவது சைபர்களுக்கு மேலே இரண்டு புள்ளிகளும் வைத்தார்.

பார்த்தார்.

"ஒண்ணும் புரியலை ஸார்!"

"நமக்கு வேணும்ன்னா இது புரியாமே இருக்கலாம், பட், ஃபாரன்ஸிக் டிப்பார்ட்மெண்டில் இருக்கிற கோட்வெர்ட் செக்ஷன்ல இருக்கிற எஃப்.ஓ.. ரிச்சர்ட்டுக்கு தெரியாமே இருக்காது. கார்வண்ணன் நீங்க ஒரு காரியம் செய்யுங்க..."

"சொல்லுங்க ஸார்...."

"நீங்க இங்கே ஸ்பாட்ல இருந்து எல்லா போலிஸ் சம்பிரதாயங்களையும் முடிச்சுகிட்டு ஜி.ஹெச்சுக்கு வந்துடுங்க. பின்னாடி இருக்கிற டெலிஃபோன் நம்பரை ட்ரேஸ் பண்ணிக் கொண்டு வந்துடறேன்."

"எஸ் ஸார்....!"

இன்ஸ்பெக்டர் குணசேகர் இந்த பாக்கெட் டைரியை சர்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக் கொண்டு ஜீப்பை நோக்கி போனார்.

நாற்பது நிமிஷப் பயணம்.

நகரின் மையத்தில் இருந்த ஃபாரன்ஸிக் வந்தது. அந்தக் காலை வேளையிலேயே ரிச்சர்ட் தன்னுடைய செக்ஷனில் பிஸியாக இருந்தார். கம்ப்யூட்டருக்கு ஒரு ப்ளாப்பியை சாப்பிடக் கொடுத்து மானிட்டர் திரையில் எதையோ சரி பார்த்ததும், கண்களில் வியப்பு காட்டிவிட்டு கம்பியூட்டரை அணைத்தார்.

"ஹலோ.... குணசேகர்.... குட்மார்னிங்...."

"குட்மார்னிங் ரிச்சர்ட்....!"

"என்ன இவ்வளவு காலையில் வந்திருக்கீங்க.... எனி அர்ஜென்ஸி...?"

"இல்லாமே வருவேனா...? இன்னிக்கு ஏர்லிமார்னிங் கருவேல் குப்பம் வளைவில் ஒரு டாடா சுமோ மரத்துல மோதி ஒரு மோசமான விபத்து. ஸ்பாட்லேயே ஆறுபேர் காலி. பட், ஏழாவதா ஒரு பெண்ணோட டெட்பாடி ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டில இருந்தது. டிரைவரோட ஸ்டேட்மெண்ட்படி மூணு ஆண் மூணு பெண்தான் வண்டியில வந்திருக்காங்க. இறந்து போயிருக்கிற நாலாவது பெண் யாரென்று கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு முகம் சிதைந்து போயிருந்தது. போலிஸ் டாக்கை ஸ்மெல் பண்ணவிட்டதில், அது ஒரு கிலோமீட்டர் தூரம் ஓடிப்போய் ஒரு மயானத்துக்குள் நுழைஞ்சு, பூமியைப் பிராண்ட அந்த இடத்தை தோண்டிப் பார்த்ததுல அடக்கம் செய்யப்பட்ட ஒரு இளைஞரோட உடல். அதே குழியில் இந்த டைரியும் கிடைச்சுது. டைரி முழுக்க புரியாத வார்த்தைகள். போதாத குறைக்கு ஏழு சைபர்களோடு ஒரு டெலிஃபோன் நம்பர். எல்லாமே உலக மஹா குழப்பம்.

பி.பி.'கிர்ர்'ன்னு ஏறி தலையே ரெண்டா 'விண்டுடும் போல் இருக்கு" என்றார்.

*மர்மம் தொடரும்...*

# இதுவும் ஒரு நடிகையின் கதை

05

சில திரைப்படங்களில் கதாநாயகிகளைப்பார்த்து அவர்கள் பெறும் பொருளாதார வசதிகளைப் பற்றி கேள்வியுற்று மூக்கின் மேல் விரலை வைக்காத எவருமிருக்க முடியாது. சுவரொட்டிகளிலும் விளம்பரங்களிலும் அந்த நாயகியின் உருவத் தைப் பார்த்து கனவுகாணும் இளைஞர்கள் எத்தனைபேர் ஆனால் அந்த அழகு ஜொலிப்பில் பெண்ணின் வாழ்க்கையின் பின்னால் மறைந்துகிடக்கும் மர்மமான சோகங்களைப் பற்றி எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை.... பணமும் புகழும் படைத்த பல நடிகைகள் தற்கொலை செய்து தங்கள் உயிரையே மாய்த்து விடுகிறார்கள். இன்று முன்னணியில் ஜொலிக்கும் நடிகைகள் பலரின் பின்னணியை எடுத்துக் காட்டும் கதைகள் சிறிதளவு கற்பனைக் கலப்புடன் தொடராகத் தரப்படுகின்றன.

டைரக்டரிடமிருந்து ஒருநாள் அழைப்பு வந்தது. அவரது உறவுப்பையனை ஹீரோவாகப் போட்டு படம் எடுக்கிறாராம். அதில் மாலு நடிக்க வேண்டுமாம். அம்மா வேடம்!


"சரி" என்றாள்.

மறுபடி நடிக்க வந்த பிறகு அவரை நான்கைந்து முறை சந்தித்து விட்டாள். அவரிடம் பழைய விரோதம் இல்லை. பழைய வெறியும் இல்லை.

அப்போதே மாலு உணர்ந்தாள். இனி என்னைச் சீண்டமாட்டார். திகட்டிப் போன இத்தனை வருஷம் இல்லாத நினைப்பு! இன்றைக்கு என்னாச்சு?

"அவரு உங்களை உயிருக்குயிரா லவ் பண்றாரு மேடம்... ஆரம்பத்தில உங்களுக்கு இஷ்டமில்லை... அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா நீங்களும் அவரை லவ் பண்ண ஆரம்பிக்கிறீங்க... கல்யாணம் கை கூடுற சமயம் நீங்க அவரை உதறிட்டுப் போறீங்க.... இன்னைக்கு இந்த சீன் தான் எடுக்கப் போறோம்...."

உதவி டைரக்டர் சொன்ன காட்சி



மாமிசம் நான்.

அவளது கணிப்பு சரியாகவே இருந்தது. ஷூட்டிங் ஸ்பாட்டில் டைரக்டரின் பார்வை கதாநாயகியாக நடிக்கும் கல்கத்தா பெண்ணையே சுற்றி வந்தது. ஆனால் புதுக் கதாநாயகன் பார்வை மாலுவைக் குறி வைத்திருந்தது.

அவளைவிட நான்கு வயது சின்னவன். ஆனாலும் என்ன? டைரக்டரின் உறவுரெத்தமல்லவா!

"டைரக்டருக்கு ரசனையே இல்லை மாலு. பேசாம உன்னையே எனக்கு ஜோடியாக- போட்டிருக்கலாம். அவகிட்ட என்ன இருக்கு? அணைக்கிறப்ப எலும்பு குத்துது. சதையே இல்லை....

தனிமை சந்தர்ப்பத்தில் சில்மிஷப் பேச்சை ஆரம்பித்தான் அவன்.

"கல்யாணமானாலும் உடம்பை சிக்குனு வச்சிருக்கியே.... தினம் எக்ஸர்ஸைஸ் பண்ணுவியோ?"

இது வேறொரு சந்தர்ப்பம்.

வெறும் பேச்சோடு நின்று விடவில்லை அவனது விஷமம்.

ஒரு காட்சியில் அவனைக்கட்டிப்பிடித்து அழ வேண்டும். அம்மாவாய் அவன் மீது பாசம் காட்ட வேண்டிய காட்சி.

டைரக்டர் உட்பட மொத்த யூனிட்டும் ஐம்பதடி தூரத்தில் இருந்தது.

"ரெடி.... டேக்..."

"அழாதடா! என் கண்ணுல்ல...." முதிர்ந்த தோற்றத்தில் இருந்த மாலு, புதுக் கதாநாயகனை கட்டியணைத்துக் கொள்கிறாள். அவனும் அவளைக் கட்டிக் கொள்கிறான். மார்பில் முகம் புதைத்துக் கொள்கிறான்.

நாயகனின் கை அவளது இடுப்பை வருடுகிறது. முகத்தால் மார்பை அழுத்துகிறான். அவனது வேகத்தில் அவளைக் கடித்துக் குதறும் வெறித்தனம் தெரிகிறது. அவனை உதற நினைக்கிறாள். மனசின் உத்தரவுக்கு உடம்பு உடன்பட மறுக்கிறது.

அவனின் ஸ்பரிசம் இப்போது இதமாய் இருக்கிறது அவளுக்கு. அவன் உடம்பிலிருந்து சூடு அவளுக்குள்ளும் பரவி விட்டதை உணர்கிறாள். அவனை இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொள்கிறாள்.

★★★

பாக்கியலட்சுமியின் இயல்பு தொலைந்து போயிற்று. சகஜமாக இருக்க முயன்றாள். மறுபடி மறுபடி மது நினைவில் மோதினான். எப்போதோ மறக்கப்பட்டவன். மனசுக்குள்ளேயே மக்கி மடிந்து போனவன்.

விளக்கம் பாக்கியலட்சுமியின் கடந்த காலத்தைக் கிளறி விட்டுவிட்டது. மது பற்றிய நினைவுகளையும்!

"இன்னொரு தடவை சீனைச் சொல்லட்டுமா மேடம்?"

தலை அசைப்பிலேயே 'வேண்டாம்' என்று அவனை அனுப்பினாள். காதலித்தவனுக்கு துரோகம் செய்யும் காட்சி! பாக்கியலட்சுமிக்கு நடிக்க அத்தனை சிரமம் இருக்காது. ஏற்கெனவே நடித்த காட்சிதான் அது. சினிமாவில் அல்ல; வாழ்க்கையில்!

கல்கத்தா நெரிசலிலேயே பாக்கியலட்சுமியின் வாழ்க்கை முடிந்து போயிருக்கும். மீட்டவன் மது.

ஒரு நாள் அதிகாலையில் கதவைத் தட்டினான்.

"கோன்?" என்று கதவைத் திறந்தாள் பாக்கியலட்சுமி. தூக்கம் தெரிந்த கண்கள். கலைந்த தலை. ஒழுங்கு செய்யப்படாத தாடி. ஜிப்பா அணிந்திருந்தான். தோளில் ஒரு ஜோல்னா பையுடன் நின்று கொண்டிருந்தான் அவன்.

**ஜெ.பிஸ்மி**

பாக்கியலட்சுமியைப் பார்த்ததும், அவனது கண்கள் மேலும் விரிந்தன. கை கூப்பினான்: "நமஸ்தே ஜி!"

பதிலுக்கு வணங்கினாள். 'என்ன வேணும்?' என்பது போல் அவனை ஏறிட்டாள். அவளது பார்வையின் அர்த்தம் புரிந்து, விசிட்டிங் கார்டை நீட்டினான். மது டி.எப்.டெக்., பிலிம் டைரக்டர்.

"நான் ஒரு டைரக்டர். மட்ராஸ்சிலேயிருந்து வந்திருக்கிறேன்..... 'ஆறாவது மாதம்'ன்னு ஒரு தமிழ் படம் டைரக்ட் பண்ணிருக்கேன்!" என்றான் ஆங்கிலத்தில்.

"உள்ளே வாங்க...." கதவு திறந்து, அவனை வீட்டுக்குள் அனுமதித்தாள்.

"என்ன விஷயம?" அவனது வருகையின் நோக்கம் அறிவதில் ஆர்வமாக இருந்தாள்.

சொன்னான். ஒரு படம் டைரக்ட் செய்ய இருக்கிறானாம். அந்தப் படத்திற்குக் கதாநாயகி தேடி கல்கத்தா வந்தானாம். ஏஜெண்ட் சந்தோஷ்ராய் காட்டிய ஆல்பத்தில் பாக்கியலட்சுமியின் போட்டோவைப் பார்த்து...

பாக்கியலட்சுமியால் நம்ப முடியவில்லை. என்னைத் தேடி கதாநாயகி வாய்ப்பு வந்திருக்கிறதா? நிஜவாய்ப்பு வந்திருக்கிறதா? நிஜமாகவா? நான் கதாநாயகியாக நடிக்கப் போகிறேனா? (வளரும்)

# எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

பற்று எல்லாவற்றையும் விடுவதற்காகச் சென்ற பண்டிதர் மயில்வாகனனார், ஒரு புறம் ஆன்மீகப் பற்றும், மறுபுறம் சுதேசப்பற்றும் பற்றிப் பிடிக்க, சுவாமி விபுலாநந்தராக இலங்கை திரும்பினார்.

ஆன்மீகப் பற்றுக்கு இராம கிருஷ்ணரும் சுதேசப் பற்றுக்குப் பாரதியும் அவருடைய ஆதர்ஸ குருக்கள் ஆனார்கள்.

1925 ஆண்டு இலங்கை திரும்பிய சுவாமி விபுலாநந்தர் மட்டக்களப்பு, காரைதீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இயங்கிய பாடசாலைகள் சிலவற்றை இராமகிருஷ்ண மிஷனின் நிர்வாகத்தில் கொண்டு வந்தார். புதிய பாடசாலைகளையும், கட்டடங்களையும் தோற்றுவித்தார்.

மட்டக்களப்பிலே கல்லடி-உப்போடை என்னும் இடத்தில் சிவானந்த வித்தியாலயம் என்ற ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்து. அந்த எல்லைக்குள்ளேயே தாம் வசிப்பதற்காக 'சிவபுரி' என்ற ஒரு சிறு ஆஸ்ரமத்தையும் நிர்மாணித்தார்.

1925 ஆம் ஆண்டிற்கும் 1928 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சுவாமி விபுலாநந்தர் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாசாலையிலும், இந்துக் கல்லூரியிலும் சில காலம் கல்வி போதித்தார். அவ்வாண்டு நவம்பர் 30ம் திகதி திருகோணமலை இந்துக் கல்லூரி புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நட்டார்.

சுவாமி விபுலாநந்தர் திருகோணமலை இந்துக் கல்லூரியில் கல்வி புகட்டிய காலையில் அங்கு பயின்ற மாணவர்களிடையே பாரதி பாடல்களையும் பரப்பினார். பாரதியின் கவிதா சிறப்புகளை எடுத்து விளக்கினார்.

இப்படி அவரிடம் பாரதி பாடல்களைப் பாடம் கேட்டவர்களில் நான் சென்ற வாரக் கட்டுரையில் குறிப்பிட்ட திரு.ஆர்.சிவ.சுப்பிரமணியம் அவர்களும் ஒருவராவார் குறிப்பிடக்கூடிய இன்னொருவர் தியாகி கோ.இராஜகோபால் அவர்கள்.

பாரதியாருடைய-

**"செந்தமிழ் நாடென்னும்**
**-போதினிலே**
**இன்பத் தேன் வந்து பாயுது**
**-காதினிலே"**

★

**"பாருக்குள்ளே நல்ல நாடு**
**-எங்கள்**
**பாரத நாடு"**
**"தொன்று நிகழ்ந்த தனைத்து**
**முணர்ந்திடு**
**சூழ்கலை வாணர்களும்-இவள்**
**என்றும் பிறந்தவ ளென்**
**றுணராத**
**இயல்பினளாம் எங்கள் தாய்"**

★

**"தாயின் மணிக் கொடி பாரீர்**
**-அதைத்**
**தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட**
**வாரீர்"**

★


**"நெஞ்சு பொறுக்குதில்லையே**
**-இந்த**
**நிலைகெட்ட மாந்தரை**
**நினைத்து விட்டால்"**

★

**"யாமறிந்த மொழிகளிலே**
**தமிழ் மொழி போல்**
**இனிதாவ தெங்கும் காணோம்"**

★

**"வாழ்க நிரந்தரம்**
**வாழ்க தமிழ் மொழி**
**வாழிய வாழியவே"**



போன்ற பாடல்களையும் மகாத்மா காந்தி பஞ்சகம், பாஞ்சாலி சபதம்



சுவாமி விபுலாநந்த அடிகளார்

போன்ற கவிதைகளையும் சுவாமி விபுலாநந்தர் வாய் விட்டுப் பாடி மாணவர்களையும் பாடும்படி செய்து வந்தார்.

1928ம் ஆண்டில் இன்னும் ஒரு குறிப்பிடக் கூடிய சம்பவம் திருகோணமலையில் நடந்தது. திரு.இராஜகோபால் அவர்களுக்கு இந்தியாவில் அச்சிடப்பட்ட பாரதியின் பெரிய அளவிலான திருவுருவப் படங்கள் இரண்டு கிடைத்தன. அகண்டாகார வடிவில் அச்சிடப்பட்ட படங்கள் அவை.

அந்தப் படங்களைக் கண்டதும் சுவாமி விபுலாநந்தருக்கு அவளவற்ற ஆனந்தம் ஏற்பட்டது.

அவற்றில் ஒன்றைத் திருகோணமலை இந்துக் கல்லூரியிலும் மற்றொன்றை மட்டக்களப்பு சிவபுரியிலும் பிரேம் போட்டுத் தொங்க விட வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

முதல் வாரம் திருகோணமலையிலும் அடுத்த வாரம் மட்டக்களப்பிலும் பாரதி படத் திரை நீக்க விழா என்று திட்டமிடப் பட்டது. எனினும் திருகோணமலையில் படத் திரை நீக்க விழா நடந்த அன்று சுவாமி விபுலாநந்தர் வரமுடிவில்லை.

சுவாமிக்குச் சுகமில்லை என்றும் விழாவை எப்படியும் நடத்தி முடிக்கும் படியும் மட்டக்களப்பிலிருந்து தந்திதான் வந்தது.

சுவாமி விபுலாநந்தரின் கட்டளைப் படி திருகோணமலை இந்துக் கல்லூரியில் குறிப்பிட்ட தினத்தில் பாரதி படத்திரை நீக்க விழா "ஜாம் ஜாம்" என்று நடைபெற்றது.

"ஜய பேரிகை கொட்டடா. கொட்டடா..." என்ற பாரதி பாடலை திரு.இராஜகோபால் அவர்கள் பாட இந்துக் கல்லூரி அதிபர் திரு.இராமசாமி ஐயர் என்பார் படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்துப் பாரதியின் சிறப்புகள் பற்றிப் பேசினார்.


அடுத்த வாரம் மட்டக்களப்பு சிவபுரியில் சுவாமி விபுலாநந்தர் பாரதி படத்தைத் திரை நிக்கம் செய்து வைத்தார்.

இலங்கையில் மஹாகவி பாரதியாருடைய படம் முதன் முதலாக திரைநீக்கம் செய்யப்பட்டது 1928ம் ஆண்டு திருகோணமலையில்தான் என்பதும், அதற்குக் காரணகர்த்தாவாக விளங் கியவர் சுவாமி விபுலாநந்தர்தான் என் பதும் வரலாற்றில் பொன் எழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும்.

சுவாமி விபுலாநந்தர் பண்டிதர் மயில்வாகனனாராக விளங்கிய போதே அவருக்கு சிலப்பதிகாரக் காப்பியத்தில் பெரும் ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. அதற்குக் காரணம், மட்டக்களப்பு பகுதிகளில் கண்ணகி அம்மன் வணக்கம் பெற்றிருந்த பெரும் செல்வாக்குத்தான்.

அவர் பிறந்த ஊரான காரைதீவிலும் ஒரு சிறந்த புகழ் பெற்ற கண்ணகி அம்மன் ஆலயம் உண்டு, அவருடைய பாலப் பருவத்தில் அந்த ஆலயத்தில் நடைபெற்ற வைபவங்கள், திருவிழாக்கள், மடைகள், சடங்குகள், குளிர்த்திப் பாடல்கள் எல்லாம் அவர் நெஞ்சை அள்ளிக் கொள்ளை கொண்டு விட்டன.

இன்று, சிலப்பதிகாரம் என்றால் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞான கிராமணியார் அதில் ஓர் 'அதாரிட்டி'யாக விளங்குவது போல, ஆயிரத்து தொளாயிரத்து இருபதிலும், முப்பதிலும் இலங்கையிலும் இந்தியாவிலும் சிலப்



தியாகி இரா்ஜகோபால்

பதிகாரத்தில் சுவாமி விபுலாநந்தர் ஓர் 'அதாரிட்டி'யாக துறை தோயக்கற்ற

**இரா.பத்மநாதன்**

பேரறிஞராக விளங்கினார்.

சிலப்பதிகாரத்தில் சுவாமி விபுலாநந்தர் செய்த ஆராய்ச்சியே, முழ்கியெடுத்த முத்தே பின்னர் யாழ் நூலாகப் பரிணமித்தது.

இளங்கோ என்ற ஒரு துறவி பாடிய சிலப்பதிகாரத்தில் மெய் மறந்து கிடந்த மற்றொரு துறவியான விபுலாநந்தரை பாரதி பாடிய பாடலின் ஓர் அடி கிறங்க வைத்ததில் ஆச்சரியமில்லை.

அந்த அடிதான் என்ன?

"வள்ளுவன் தன்னை
உலகினுக்கே-தந்து
வான்புகழ் கொண்ட
தமிழ் நாடு?நெஞ்சை
அள்ளும் சிலப்பதி
காரம் என்றோர் மணி
ஆரம் படைத்த
தமிழ் நாடு"

ஆம், "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதியார் சொல்லிவிட்டார் அல்லவா? இந்த அடியைப் படித்த விபுலாநந்தருக்கு பாரதியிடம் ஒருவித இறைமைப் பற்று (ஹீரோ வேர்ஷிப்) ஏற்பட்டதில் வியப்பு என்ன?

அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்திலும் மற்றும் சில பகுதிகளிலும் வாழ்ந்த தனித் தமிழ்ப் பண்டிதர்கள் சிலர் பத்தினித் தெய்வமான கண்ணகியை "இரக்கமற்ற முறையில் மதுரையை எரித்த அரக்கி, அவள் கதையான சிலப்பதிகாரத்தை வேண்டுமானால் காதைக் கொடுத்துக் கேட்போம். அதற்கு ஒரு போதும் நெஞ்சைக் கொடுக்க முடியாது. அது நெஞ்சை அள்ளும் பாடலாக இருக்க முடியாது" என்று மேடைகளில் பேசி பாரதியைச் சாடிக் கொண்டிருந்தனர்.

இதே போலவே தமிழ் நாட்டுத் தமிழ்ப் பண்டிதர்களும், பாரதியின் பாடல்களில் கருத்துப் பிழையும், சொற் பிழையும், யாப்பிலக்கணப் பிழையும் கண்டு பிடித்து ஏளனம் செய்து கொண்டிருந்தார்கள். பாரதியை ஒரு மதிப்புக்குரிய கவிஞனாக ஏற்க மறுத்தார்கள். சேக்கிழாரும், வில்லிபுத்தூராரும் அந்த வரிசையில் இறுதியாக மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் கவிஞர்களாகத் தோன்றிய மண்ணில் பாரதி போன்ற ஒரு துந்தன்னா கவியும் ஒரு கவியா என்று கேட்டார்கள்.

இப்படி ஒரு வித்துவக் காய்ச்சல் எரிந்து கொண்டிருந்த வேளையில் தான்-

அதாவது 1931ம் ஆண்டில் திருகோணமலை இந்துக் கல்லூரி அதிபர் பதவியை இன்னொருவரிடம் கையளித்து விட்டு, செட்டி நாட்டரசர் ராஜா சார் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் வேண்டுகோளை ஏற்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியராகப் போய் அமர்ந்தார் சுவாமி விபுலாநந்தர்.

சுவாமி விபுலாநந்தருக்கு இந்த உயர் பதவி கிட்டியதால் பாரதிக்கும் தமிழ் நாட்டில் உயர் பதவி கிடைக்கலாயிற்று.

**(இன்னும் வரும்)**

---

# சித்திரப் பாடிய முத்தையா 8

'பாசமலர்' படத்திற்கு கவிஞர் எழுதிய பாடல் இது:

'மலர்ந்தும் மலராத பாதி மலர் போல
வளரும் விழி வண்ணமே-வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி,
நடந்த இளந்தென்றலே-வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர்
-கண்டு
பொழிந்த தமிழ் மன்றமே.
யானைப் படைகொண்டு சேனை
-பலவென்று
ஆளப் பிறந்தாயடா-அத்தை
மகளை மணம்கொண்டு இளமை
-வழிகண்டு
வாழப் பிறந்தாயடா

தங்கக் கொடியாரம் வைரமணியாரம்-
-தந்து
மணம் பேசுவார்-மாமன்
தங்கை மகளான மங்கை உனக்காக
உலகை விலை பேசுவார்

சிறகில் எனை முடி அருமை மகள்
-போல
வளர்த்த கதை சொல்லவா
கனவில் நினையாத காலம் இடைவந்து
பிரித்த கதை சொல்லவா
கண்ணின் மணிபோல மணியின்
-நிழல்போலக்
கலந்து பிறந்தோமடா-இந்த
மண்ணும் கடல்வானும் மறைந்து
-முடிந்தாலும்
மறைக்க முடியாதடா-உறவைப்
பிரிக்க முடியாதடா. (பாசமலர்)

இது சிறந்த தாலாட்டுப் பாடல்.


ஒரு முறை மத்திய அமைச்சரை சந்திக்கச் சென்றார். அமைச்சர், 'Who is standing outside' என்று கேட்டாராம் கவிஞர். அதற்கு இவர் 'An outstanding poet is standing outside' என்று பதில் சொன்னாராம். எவ்வளவு தன்னம்பிக்கை. கவிஞரின் கடைசிப் பாட்டு 'மூன்றாம் பிறை'க்குத்தான்.

"கண்ணே கலைமானே கன்னி மயிலென
கண்டேன் உனை நானே"

என்ற உடல் நலமில்லாத நிலையிலும் பத்து நிமிடங்களுக்குள் எழுதி முடித்தார்.

இவரது சொந்தப் பெயர் முத்தையா. இவரைத் தத்து எடுத்தவர்கள் வைத்த பெயர் நாராயணன். 1949-ல் பொள்ளாச் சியில் மேடையேறிய இவரை கவிஞர் என்ற அடைமொழியோடு முதன் முதலாக மேடையேற்றியவர் இன்றைய முதலமைச்சர், கலைஞர் கருணாநிதி அவர்கள்தான். அவரது கைராசி அல்லது நாராசி எல்லோரது நாவிலும் இன்றும் ஒலிக்கப்படுகிறதாக விளங்குகிறார்.

இவரை "வயதான குழந்தை" என்பார் வைரமுத்து. காரணமென்னவோ? ஒருவேளை கவிஞனும் குழந்தையும் ஒன்று என்பதாலா? இருக்கலாம். "மாடுகள் வழக்கத்தால் செக்கு சுற்றி வருவது போலிருந்த திரைப் பாடல்களிலும் வசனங்களிலும் இலக்கிய நயத்தைப் புகுத்தவிட்ட சிலரில் சுரதாவும் ஒருவர்" என்பார் எதிரொலி விஸ்வநாதன்.



கவிஞர் அப்துல் ரகுமானோ, "தமிழ்க் கவிஞர்களில் எவர்க்கும் இல்லாத புலமை, வியக்கத்தக்க நினைவாற்றல் எளியவற்றுள்ளும் அரியன கண்டு வியக்கும் பண்பாடு; புதிய சிந்தனைப் போக்கு, நயமான சொற்கோப்பு, துவளாத நடை, இத்தனையும் சேர்ந்த சுரதாவிடம் தமிழ் ஒரு புதிய அற்புதக்கவிஞனைக் கண்டது," என்பார்.

சுப்புரத்தினதாசன் என்ற பெயரின் சுருக்கமே சுரதா. அதாவது இவர் பாரதிதாசனின் தாசன். இயற்பெயரோ ராசகோபாலன். 1921ல் தஞ்சைமாவட்டத்துக் கிராமம் ஒன்றில் பிறந்தவர். இவருக்கு ஐம்பதுகளில்தான் திரைப்படத்துக்குப் பாட்டெழுதும் வாய்ப்பு வந்தது. 1961ல் 'என் தங்கை'யில் "ஆடும் ஊஞ்சலைப் போல அலையாடுதே" இவரது முதல் சினிமாப் பாடலாக இருக்கவேண்டும்.

இந்தப் பாட்டு வரிகளுக்காகவே அப்பாடல் காட்சியைக் கடற்கரைக்குக் கொண்டு வந்து முதன் முறையாகப் படமெடுத்தார்கள். தமிழின் முதல் வெளிப்புறப் படப்பிடிப்பு இது.

"கவிஞர் திரைக் கதை, வசனம் எழுத தகுதியானவர்" என்று வசன கர்த்தா இளங்கோவன் இவரைப் பாராட்டினார். 'மங்கையர்க்கரசி'க்கு இவர் கதை, வசனம், பாடல்கள் எழுதினார். இதில் இவரது வசனம் புகழ் பெற்றது. பாரதிதாசன் புது வைக்கு அவசரமாகப் போனதால் இந்த வாய்ப்பு என்பர்.

"அமுதும் தேனும் எதற்கு நீ
அருகினில் இருக்கையிலே எனக்கு"

என்ற பாட்டைப் பாராட்டாதவர்களே இல்லை. 50க்கும் மேற்பட்ட படங்களுக்குப் பாடல் எழுதியுள்ளார். 'நேற்று இன்று நாளை' படம்தான் லேட்டஸ்ட். அதற்குப் பிறகு எழுதவில்லை.

"வெற்றிலை போடாமலே வாய் சிவந்த

**டாக்டர்.சு.சண்முகசுந்தரம்**

பச்சைப் பசுங்கிளிகள்" என்று அமரகவி, பாடல் வரிகளைத் தியாகராஜ பாகவதர் ரசித்து பெரிதும் பாராட்டியுள்ளார்.

"கண்ணில் வந்து மின்னல் போல்
காணுதே இன்பக் காவியக் கலையே
-ஓவியமே"

என்ற 'நாடோடி மன்னன்' பாடல் வரிகள் எம்.ஜி.ஆர். மனதில் மின்னியது.

"மலை மீது தோன்றும் முழுநிலவு
-போலவே
யானை தலை மீது வெண்குடை பிடிக்கும்
-வேந்தனே"

என்ற வரிகளைப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் புகழ்ந்து பேசுவார்.

"செங்கதிர் சுடர் போலே என்கரம்
-நீண்டிருந்தால் அந்த
சிங்காரச் சிலைதன்னை இங்கிருந்தே
-நான் தொடுவேன்"

என்று வரும் இனிய வரிகளை நா.காமராசன் வியந்துள்ளார்.

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா"

என்ற அற்புதமான கண்ணீர் வரிகளை மயிலை சீனி. வேங்கடசாமி, 16 முறை படித்து சுவைத்தாராம்

"தித்திக்கும் தமிழிலே முத்து முத்தாகப்
-பாடல்
தந்தவர் திருவள்ளுவர்"

என்ற பாடலைக் கல்கி அவர்கள் பெரிதும் ரசிப்பார். இவர் இயற்கையிலேயே கவிஞர். 19 வயதிலேயே பாட்டெழுதி விட் டார். 'தொடாத வாலிபம்', 'உதட்டில் உதடு', 'அமுதும் தேனும்', 'எப்போதும் இருப்பார்கள்', 'பட்டத்தரசி', 'தேன்மழை', 'எச்சில் இரவுகள்', 'வெட்ட வெளிச்சம்' இப்படி நிறைய நூல்கள், இவரால் எழுதப் பட்டன.

சி.கே.வேலன், பாரதிதாசனைப் பாட்டெழுத அழைப்பதற்கு புறப்பட்டவர் காருக்குப் பொட்ரோல் போட 'பங்க்' போனார். அங்கே சுரதாவைக் கண்டதும் மனம் மாறியது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' படத்திற்கு மகாதேவன் இசையில் வேகமாக எழுதிக் கொடுத்தது தான் "அமுதம் தேனும் எதற்கு!" என்ற பாடல், "என்னைப் பொறுத்தவரை இதற்கு முன் நான் எழுதிய பாடல்கள் பட்டுப் பாவாடை போன்றவை. இந்தப் பாடலோ அதற்கு ஒரு நாடாவைப் போன்றது" என்றார் சுரதா.

"வசந்த காலம் வருமோ"

என்ற பாடல் சோகச் சொற் சித்திரம், இது படத்தில் வந்தது. 5 பேர் முயன்று முடியாததால் இவர் எழுதிய பாடலாம் இது.

**தொடரும்....**

# 'கானல் நீர்'

இதமானதொரு மாலை வேளை. அடிவானம் மஞ்சள் பூசி இரவில் வரப் போகும் நிலவுக்காக காத்திருந்தது. தேவன் யாருக்காகவோ அந்தப் பூந்தோட்டத்தில் காத்திருந்தான். அவன் காத்திருந்தவள் இன்னமும் வந்து சேரவில்லை. எங்கேயோ ஒரு குருவி விட்டு விட்டுக் கத்தியது. அப்போது தூரத்தில் அன்னமென அவள் நடந்து வருவதை தேவன் கண்டான்.

அவள் ஆனந்தி, தேவனின் மாமன் மகள். அவனின் முறைப் பெண். ஆனந்தி ஆசிரியையாக தொழில் செய்கிறாள். தேவன் வங்கியொன்றின் முகாமையாளன். தேவன் விடுமுறை நாட்களில் ஆனந்தி வீட்டுக்குச் செல்வான். தேவன் ஆனந்தியை நேசித்தான். ஆனந்தி தேவன் மேல் உயிரையே வைத்திருந்தாள். இருதரப்பிலும் அவர்கள் திருமணத்துக்குப் பச்சைக் கொடி காட்டி விட்டார்கள். இந்நிலையில் கடந்த இரண்டு மாதங்களாக தேவன் ஆனந்தி வீட்டுப் பக்கம் போவதை நிறுத்தியிருந்தான். வங்கியில் தொலைபேசி மூலமாக ஆனந்தி தொடர்பு கொண்டாலும் அவன் அதை தவிர்த்தான். ஆனந்தி துடித்துப் போனாள். அவளுக்கு அவனின் மாற்றத்துக்கான காரணம் புரியவில்லை. அவனையே உயிராக நினைத்திருந்தவள், அவனின் பாராமுகத்தால் அவள் வாடிய பயிராகினாள்.

சரியான சாப்பாடில்லை. உறக்கமில்லை. படுக்கப் படுக்க படுக்கையும் பகையானது. சோகமே மிகையானது.

இந்நிலையில் தேவனே அவளை நகருக்கு சற்று ஒதுக்குப் புறமாக இருக்கும் அந்த பூந்தோட்டத்தில் சந்திக்க வருமாறு அழைத்திருந்தான். வெகுநாட்களுக்குப் பின் 'தேவனை சந்திக்கப் போகிறோம்,' என்ற எதிர்பார்ப்பில் அன்றிரவு அவள் சரியாக உறங்கவில்லை. ஆனந்தி அவனை அண்மித்தாள். அவளின் மெலிந்த தேகம், சோகமான முகம் யாவும் தேவனை வேதனையுறச் செய்தது. அவனைக் கண்டவுடன் அவள் கண்களிலிருந்து ஆறாகக கண்ணீர் பெருகியது. உதடுகள் துடித்தன. தேவன் இறுகிய முகத்துடன் அவளை நோக்கினான்.

"ஆனந்தி, இங்கு வந்து சும்மா அழுறதால எந்தப் பிரயோசனமும் இல்லை. உன்கிட்ட சில விஷயங்கள் சொல்லத்தான் உன்னை முக்கியமா வரச் சொன்னேன். நான் சொல்லப் போறவிஷயங்கள் சில நேரங்கள்ல உனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தலாம்- ஆனால் என்னால எதுவும் செய்ய ஏலாது. தலைக்கு மேல வெள்ளம் போயிடுச்சி...."



## பாலா.சங்குப்பிள்ளை

ஆனந்தி-அழுகையைக் கட்டுப் படுத்திய வாறு அவனை ஏறிட்டாள். "இந்த இரண்டு மாதமா உங்கள பார்க்காம, பேசாம ரொம்ப துடிச்சிப் போயிட்டேன். இந்த சமயத்துல என்னமோ பீடிகைப் போட்டு பேசுறீங்க. குற்றுயிரா குழம்பிப் போயிருக்கிற என் மனச மேலும் வேதனைப் படுத்துற மாதிரி நீங்க எதுவும் சொல்லமாட்டீங்கன்னு நினைக்கிறேன்..."

தேவன் பெருமூச்சுடன் அவளைப் பார்த்தான்.

"ஆனந்தி உன்னோட மனசுல காதல் விதையை விதைச்ச நானே-இப்பப் பயிரா இருக்கிற அதை வெட்டி சாய்க்க வேண்டிய நிலையில இருக்கேன். நான் நண்பனா நினைச்சி பழகின என்னோட வேலை செய்யிற துரை எனக்குத் துரோகம் செஞ்சிட்டான். மூன்று லட்சம் கிட்ட பேங்குல கையாடிட்டு, பழிய என்மேல் போட்டுட்டான். சந்தர்ப்ப சூழ்நிலை, அவனுக்கு சாதகமாயிடுச்சி. இப்ப உடனடியாக மூணு லட்சத்தை கட்டாட்டி ஜெயிலுக்கு போறது மட்டுமில்லை மானம் மரியாதையெல்லாம் போயிடும்.... என்னோட எதிர்காலமே சூன்யமாயிடும். அவ்வளவு பெரிய தொகைக்கு எங்கே போவேன். யார் யார்கிட்டேயோ கேட்டேன். ஒண்ணும் சரி வரலை. கடைசியில என்னோட வேலை செய்யிற ராகவன் எனக்கு உதவி செய்ய முன் வந்தாரு-ஒரு நிபந்தனையோட..... அவரோட மகளின் கல்யாணத்துக்காகத்தான் பணம் சேர்த்து வச்சிருந்தாராம். அவர் செய்யப்போற உதவிக்காக அவரோட மகளை மணம் முடிச்சிக்கணுமாம். கரை தெரியாம கடல்ல தத்தளிச்சிக்கிட்டிருந்த எனக்கு கை குடுக்க ஒருத்தர் வரும் போது, நான் எப்படி தட்டிக் கழிக்க முடியும்? அதுனால நான் அவருக்கு வாக்குக் குடுத்துட்டேன். எனக்கு இதைத் தவிர வேறு வழித் தெரியலை. அதுனால நீ என்னை மறந்துட்டு வேற ஒரு நல்லவரா பார்த்து திருமணம் முடிக்கிறதுதான் நல்லது."

படபடவென பேசி முடித்த தேவனை ஆனந்தி சினத்துடன் பார்த்தாள். "நான் உங்க மேல வச்ச காதல் உண்மையானது. உறுதியானது. உங்களுக்கு வேணும்னா உங்களோட பிரச்சனைகளுக்காக சட்டை மாத்துறமாதிரி உங்க மனசை மாத்திக்கலாம். ஆனா என்னால முடியாது. காதல்னுறது வெறும் கனவு இல்ல. மறந்துறக்கு. எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் துணிஞ்சி நிற்கிறதுதான் உண்மையான காதலுக்கு அழகு. ஆனா ஆபத்து வந்ததும் சுயநலத் துக்காக உங்களுக்கு வேணும்னா மாறிக்க லாம். என்னால முடியாது. எங்க இருந்தா லும் நல்லா இருங்க...."

ஆனந்தி-அதற்குப் பின் அங்கே நிற்கவில்லை. அழுகையை கட்டுப் படுத்தமுடியாமல், அந்த இடத்தை விட்டு வேகமாக ஓடி மறைந்தாள். தேவன் கண்கள் சட்டென கலங்கி... அவனால் வாய்விட்டு அழமுடியவில்லை. மனதுக்குள் குமுறினான்.

என்னை மன்னிச்சிடு ஆனந்தி... ரெண்டு மாசத்துக்கு முன்னால வங்கியில இரத்த தான முகாம் ஒண்ணு நடந்தப்ப, நானும் இரத்ததானம் செஞ்சேன். ஆனா என்னோட ரத்தம் நிராகரிக்கப்பட்டுடுச்சி.... காரணம் என்னோட இரத்தத்துல 'எயிட்ஸ்' கிருமிகள் இருந்திச்சாம்.... ஆறுமாசத்துக்கு முன்னால ஏற்பட்ட ஒரு தவறான உறவுனால எனக்கு கிடைச்ச பரிசுதான் அது. இந்த விஷயம் வெளியே தெரிஞ்சா எவ்வளவு அவமானம்? அதோட என்மேல மதிப்பு, மரியாதையும் வைச்சிருக்கிற உனக்கு இந்த விஷயம் தொரிஞ்சா என்ன ஆகும்... என்னால உன்னோட வாழ்க்கை பாழாகக் கூடாது. உன்னோட எதிர்காலம் கேள்விக்குறியாகக் கூடாது. அதுனாலதான் இப்படியொரு பொய்க் கதையை சொன் னேன். என்னோட நினைவுகள் கொஞ்ச காலத்துக்கு உன் மனசுல இருந்தாலும் நிச்சயமா அது மாறும். நான் செஞ்ச தப்புக்கு நீ தண்டனை அடையக் கூடாது. உன்னோட புனிதமான காதலை மதிக்காம தப்பு செஞ்ச நான் நிச்சயமா தண்டனை அனுபவிச்சித்தான் ஆகணும். மற்றப்படி உன்மேல நான் வச்ச நேசம், காதல் எல் லாமே உண்மை. என்னை மன்னிச்சிடு ஆனந்தி! இன்னொரு பிறவின்னு ஒண்ணு இருந்தா நிச்சயமா நாம் ஒண்ணு சேரு வோம்......"

தேவன்-சோகம் நிறைந்த மனதுடன் தள்ளாடியவாறு அந்த இடத்தை விட்டு நடந்தான். எங்கேயோ ஒரு குருவி இன்னமும் விட்டு விட்டுக் கத்திக் கொண்டிருந்தது.

# உள்ளம் துடிக்குதடி!

வைத்தியசாலையின் சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் பத்துமணிக்குரிய ஒலியை எழுப்பி ஓய்ந்தது. கரன் கட்டிலில் படுத்தபடி, கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அருகில் கட்டிலின் ஓரத்தில் இருந்துகொண்டு டாக்டரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் நண்பன் திலகன். கரனுக்கு வலது கை முற்றாக அகற்றப்பட்டிருந்தது. அதற்கு மருத்துவம் பார்க்கவே திலகன் அவனை வைத்தியசாலையில் அனுமதித்திருந்தான்.

"குட்மோனிங் டாக்டர்!" டாக்டரைக் கண்ட திலகன் சொல்லிக் கொண்டு கட்டிலிலிருந்து எழும்பினான். இரண்டு நிமிட பரிசோதனையின் பின்னர் சிறிய புன்முறுவலுடன் "நான் எழுதித் தர்ற மாத்திரைகளைப் போடுங்க... டோண்ட் வொறி... வீட்டுக்குக் கூட்டிப் போகலாம்!" திலகனிடம் சொல்லியபடி அடுத்த கட்டிலின் அருகே பார்வையைத் திருப்பினார்.

"நான் ரிக்கட் வெட்டிற்று குளிசையும் வாங்கிட்டு வர்றன்." என்றபடி கரனைப் பார்த்துச் சொல்லிக் கொண்டு போனவன் துல்லியமாக முப்பது நிமிடத்தின் பின்னர் வந்தான். அந்த நேரத்தில் தான் டாக்டர் பெண்ணொருத்தி கரனின் கட்டிலைக் கடந்து சென்று கொண்டிருந்தாள். கரனுக்கு



## அ.கோகுலதீபன்-கல்முனை

அவளைப் பார்த்ததும் இதயத் துடிப்பு வழமையைவிட மிஞ்சியது. நாடி, நரம்புகளெல்லாம் துடித்தன. உடல் முழுவதும் நெருப்பாகக் கொதித்தது. இடது கையால் எட்டி மேசையிலிருந்த மண் கோப்பையை எடுத்து வேகமாக எறிந்தான். அது நடுவிலிருந்த தூணில்பட்டு நொருங்கியது. அந்தச் சத்தத்தைக் கேட்டு அருகிலிருந்த தாதியொருத்தி ஓடிவந்தாள். "என்ன உனக்குப் பைத்தியம் புடிச்சிருக்கா?... டாக்டரம்மாவுக்குப் பட்டிருச்செண்டால் என்ன நடந்திருக்கும்?... ஒரு கையை வச்சிருந்தே இவ்வளவு திமிரா உனக்கு? மிஸ்டர் இவர வீட்ட கூட்டிப் போங்க....!" திட்டிக் கொண்டு திலகனிடம் சொன்னாள் அவள்.

திலகன் கரனைக் கூட்டிக்கொண்டு ஆட்டோ ஒன்றைப் பிடித்து வீடு வந்து சேர்ந்தான். அவனால் கரனின் நடத்தையைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இதுவரை அமைதியாகவிருந்தவன், மெதுவாக அவனருகே சென்று தோளில் தொட்டபடி "உண்மையைச் சொல்லுடா?... ஏன் இப்படியெல்லாம் பண்ணுற?... உன்ர உயிர் நண்பன் நான். எனக்காவது சொல்லமாட்டாயா?" அன்பாகக் கேட்டதும், சடுதியாக அவனது கரத்தைப் பற்றியபடி அழ ஆரம்பித்தான். அன்றைக்கு என்ன ஏன்டா காப்பாத்துனா?... திலகன் எனக்கு இந்த உலகத்துல இருக்கிறத்துக்கே பிடிக்கலடா... அன்றைக்கு என்ர தலை போயிருக்க வேணும். ஆனால் கை தானே போயிருச்சு!" அவனது பேச்சிலிருந்த அர்த்தம் புரியாமல் நிலைகுலைந்தான் திலகன்.

"என்ன சொல்ற?" அவனை அதட்டுபவன் போல உரத்த குரலில் திலகன் கேட்டான். "நான் தவறி மாடியிலயிருந்து விழலடா.... தற்கொலை பண்றத்துக்காகத்தான் குதிச்சன். ஆனா கடவுள் கூட நான் உயிரோட இருந்திட்டே சாகவேணும் என்றதுக்காக தப்பவச்சிட்டாரு!" அவனது வார்த்தைகள் தான் தட்டுத்தடுமாறி வந்ததே தவிர, கண்ணீர்த்துளிகள் வருவதற்கு சிறிதேனும் கண்கள் தடுமாறவில்லை.

"வீட்டுல ஏதாவது பிரச்சனையா?... என்னடா சாகிறளவுக்கு உனக்கு?..." திலகன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே கரன் தொடர்ந்தான். "மச்சான் ஊர்ல புனிதா என்னோட சயன்ஸ் படிச்சவள். அவளும் நானும் உயிருக்குயிராகக் காதலிச்சம். அவள் என்னை விடக் கெட்டிக்காரி. ஆனால் ஏழைக்குடும்பத்தில் பிறந்ததால ரியூசனுக்கு போய் படிக்கக்கூட காசுக்கு கஷ்டப்பட்டாள். நான் என்னோட காசைக்கொடுத்து அவள் படிக்க உதவினன். அவளும் படிச்சி டாக்டருக்கு எடுபட்டாள். அவள் படிப்பு முடிஞ்சதும் நாங்கள் கல்யாணம் பண்றதாகத் தீர்மானிச்சம். நானும் அவள் படிக்கட்டுமெண்டிற்று என்ர ஆசைகளையெல்லாம் கொஞ்சம் அடக்கிக் கொண்டன். ஆனால் கடிதம் போடத்தவறுவதில்லை. அவளும் பதிலுக்கு எழுதுவாள். ஆனால் கடந்த ஆறு மாதமாக அவள் ஒரு லெட்டரும் போடல்ல. அவளைப் பத்தி விசாரிக்கத்தான் கொழும்புக்கு வந்தனான்." அவன் பேசும் போது இடைமறித்த திலகன் தண்ணீர்க் கிளாசைக் கொடுத்து "முதல்ல குளிசையைப் போட்டிற்றுச் சொல்லு... சாப்பிடவேணும்!" என்றான். கரன் குளிசையை வாங்கிப் போட்டுக் கொண்டு தண்ணீர் முழுவதையும் குடித்து முடித்துவிட்டு பேச்சை தொடர்ந்தான்.

"இங்க வந்தனான். அவளைப் பத்தி விசாரிக்க கம்பஸ் போனன்... ஆனா... அவள் தான் வேறொருத்தனோட பதிவுத் திருமணம் செஞ்சிட்டதாகச் சொல்லி, என்ன மறந்திடும்படி கேட்டா... அவள் என்ன ஏமாத்திதை என்னால பொறுக்க முடியல்ல... அவளுக்கு ஓங்கி அறைஞ்சிட்டு நேரா இங்க வந்தனான். மனசு தாங்காம உன்ர வீட்டு மாடியிலிருந்து குதிச்சி சாகிறதுக்கு முடிவெடுத்தன்.... இப்ப சொல்றா நான் செஞ்சது சரிதானே?... சொல்லுடா?...." கரனின் கேள்விக்குத் திலகனால் என்ன சொல்வதென்றே தெரியாமல் தலையாட்டினான். ஆனாலும் அவனது கண்களை நீர் நிரப்பியே இருந்தது.

# சர்வதேச யாசகன்

இந்த சில நாட்களாக மனசு சந்தோஷத்தில் சிறகடித்துப் பறக்கிறது. தினமும் கிழிபடும் கலண்டர் ஏடுகளை பார்த்து சிரித்துக் கொள்கிறேன். நாடு திரும்புவதற்கான நாள் நெருங்கி வருகிறது. 'ஆஹா இன்னும் சொற்ப நாட்களே இருக்கின்றன. அவையும் கழிந்து விட்டால், இதுவரை என் கோரிக்கைகளை நிராகரித்து வந்த வானம் நான் என் தாயகம் செல்வதற்கான பாதையை திறந்து விடும்?' எண்ணும் போதே இனிக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன் இந்த தோஹா விமான நிலையத்தை விட்டு வெளியே வந்தபோது, யாரோ கண்ணைக் கட்டி அதுவும் அமாவசை இரவில் திக்குத் தெரியாத காட்டில் விட்டது போல் இருந்தது. ஏதோ இறைவன் புண்ணியத்தில் இந்த முறை ஓர் இரக்கமுள்ள முகவர் அனுப்பி வைத்த வேலையில் சேர்ந்து கொண்டபோது கொஞ்சம் நிம்மதியாய் சுவாசிக்க முடிந்தது. சொன்னபடி சொன்ன தொழில் சம்பளம் என எல்லாம் கிடைத்த போது ஆஹா மனசுக்கு ஓர் ஆறுதல் கிடைத்தது.

தமிழும், சிங்களமும் பேசிப் பேசி துணி விற்கும் பணி செய்த எனக்கு இங்கு வந்ததும், இங்கிருக்கும் அராபியர்கள் தவிர வேறு தேசங்களில் இருந்து தொழிலுக்கென்று வந்தவர்களோடு பேசப் பட்டப்பாடு பெரும்பாடு... ஹிந்தி, உருது, மலையாளம்... என்று தந்தியடிக்க வைத்த மொழிகள்! அப்பாடா! நல்லவேளையாக புரோக்கன் என்றாலும் ஸ்போக்கன் இங்லீஸ் தான் கொஞ்சம் கைகொடுத்து உதவியது. அத்தோடு நம் நாட்டு நண்பர்களும் பக்கத்தில் நின்று பல பாசைகளோடு உலா போக வழி காட்டியதில் இன்று 'கை ஸா ஹே பாய்?' என்று ஹிந்திக் காரனோடும், 'கை ஃபாலத்?' என்று அராபியோடும் 'எந்த சேட்டர் சுகமாளோ?' என்று மலையாள நண்பர்களோடும், முழுதாய் தெரியாவிட்டாலும் எல்லாம் தெரிந்தவனாய் பாவனை செய்யும் அளவிற்கு முன்னேற்றம் காணமுடிந்தது. இங்கு எல்லோரும் அப்படித்தான். எல்லோருக்கும் எல்லா பாசைகளும் தெரியும். ஆனால் யாருக்கும் எல்லாம் முழுதாய்



தெரியாது. நட்பாய் பழகுவதற்கு பாசை ஒன்றும் முக்கியமல்ல. தெரிந்ததை கொண்டு பேசிக் கொண்டால், தெரியாதவன் எல்லாம் தெரிந்தவன்தான். அலுவலக வேலை என்றால் ஆங்கிலத்தோடு கோப்புக்குள் மாத்திரம் மூழ்கி இருந்து விட்டுப் போகலாம். வியாபாரத்திற்கு அது இயலாது. அதுவும் துணி வியாபாரத்திற்கு, குறைந்த பட்சம் பொய், களையாவது அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. அப்படி பொய்யில் பல மொழிகளின் தொடர்புகள் ஆரம்பமானாலும் உண்மையில் பல நல்ல மனங்களின் அறிமுகத்திற்கு அதுவே அடிக்கல் நாட்டி வைத்தும் இருக்கிறது.

வந்த புதிதில் எப்படியும் இந்த இரண்டு வருடம் முடிந்த கையோடு நாட்டிற்கு ஓடிப்போய்விடவேண்டும் என்று எண்ணிக் கொள்வேன். எண்ணத்தை பக்கத்தில் இருப்பவரிடம் சொன்னால் "தம்பி நானும் அப்படி சொல்லிக் கொண்டு வந்தவன் தான். இந்த இருபது வருஷமா போவதும் வருவதுமாகவேதான் இருக்கிறேன். என்ன செய்ய தம்பி. ஒவ்வொரு பயணமும் ஒவ்வொரு பிரச்சனை வந்திடும்... மறுபடியும் வர வேண்டி வந்திடும்!" என்று அலுத்துக் கொள்வார் ஒருவர்.

"எனக்கும் அப்படித்தான் தம்பி. டெயிலர் வேலை என்பதாலோ என்னவோ எங்க வாழ்க்கை இப்படி நூலை போலே இழுத்துக் கொண்டே போகுது!" என்பார் ஒரு டெயிலர். இங்கிருந்து தொழில் செய்யும் நம்மவர்களை விசாரித்தால், ஒவ்வொருவரும் பத்துவருஷம், பதினைந்து வருஷம், இருபது வருஷம், என வாழ்க்கைப் பூராவும் இங்கேயே கழிந்தவர்களாகத் தான் இருக்கிறார்கள். அதில் பலர் நாட்டில் நிறைய சொத்துக்கள் வைத்திருப்பவர்களாக இருப்பார்கள். சிலர் சாதாரணமானவர்களைப் போன்று இருப்பார்கள். பணம் இல்லை என்றும் சொல்ல முடியாத- உண்டென்றும் சொல்ல முடியாத வகை. சிலர் இன்னும் 'இல்லை' என்ற பல்லவி பாடும் மன்னவர்களாகவும் இருப்பார்கள்.

எது எப்படி இருந்தாலும் நம் நாட்டிலிருந்து தொழில் செய்வதற்கென்று வெளிநாடு செல்வோர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எதிர்பார்த்து வரும் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து கொண்டு நாடு திரும்ப வேண்டும் என்பது எனது ஆசை. நன்கு சம்பாதித்து விட்டது போதாதென்று பத்து வருஷத்திற்கு மேல் எல்லாம் பலர் எப்படித்தான் தொடர்ந்தும் இருக்கிறார்களோ தெரியாது. இரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை இரண்டு மாத விடுமுறையில் வந்து. இரண்டு மாதம் மட்டும் பொண்டாட்டி பிள்ளைகளோடு வாழ்ந்துவிட்டுப் போவது ஒரு வாழ்வா? அன்பு பாசம் என நம்மை சேர்ந்தவர்களுக்கு நாம் ஓர் ஒப்பந்தத்தில் இரண்டு மாதம் வழங்குவது உறவுக்கு ஒரு நிர்ப்பந்திக்கப்பட்ட பண்டமா? இல்லைதானே!

மனிதன் உயிர் வாழ பணம் கொஞ்சம் தேவைதானே? என்றாலும் பணத்தைக் கொண்டே வாழ்க்கை இல்லைதானே! ஒரு கல்யாணமோ, ஒரு சுப வைபோகமோ எதுவானாலும் கட்டியவன் ஒரு தேசத்தில் இருப்பதால் தனியே போய் அங்கு வரும் பலரோடு முகங்கொடுக்க நேரும் ஒரு குடும்பத்தலைவிக்கு சில சந்தர்ப்பங்களில் சில பதில் சொல்ல முடியா கேள்விகள் கேட்கப்படும் போது, அவள் கணவன் அனுப்பி வைக்கும் பணம் அங்கே பதில் சொல்லப் போவதில்லை. மாறாக அவளின் மன நிலை விரக்தியை அனுபவிக்கும் என்பதை பல கணவர்கள் மறந்து போயிருப்பது கண்கூடு. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அனைவருமே வேறு நாடு சென்றும் உழைத்து உயர்ந்ததில்லை. சொந்த மண்ணிலே தன்னம்பிக்கை வைத்து உயர்ந்தவர்கள் ஏராளம். எனவே யார் எப்படி இருந்தாலும் என் விஷயத்தில் நான் நானாக இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொள்வேன்.

இன்று பகல் என்னைத்தேடி என் அறைக்கு என்னோடு கடையில் தொழில் பார்க்கும் டெயிலர் இராஜேந்திரன் வந்தார். ஆள் ஐம்பதைத் தாண்டிய கிழவன். மனதில் என்னமோ மன்மதன் என்ற நினைப்பில் மைபூசிய தலையோடு, கண்ணாடி அணிந்து ஆடைகளில் வாலிபத்தை வலுக்கட்டாயமாய் வரவழைத்துக் கொண்டு தோற்றத்தில் கொஞ்சம் வயதை குறைவாக காட்ட முயற்சித்திருந்தார். என்றாலும் தளர்ந்து போயிருந்த தேகச் சுருக்கம் வயதை காட்டிக் கொடுத்தது. வந்தவரை உள்ளே வரவழைத்து அமரவைத்தேன்.

பேச ஆரம்பித்தால், எதிலும் தன்பக்கம் தான் நியாயம் இருக்கும் என்ற போர்வையில் மற்றவரின் பேச்சையும் கேளாமலேயே பேச்சை தொடரும் அவர், பேசுவதற்கு முன்பே விசயத்தை கேட்டேன். "தம்பி நீங்க நாட்டுக்குப் போறதா சொன்னாங்க. அதான் எப்போ போறீங்க என்று சொன்னா நான் ஒரு 'டிராப்ட்' எடுத்து தருவன். வீட்டிலே கொடுத்திடுவீங்கதானே! ரெண்டு மாசமா வீட்டு வாடகை பணம் அனுப்பவில்லை!" என்றார் நான் அதிர்ந்து நின்றேன்.

'அப்போ இத்தனை வருஷமா இங்கே தொழில் செய்யிறீங்க. அதுவும் மாதாமாதம் நல்ல சம்பளமும் வாங்குகிறீங்க. இன்னும் ஒரு வீட்டை கூட சொந்தமா வாங்காமல் இந்த பதினெட்டு வருஷமா சம்பாதித்த பணத்தை எல்லாம் என்ன செய்தீங்க?' என்று கேட்க வேண்டும் போல் இருந்தது. கேட்டால் அதற்கும் ஒரு நீண்ட கதை இருக்கும். ஏன் கல்லை தூக்கி காலில் போட்டுக் கொள்வானேன் என்றபடி, "அடுத்தமாதம் தான் போகிறேன்!" என்று கூறி பேச்சை குறைத்து அவரை அனுப்பிவிட்டேன்.

அவர் சென்றதும் சற்று யோசித்துப் பார்க்கிறேன். பணம் சம்பாதிப்பது பெரிய விஷயம் அல்ல. அதை புத்திசாலித்தனமாக முன்னேற்றத்திற்காக பயன் படுத்தத் தெரியாத யாரும் இன்றும் கோடி கோடியாய் கொட்டிக் கொடுக்கும் தொழில் செய்தாலும் அவன் என்றும் பிச்சைக்காரன்தான் என்ற உண்மை புரிய வருகிறது. அதிலும் இந்த மாதிரியானவர்கள் சர்வதேச யாசகர்கள் என்பது மிக அழுத்தமாகவே என் நெஞ்சில் பதிகிறது. ■

## கட்டாரிலிருந்து மெய்யன்-நட்ராஜ்

# காதல் வெள்ளம்



படுக்கையில் சுதந்திரமாகப் படுத்திருந்தாள் அனிதா. ஆழ்ந்து உறங்குகிறவள் போலத் தெரிந்தாள். தலையும் ஆடைகளும் கலைந்திருந்தன.

கணவனைத் தவிர வேறு யாரும் வந்து விடமுடியாத அறை என்பதால் அவள் அலட்சியமாகக் கலைந்திருந்தாள். சுதந்திரமாக எறிந்துவிடப்பட்டிருந்த சேலை போல, அமைதி நிரம்பிய இரவுநேர ஆறுபோல அவளும் அதிக வளைவுகளுடனும் உள் மறைந்த இரகசியங்களுடனும் தெரிந்தாள்.

உள்ளே நுழைந்த ரமணன் ஓசையெழுப்பாமல் அவளைப் பார்த்தபடி நின்றான்.

## இலக்கிய நயம்

ஆடைகளை மேவித் தெரிந்த அவள் அழகுகள் அவனைப் பரவசப்படுத்தின. உறங்குகின்ற அவளது சீரான மூச்சு, ரமணனையும் அந்த லயத்தில் பொங்கித் துடிக்க வைத்தது.

மூடியிருக்கும் கண்களைப் பார்த்த போதுதான் இமைகளில் இத்தனை அழகு முடியா என்று வியக்க வைத்தது. படகுபோல வளைந்திருந்தன அந்த முடிகள். இமைகளுக்குள் இரண்டு நிலவுகள் பதுங்கிக் கிடப்பதை அவன் அறிவான்.

அவனை உன்மத்தனாக்கிவிடும் ஒளிச் சமுத்திரங்கள் அவை.

மெல்ல நெருங்கினான்.

அங்காங்கே ஆடைத் துணுக்குகளை இழந்துவிட்ட அங்கப் பகுதிகள் அவனுள்ளே அணுயுத்தம் ஒன்றை அரங்கேற்றின.

அவளது கன்னம் வழியே வழுக்கிச் சென்ற அவனது பார்வைப் பயணம், கழுத்தில் ஒடிந்து திரும்பியது. மேட்டுப் பகுதியில் ஏற மூச்சு முட்டியது.

மீண்டும் வேகமான சரிவில் இறங்கிய பார்வை, இடை வளைவுக்குள் சிக்கிக் கொண்டது.

அணு உலையாகத் தகித்தது அவன் உடல்.

குனிந்து அவள் உதடுகளில் மென்மையாக முத்தமிட்டான்.

மின்சாரம் பாய்ந்த உடலாக அவள் உடல் சிலிர்த்தது. கண்மடல் திறந்தாள்.

இவன் தன் இருப்பைத் தான் உணராமல் தொலைந்தான்.

'ஹம்' என்று முனங்கிய அவள் தன் கரங்களால் அவன் பின்கழுத்தை பின்னித் தன்னோடு இழுத்தாள்.

அவள் கழுத்துக்குள் வீழ்ந்தது இவன் முகம்.

"நான் வந்ததை நீ அறிந்தாயா?" என்று காதுக்குள் கேட்டான் அவன்.

"ம்" என்று அவன் தோளைக் கடித்தாள்.

"எப்படி?"

"நீதான் என் உயிருக்குள் இருக்கிறாயே. அங்கே இருக்கும் நீ, உனது இந்த உடல் வருவதைத் தெரிந்து கொள்வாய்...."

"அங்கே நான் எப்போது போனேன்? ஏனென்றால் என் அனி, இப்போ கொஞ்சம் முன்னரும் என் உயிர் கூடுவிட்டுக் கூடு பாயும் அவஸ்தையை அனுபவித்ததே....!"

"ஊஹும்... எப்போதும் நீ எனக்குள் தான் இருந்துகொண்டிருக்கிறாய்..... சும்மா குழம்பாதே"

"உன்னருகே நான் குழம்பாமல் உருப்படியாயிருக்க முடியுமா? அதுசரி அன்பே! சற்றுமுன் நான் உன் உயிருக்குள் இறங்கிய பயணம் எப்படி நிகழ்ந்தது? உதடுகள் வழியாக வந்தேனா, அல்லது கண்களினால்தான் கடத்தப்பட்டேனா?"

தன் மெல்லிய கரங்களால் அவனை மேலும் இறுக்கியவள், அவனோடு புரண்டு மேலே வந்தாள்.

"திருடா! நீ எப்படி உள்ளே போனாய் என்று நான் அறியேன். ஏனென்றால் நீ உள்ளே போய், என்னுள்ளே இருப்பது என்னுயிரா உன்னுயிரா என்று தெரியாத குழப்பத்தை ஏற்படுத்திப் பல வருடங்களாகிவிட்டன...."

ரமணன் ஆவேசம் வந்தவன் போல இயங்கினான்.

"உன்னுள்ளே இருக்கும் அந்த என்னுயிரோடு இந்த உடலைச் சேர்த்து விடுகிறேன்" என்று அவளை முரட்டுத் தனமாக இறுக்கினான்.

அவள், விலகும் தன் ஆடைகளை சரிசெய்யும் உணர்வை இழந்தாள்.

அவன் கீழிறங்கி அவள் பாதங்களை முத்தமிட்டான்.

"என்ன இது?" என்று பரபரத்தவளாக அவள் கால்களை இழுத்துக் கொண்டாள்.

"வேண்டுமானால், இந்தப் பஞ்சுத் துணுக்குகளால் என்னை உதை. இழுத்துக் கொள்ளாதே!" என்று அவள் பாதங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான்.

கலைந்த ஆடைகளை வீசிவிட்டு, அவன் முகத்தைப் பிடித்திழுத்து தன் மார்புகளுக்குள் புதைத்துக் கொண்டாள். "என் ராசா!" என்று அவன் உச்சந்தலை முழுவதும் உதடுகளைப் பதித்தாள்.

"என்னடா" என்றான் அவன் செல்லமாக.

"ஏதோ வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுவதைப் போல் இருக்கிறது" என்று அவள் மூச்சிரைத்தாள்.

"அன்பெனும் பெரு வெள்ளம் இழுக்குமாயின், அதற்குத் தப்பிப்பிழைக்க எவரால் முடியும் என்று தவிக்கிறானே தமிழ் மா கவிஞன். அதுதான் இந்தக் காதல் வெள்ளமும்...."

இருவருக்கும் மூச்சு முட்டியது. ஒருவருக்குள் ஒருவர் புதைந்துவிட முனைந்து வியர்த்தார்கள்.

களைத்து ஓய்ந்து வெகு நேரத்தின் பின் இருவரும் தத்தம் நிலைக்கு மீண்டார்கள்.

'அனி' என்று விளித்தான்.

அவள் முகம் சிவந்து, சிதறியிருந்த உடைகளை இழுத்து உடல் போர்த்தாள்.

நிமிர்ந்து படுத்திருந்த ரமணன், அவளை இழுத்துத் தன் தோள்களில் சாத்திக் கொண்டான்.

"ஆண்மை முறுக்கெல்லாம் காதல் வெள்ளத்தில் அடிபட்டுப் போய்விடுகிறது" என்று சிரித்தான்.

"நாணமும் கூட" என்று அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

**காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு**
**நல்லாண்மை என்னும் புணை.**

(குறள்: 1134)

தருவது முழடில்யன்

# ஸ்போர்ட்ஸ்

## 'டக்'கில் அவுட்டானவர்கள்



கிரிக்கெட் போட்டிகளில் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தால் 'டக்-அவுட்' என்பார்கள்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக தடவைகள் 'டக்-அவுட்' ஆகியவர் என்ற சாதனையைப் படைத்திருப்பவர் மேற்கிந்தியத்தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஷ்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி உலகசாதனை புரிந்திருக்கும் வோல்ஷ் தான் அதிக தடவைகள் 'டக்'கில் வீழ்த்தப்பட்டுச் சாதனை புரிந்திருக்கிறார். இதுவரை 40 தடவைகள் 'டக்-அவுட்' ஆகியிருந்த வோல்ஷ் அவுஸ்திரேலியாவுடனான மூன்றாவது போட்டியில், 'டக்-அவுட்' ஆகி தனது சாதனையை உயர்த்தியுள்ளார்.

வோல்ஷ் 41 தடவைகளும், மேற்கிந்திய தீவுகளின் கோர்ட்லி அம்புரோஸ் 26 தடவைகளும், நியூஸிலாந்தின் டன்னி மொரிசன் 24 தடவைகளும் இந்தியாவின் பகவத் சந்திர சேகர் 23 தடவைகளும், அவுஸ்திரேலியாவின் கிளென் மக்ராத் 22 தடவைகளும், அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் மற்றும் இந்தியாவின் பிஷன் சிங் பேடி இருவரும் 20 தடவைகளும், இங்கிலாந்தின் டொறிக் அண்டர்வூட், மைக் ஆதர்ட்டன் மற்றும் பாகிஸ்தானின் வாஸிம் பாரி ஆகிய மூவரும் 19 தடவைகளும், 'டக்-அவுட்' ஆகியுள்ளனர்.

## அவுஸ்திரேலியா பெற்ற வெற்றிகள்

தொடர்ச்சியாக 13 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்று உலகசாதனை படைத்திருக்கிறது அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி. அவுஸ்திரேலிய அணி பெற்ற வெற்றிகள் இதோ:

1. ஸிம்பாவேவை 10 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.
   (ஸிம்பாவே-ஹராரே, ஒக்டோபர் 14-17, 1999)
2. பாகிஸ்தானை 10 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.
   (அவுஸ்திரேலியா-பிரிஸ்கோர்ள், நவம்பர் 05-09.1999)
3. பாகிஸ்தானை 4 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.
   (அவுஸ்திரேலியா றோபார்ட், நவம்பர் 18-22, 1999)
4. பாகிஸ்தானை ஒரு இனிங்சாலும் 20 ஓட்டங்களாலும் தோற்கடித்தது.
   (அவுஸ்திரேலியா-போர்த், நவம்பர் 26-28, 1999)
5. இந்தியாவை 285 ஓட்டங்களால் தோற்கடித்தது.
   (அவுஸ்திரேலியா-அடிலெய்ட், டிசம்பர் 10-14, 1999)
6. இந்தியாவை 180 ஓட்டங்களால் தோற்கடித்தது
   (அவுஸ்திரேலியா-மெல்போன், டிசம்பர் 26-30, 1999)
7. இந்தியாவை ஒரு இனிங்ஸ்மற்றும் 141 ஓட்டங்களால் தோற்கடித்தது.
   (அவுஸ்திரேலியா-சிட்னி, ஜனவரி 02-04.2000)
8. நியூஸிலாந்தை 62 ஓட்டங்களால் தோற்கடித்தது.
   (நியூஸிலாந்து-ஒக்லாண்ட், மார்ச் 11-15, 2000)
9. நியூஸிலாந்தை 6 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.
   (நியூஸிலாந்து-வெலிங்டன், மார்ச் 24-28, 2000)
10. நியூஸிலாந்தை 6 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.
    (நியூஸிலாந்து-ஹமில்டன், மார்ச் 31 ஏப்பிரல் 04, 2000)
11. மே.இ.தீவுகளை ஒரு இனிங்ஸ் மற்றும் 126 ஓட்டங்களால் தோற்கடித்தது.
    (அவுஸ்திரேலியா-பிரிஸ்பேர்ஸ், நவம்பர் 23-25, 2000)
12. மே.இ.தீவுகளை ஒரு இனிங்ஸ் மற்றும் 27 ஓட்டங்களால் தோற்கடித்தது.
    (அவுஸ்திரேலியா-போர்த், டிசம்பர் 01-03, 2000)
13. மே.இ.தீவுகளை 5 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.
    (அவுஸ்திரேலியா-அடிலெய்ட், டிசம்பர் 15-19, 2000)

# சிந்தியா பதில்கள்

**✠ 'சோ' அவர்களின் துக்ளக் படம் பார்த்தீர்களா?**

நா.நிருபன், கொழும்பு.

பார்த்தேன். அதை இப்போது எதற்கு கேட்கிறீர்கள் என்று புரிகிறது. பதவிப் பிரச்சனையைச் சமாளிப்பதற்கு துக்ளக் அறிவிக்கும் உதவிப் பிரதமர்கள் திட்டம் முப்பதாண்டுகளுக்குப் பிறகும் அர்த்தங்களைத் தந்து கொண்டிருப்பது சோவின் நையாண்டித் திறனுக்கு எடுத்துக்காட்டு. அவரது பிற்போக்குக் கருத்துக்கள் பலவற்றில் எனக்கு உடன்பாடில்லை என்பது வேறு கதை. ஆனால் இப்போதும் தனது பத்திரிகையில் எழுதிவரும் 'துக்ளக் தர்பார்' பகுதியைப் படிக்கிறபோது, அரசியல் Satireக்கு தமிழில் அவரை விட்டால் ஆளில்லை என்றே தோன்றுகிறது.

✠ **முத்தம்?**

எம்.எச்.எச்.ஹிஸாம், குருநாகல்.

உதடுகளில் லக்ஸபானா!

**✠ குளிக்கும் போது தண்ணீர் தொடாத இடம் ஒன்று உண்டு. அது எது தெரியுமா வாத்யாரே?**

கா.தர்மலிங்கம், கண்டி.

தெரியும் மாணவா! அதுதான் சினிமாப் பாட்டிலேயே போட்டு வெளுத்துக் கட்டுகிறார்களே, மனசாம், கேட்டுக்கொள்.

**✠ Pen இல்லாவிட்டாலும் கூட எழுதிவிடலாம், பெண் இல்லையென்றால் எழுத விஷயமே இருக்காது என்கிறேன், நீர் என்ன நினைக்கிறீர்?**

கே.முகுந்தன், றக்வானை.

எழுதியவர்களெல்லாம் பெரும்பாலும் ஆண்களாகவே இருந்ததன் விளைவு இது. யாரங்கே..... 'ஆண்கள் இல்லாத உலகத்தில் வாழ்வதில் என்ன சுவாரஸ்யம் இருக்கிறது' என்று எவரேனும் ஒரு வாசகி எழுதித் தெரிவிக்கக் கூடாதா....?

**✠ காலை எழுந்ததும்....?**

தே.சகாயசீலன், மன்னார்.

கண்களைக் கசக்கிவிட்டுக் கொள்வேன்!

**✠ யுத்தத்தை நிறுத்தாமல் பேசமுடியுமா?**

எஸ்.செல்வி, வத்தளை.

யுத்தத்தை நிறுத்திப் பேசியதையெல்லாம், 'டைம் பொம்' வைத்துவிட்டுப் பார்த்துக் கொண்டிருந்ததைப் போல படபடப்புடன்தானே இதுவரை பார்த்த அனுபவம் நமக்கு. எப்போது, என்ன சாட்டைச் சொல்லிக் கொண்டு அது மீண்டும் வெடிக்கப் போகிறதோ என்ற டென்ஷன்தான். பேசிய பிறகு வருகிற யுத்த நிறுத்தத்தில் தான் சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது எனக்கு.

**✠ காதல் என்பதும் ஓர் ஆயுதமாகுமா?**

கே.அக்கீத், செட்டிக்குளம்.

அப்படித்தான் போலிருக்கிறது! பார்க்க; 1251ம் குறள்.

**✠ உண்மை, நேர்மை, பொதுநலம் எல்லாமே தேய்ந்து செல்வதைப் பார்க்கிறோம். இப்படியே போனால் இந்த வாழ்க்கையை என்ன செய்வது?**

ஜெ.சாமிநாதன், மத்துகம.

ஆமாம் சாமிநாதன்! இந்த உலகம் போகிற போக்கைப் பார்த்தால், இந்த உலகத்தில் பிறக்காமல் இருப்பது ஒன்றுதான் பெரும் பாக்கியம் என்று தோன்றுகிறது. ஆனால் இலட்சத்தில் ஒருவராவது இந்த மாதிரியான அதிர்ஷ்டசாலியாக இருப்பாரா என்பது சந்தேகம் தான்!"




**✠ நக்மா ஏன் இப்போது திரைப்படங்களில் நடிப்பதில்லை?**

எச்.எம்.எம்.ஸிபான், புதியகாத்தான்குடி-03.

அப்படியே கௌதமி ஏன் நடிப்பதில்லை, பானுப்பிரியா ஏன் நடிப்பதில்லை, கனகா ஏன்... ஷோபனா ஏன்.... என்று கேட்டுக் கொண்டே போகலாமே. நக்மாவுக்காவது அவர் வீட்டிலிருந்து மற்றொரு புயல் வந்து கலக்கிக் கொண்டிருக்கிறது. அது ஒருபுறமிருக்க, நக்மாவுக்காக ஏறாவூரிலிருந்து பதற்றத்தோடு கேள்வி அனுப்பியிருக்கும் ஆர்.என்.ஆரிபாவுக்காகவும் இதோ ஆறுதல் செய்தி: அஜீத்தின் 'தீனா' படத்தில் ஒரு பாடலுக்கு ஆட்டம் போட்டிருக்கிறார். இதன்பிறகு திரும்பவும் இரண்டாவது ஆட்டம் வந்து கலக்கப்போகிறேன் என்று சூளுரைத்திருக்கிறார்.... கவலை ஒழிக!

**✠ நான் இறந்த பிறகு எனது சொத்துக்கள் அனைத்தும் தர்ம ஸ்தாபனங்களுக்குச் சென்றுவிட வேண்டும் என்று உயில் எழுதி வைத்திருக்கிறேன். ஏனெனில் எனக்குப் பிள்ளைகள் இல்லை, இது தெரிந்திருக்கும் நண்பர்களும் என்னை 'உலோபி' என்று பழித்துரைக்கிறார்களே, என்ன செய்ய?**

வி.சிவலிங்கம், திருகோணமலை.

இதற்குப் பதில் சொல்ல வேண்டுமானால், உங்களுக்கு நான் ஒரு பன்றியும் பசுவும் பேசிக் கொண்ட விபரங்களைத் தர வேண்டும்.

பன்றி, பசுவிடம் தன்னுடைய ஏக்கத்தைக் கூறிற்று. அதாவது, "நான் எவ்வளவுதான் செய்தாலும் மக்கள் பசுவைத்தான் புகழ்கிறார்கள். பசு பால் தருகிறதுதான் என்றாலும், அதைவிட அதிகமாக என் உடலையே சுவைமிக்க இறைச்சியாகவும் கொழுப்பாகவும் நான் தருகிறேன். இருந்தும் என்னை ஒருவரும் விரும்பமாட்டேன் என்கிறார்களே!" என்றது பன்றி.

பசு கூறியது:

"நீ சொல்வது உண்மையாக இருக்கலாம். ஏனெனில் நான் உயிருடன் இருக்கும் போதே இவைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்."

**✠ ஆண்கள் எப்போது விழிப்பாக இருக்க வேண்டும்?**

முஹமட் மைசான், ஒட்டமாவடி.

'பெண்கள் அன்போடு கிட்ட வரும்போதெல்லாம்.....' என்று தான் இதற்குப் பதில் சொல்லவேண்டும். அதேபோல் பெண்கள் விழிப்பாக இருக்க வேண்டியது, பழக வரும் ஆண் முகத்தில் அசட்டுத்தனம் தோன்ற ஆரம்பிக்கும் போது.

# மன்னாதி மன்னன்

38

இராஜகுமாரன்

ஆண் வாடை பிடிக்காத சண்பகவல்லி அத்தகைய விரதம் பூண்டமைக்கான காரணத்தை விக்கிரமவல்லி என்ற பெண் வேடம் பூண்டிருந்த விக்கிரமாதித்தனிடம் கூறினாள். அவர்கள் இருவருமிருந்து உரையாடிக் கொண்டிருந்த அறையின் வளையொன்றில் அணில் வேடத்திலிருந்த அமைச்சர் பட்டி அவர்களுக்கிடையில் இடம்பெற்ற உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

சண்பகவல்லியின் இரகசியத்தைத் தெரிந்து கொண்டதும், வளையிலிருந்து இறங்கி தனதுடலைப் பாதுகாத்துக் கொண்டிருந்த வேதாளத்திடம் ஓடிச் சென்றார். அணிலின் உடலுக்குள்ளிருந்த தனது உயிரை மீட்டு தன்னுடைய உடலுக்குள் புகுத்திக் கொண்டார்.

அடுத்தநாட்காலையில் பட்டி, சல்லியராஜன் வேடம் பூண்டு மன்னன் விஜயரங்கன் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தார். அரசனிடம் தான் பெற்ற ஆயிரம் பொன் கடனைக் கொடுத்துவிட்டு, தனது மனைவி விக்கிரமவல்லியை அழைத்துக் கொண்டு போவதற்காக தான் வந்திருப்பதாக மன்னன் விஜயரங்கனிடம் கூறினார்.

சல்லியராஜனாக வேடம் பூண்டிருந்த பட்டியை அரண்மனையில் இருக்க வைத்து விட்டு, விக்கிரமவல்லியை அழைதது வருவதற்காக மகள் சண்பகவல்லியின் கோட்டைக்கு மன்னன் சென்றான்.

விக்கிரமவல்லியை அழைத்துப் போக அவளுடைய கணவன் வந்திருப்பதாக தனது மகள் சண்பகவல்லியிடம் கூறியதும், விக்கிமவல்லியைப் பிரிவதனால் தான் ஆறாத் துயரடைவதாகத் தந்தையிடம் சொல்லி சண்பகவல்லி அழுதாள்.

தன்னுடன் சில நாட்கள் மட்டும் தான் விக்கிரமவல்லி தங்கியிருந்த போதும், இருவரும் ஒருவர் மீது ஒருவர் அதிக அன்பு பாராட்டியமையினால் பிரிவுத்துயரைத் தாங்குவது மிகவும் கடினமாக இருக்கப் போவதாகக் கூறினாள்.

இருப்பினும் அவளுடைய கணவன் வந்து அழைக்கும் போது போகாமல் இருக்கமுடியாது என்பதனால், தனது தந்தையுடன் விக்கிரமவல்லியை அனுப்பி வைத்தாள்.

இருவரும் பிரிவுத்துயர் தாங்காமல் ஒருவரையொருவர் அரவணைத்தவண்ணம் பல நாழிகைகள் அழுதனர். சண்பகவல்லி, விக்கிரமவல்லிக்கு ஏராளமான பரிசுப் பொருட்களையும் கொடுத்தனுப்பினாள்.

சல்லியராஜன் என்ற பட்டியும் ஏராளமான பரிசுப் பொருட்களை தன்னுடன் எடுத்து வந்திருந்தார். அவற்றை விக்கிரமவல்லி மூலம் சண்பகவல்லிக்கு கொடுத்தனுப்பினார் விக்கிரமவல்லிஎன்ற விக்கிரமாதித்தனும் சல்லியராஜனென்ற பட்டியும் தாங்கள் ஏற்கனவே வந்து தங்கியிருந்த மடத்துக்குச் சென்று தங்கள் வேடங்களைக் களைந்து கொண்டனர்.

விக்கிரமாதித்தன் எப்படியாவது சண்பகவல்லியை தான் அடைந்தேயாக வேண்டும் என்றபிடிவாதத்துடன் இருந்தமையினால், பட்டியுடன் சேர்ந்து சண்பகவல்லியை, அடைவதற்கான திட்டம் வகுக்கலானார்கள்.

இந்த வேளையில்தான் தான் விக்கிரமவல்லி என்ற பெயருடன் இருந்த காலம் முழுவதும் பட்டி அணிலாக மாறி இருவரையும் நிழல் போல் சுற்றித் திரிந்த சம்பவத்தை விக்கிரமாதித்தன் தெரிந்து ஆச்சரியப்பட்டார். பட்டியையும் பாராட்டினார்.

அடுத்தநாள் காலையில் பட்டி கழைக் கூத்தாடிப் பெண்ணாக உருமாற்றிக் கொண்டார்.

மற்றொரு கழைக் கூத்தாடிக் கூட்டத்தினரைக் கண்டு, அரண்மனையில் அரச குடும்பத்தின் முன் கழைக் கூத்தாடுவதற்கு தன்னுடன் சேர்ந்து வருமாறு கேட்டுக் கொண்டார். ஏராளமான பொருள் ஈட்டித் தருவதாகவும் பட்டி வாக்களித்தான். அவர்களும் சம்மதித்தனர். கழைக்கூத்தாடியான பட்டி ஏனைய கழைக் கூத்தாடிகளையும் அழைத்துக் கொண்டு விஜயரங்கனின் அரண்மனைக்குச் சென்று அரச குடும்பத்தினரையும் அரசவை உறுப்பினர்களையும் அவர் தன் குடும்பத்தவர்களையும் கழைக் கூத்து மூலம் மகிழ்விக்க வந்திருப்பதாகவும், அனுமதி தருமாறும் கேட்டுக் கொண்டார். அரசரும் சம்மதித்தார்.

அரண்மனை மைதானத்தில் கொட்டகைகள் போடப்பட்டன. கழைக் கூத்தைப் பார்ப்பதற்கு சண்பகவல்லியும் ஆசைப்பட்டாள். அவள் ஆண்வாடை விரும்பாதவள் என்பதனால் மற்றவர்களுடைய கண்களிலும் படாமல் தனியாகவிருந்து கூத்துக்களைப் பார்ப்பதற்கு தனியான கொட்டகையொன்று அமைக்கப்பட்டது.

அடுத்தநாள் குறிப்பிட்ட நேரத்தில் கோலாகலமாக கழைக் கூத்துக்கள் ஆரம்பமாகின. மைதானத்தின் நடுவில் மிக உயரமான ஒரு கம்பம் நடப்பட்டது. பெண்வேடத்துடன் பட்டி மேலே ஏறினார். கம்பத்தின் உச்சியில் போய் நின்றவாறு, கைதட்டி ஆரவாரித்து எல்லோருடைய கவனத்தையும் தன்பால் ஈர்ந்துக் கொண்டார்.

"மகாராஜா அவர்களே! மகாராணி அவர்களே! இங்கு திரண்டு வந்திருக்கும் அரண்மனைப் பிரமுகர்களே! உங்கள் அனைவருக்கும் எங்கள் பணிவான வணக்கம் உரித்தாகட்டும். இப்பொழுது என் கணவன், வானுலகம் நோக்கிப் போகப் போகிறான்!" என்று கூறியபடி தன்னிரு கைகளையும் தட்டினாள்.

## பட்டி போட்ட திட்டம்

அப்பொழுது வானுக்கும் பூமிக்குமிடையில் ஒரு கயிறு தொங்கியது. தரையிலிருந்து ஒரு மனிதர் அந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வானில் மறைந்து கொண்டான். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் வியப்பிலாழ்ந்து கொண்டிருக்கும் போது, கழைக் கூத்தாடி வேடத்திலிருந்த பட்டி, "பெரியோர்களே எனது கணவர் வானுலகம் சென்று விட்டார். ஆனால் என் துரதிர்ஷ்டம் இப்பொழுது அங்கே ஒரு புறத்தில் சண்டை நடந்துக் கொண்டிருக்கிறது" என்று கூறியதும், வானிலிருந்து யானை, குதிரை முதலியவற்றின் தலைகள் துண்டிக்கப்பட்டு அவை கீழே தரையில் விழுந்தன. அவற்றைப் பார்த்த மக்கள் கரகோஷம் செய்து ஆரவாரித்தனர். கழைக் கூத்தாடிப் பெண் மீண்டும் பேசலானாள்.



"வானகத்தில் இப்பொழுது பெரிய யுத்தமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று தெரிகிறது. இந்த நேரத்தில் அங்கு சென்ற என் கணவனுக்கு என்ன நேரப் போகிறதோ தெரியாது" என்று சற்றுப் பயந்தவள் போல், கூறினாள். இதே வேளை அவளுடைய கணவன் என்று கருதப்பட்டவனுடைய தலை மட்டும் வானிலிருந்து கீழே விழுந்தது. அதனைத் தரையில் விழுவதற்கு முன்னர், கழைக்கூத்தாடிப் பெண்ணுருவிலிருந்த பட்டி, ஒப்பாரி வைத்து அழத் தொடங்கினார்.

அரசர் அவளை அழைத்து ஆறுதல் கூறி இத்தகைய அரிய வித்தைகளைக் காட்டியமைக்காகப் பாராட்டியதுடன், அவளுடைய "கணவன் மரணமடைந்தமைக்காக வருத்தப்பட வேண்டாம்!" என்றும் கூறி ஏராளமான பொன் தருவதாகவும் வாக்களித்தான். கழைக் கூத்தாடிப் பெண் அரசரையும் சபையோரையும் பார்த்து புன்னகை சிந்திவிட்டு, தன் கையிலிருந்த தலையை வான் நோக்கி வீசினாள்-தலை வானில் மறைந்த சிறிது நேரத்தில், வானிலிருந்து தொங்கிய கயிற்றைப் பிடித்துக் கொண்டு அவளுடைய கணவன் என்று சொல்லப்பட்டவன், தரையிலிறங்கி அனைவரையும் கும்பிட்டான்.

இந்தக் காட்சியை தனியானதோர் கூண்டிலிருந்த வண்ணம் பார்த்துக் கொண்டிருந்த சண்பகல்லி தனது தந்தையருகில் வந்து அவளுடைய பாராட்டுகளையும் தெரிவித்தாள்.

இப்போது பட்டி பெண் வேடத்திலிருந்த வண்ணமே அரசரைப் பார்த்து, "மகாராஜா நாங்கள் இப்பொழுது செய்து காட்டியது மிகமிகச் சொற்பமான விளையாட்டுக்களே. எமது குருநாதர் கானகத்தில் பிறிதொரு இடத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் இவற்றை விட மிகப் பிரமாதமான விளையாட்டுகளைச் செய்து காட்டக் கூடியவர். அவரையும் நீங்கள் அழைத்து வந்து அவருடைய வேடிக்கை விளையாட்டுக்களையும் பார்க்க வேண்டும் மென்று தாழ்மையாகக் கேட்டு கொள்கிறேன்!" என்று சொன்னார்.

"அப்படியானால் அவரையும் இங்கு தருவித்து விநோத விளையாட்டுக்களை காட்டுவதற்கு ஏற்பாடு செய்யலாம். இதற்கு நீயே போய் அவரைத் தக்க மரியாதையுடன் இங்கேயே அழைத்து வா!" என்று மன்னன் கூறினான்.

உடனே பட்டி 'மகாராஜா! எங்கள் குருநாதர் அரண்மனைக்கோ, நகர்ப்புறங்களுக்கோ வரமாட்டார். அவருக்குப் பெண் வாடையே பிடிக்காது!" என்று கூறினார்.

இதனைக் கேட்ட மன்னன், "அப்போது அவர் கானகத்திலேயே இருக்கட்டும். நாங்கள் அனைவரும் அங்கு சென்று அவருடைய சாகசகங்களைப் பார்ப்போம்!" என்று கூறினார்.

இதன்படி அடுத்த நாளே அரசரும் ஏனைய குழுவினரும் கானகம் நோக்கிப் புறப்பட்டனர். சண்பகவல்லியும் அரசருடன் செல்லப் போவதாக தந்தையிடம் கூறினாள் அவரும் சம்மதித்தார்.

இதன்படி சகலரும் கானகம் நோக்கிப் புறப்பட்டனர். அரசனும் குழுவினரும் போவதற்கு முன்னதாகவே பட்டி அங்கு சென்று விட்டார். அரண்மனையில் நடந்தவற்றையெல்லாம் அங்கிருந்த விக்கிரமாதித்தனிடம் கூறி, வயது போன ஒரு கழைக் கூத்தாடியாக மாறு வேடம் பூணவைத்தார்.

அரண்மனையில் போடப்பட்டது போல் அரச வம்சத்தினருக்கு தனியானதொரு அமைக்கப்பட்டது. அதனருகிலேயே, வித்தைகளைப் பார்ப்பதற்கேற்ற சாளரம் அமைக்கப்பட்ட கூடாரம் ஒன்றினை சண்பகவல்லிக்காக அமைத்துக் கொண்டனர்.

மேளதாள வாத்தியங்களுடன் சிறப்பானதொரு முறையில் குருவானவரை அழைத்து வந்தார்கள்.

குருவந்ததும் அரசனுக்குச் சென்று வணங்கி மரியாதை செய்தார். அரசன் அவரைப் பார்த்து, "பல அரிய வித்தைகளை செய்யக் கூடிய ஆற்றல் பெற்ற நீர் ஏன் கானகத்தில் தனியாகத் தங்கியிருக்கிறீர், பெண்வாடையே கூடாதென்று சபதம் பூண்டிருப்பதாகவும் அறிகிறேன். அவ்வாறு சபதம் பூணுவதற்கான காரணம் என்னவென்று நான் அறியலாமோ?" என்று வினவினார்.

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

கீழே தரப்பட்டுள்ள சத்தியக் கடதாசியை நிரப்பி, கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். நீங்கள் கையெழுத்திட்ட இந்தத் துண்டை வெட்டி, அல்லது, போட்டோ பிரதி செய்து 'காதிலபூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசு முகவரிக்கூடாக எனக்கு அனுப்பிவைத்தால், எனது விசுவாசிகளாகிய உங்கள் மீது நானும் விசுவாசம் வைக்க உதவிகரமாக இருக்கும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். (கையெழுத்திடாமல் வாசிப்பவர்கள், அல்லது வாசித்து விட்டு, கையெழுத்திடுபவர்கள் அல்லது மற்றவர் கையெழுத்திட்டதை தாம்வாசிக்கும் இரவல் வாசகர்கள் எவரையாவது நீங்கள் அறிந்தால் இரகசியமாக உடன் தகவல் தரவும்)

சத்தியக் கடதாசி:

........ம் திகதியில் பிறந்த........................................எனும் இடத்தைச்சேர்ந்த..............................எனும் அடையாள அட்டை இலக்கத்தையுடைய ..........................................எனும் பெயருடைய நான்...... ....... ...... ஆகிய இத் திகதியில் அக்கினி, ஆகாயம், நிலம், நீர், காற்று ஆகிய பஞ்ச பூதங்கள் சாட்சியாகத் தெரிவித்துக் கொள்ளுவது என்னவென்றால், நரன் காதிலபூ கந்தசாமி கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன் என்றும், அதைத்தவிர வேறொன்றையும் நம்பமாட்டேனென்றும், காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தை நான் தெளிவாக வாசித்துப் புரிந்துகொண்டுள்ளேனென்றும் எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென்ற அவரது கட்டளையை உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டே 'காதிலபூ கந்தசாமி' பகுதியை வாசிக்கிறேன். நான் வாசிப்பவற்றை நம்புவதால் ஏற்படக்கூடிய அத்தனை விளைவுகளுக்கும் நானே பொறுப்பாளி என்ற சுய உணர்வுடனேயே இதனைச் செய்கின்றேன் என்றும் தெளிவான சிந்தனையுடன் இத்தால் உறுதியளிக்கிறேன்.

திகதி:................

ஒப்பம்:......................

நம்பியவர்களுக்கு நன்றி! நம்பினதுதான் நம்பினீர்கள், இங்கே நான் வைத்திருக்கும் நோட்டீஸ் பலகையிலுள்ள எனது சத்திய வர்ககியத்தையும் தவறாது வாசித்து விடுங்கள்.

### நோட்டீஸ் பலகை

சத்திய வாசகம்: நான் சொல்வதெல்லாம் பொய், பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை!-காதிலபூ கந்தசாமி



நல்லது விடயத்துக்கு வருவோம்.

புதிய மில்லேனியம் எது என்ற பிரச்சனையில் முன்னாள், பின்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் இருவரும் கறுப்பு மாளிகையில் நடத்திய கத்திச் சண்டையில் முன்னாலும் பின்னாலும் காயமுற்ற நிலையில் பைத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டிருப்பதைப் பார்வைிடச் சென்ற ஐ.நா.சபை செயலாளர் கோப்பி அண்ணன், இருவருக்குமிடையில் சமாதானம் பேசி 2000ம் ஆண்டைப் புதிய மில்லேனியமாகவும் 2001ம் ஆண்டை புத்தம்புதிய மல்லேனியமாகவும் ஏற்றுக் கொள்ள வைத்தார். இந்தச் சமாதான உடன்படிக்கை கம்யூனிஸத்துக்குச் சமாதிகட்டுமென மெச்சிய ரஷ்ய ஜனாதிபதி, இத் தினத்தை இருபத்தியொரு அணுக்குண்டுகள் வெடித்துக் கொண்டாடப் போவதாகப் பூரிப்புடன் கூறினார்.

ஜெரூஸலப் பிரச்சனையில் மோதிக் கொண்ட இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிவுற்றன. இப் பேச்சுவார்த்தையில் இருபகுதியும் மறு பகுதியின் தலா 500 வீடுகளை இடிப்பதாகவும் 2000பேரை கொல்வதாகவும்,300 சதுர கிலோ மீட்டர் பரப்பில் கண்ணி வெடிகளைப்புதைப்பதாகவும் சமாதானமாக ஏற்றுக்கொண்டதுடன் இருவரும் மற்றவர்களது தேசியக் கொடிகளை பரஸ்பரம் எரித்து தமது நல்லெண்ணத்தை வெளிக்காட்டினர். அத்தோடு இருவருமாக ஜெரூஸலம் யாருக்கு என்ற பிரச்சனையில் தீர்வில்லாம சண்டையிட்டுக் கொண்டு இருப்பதைவிட இருவருமாக கூட்டுச்சேர்ந்தே ஜெரூஸலத்தை ஒரேயடியாக அழித்துவிடுவதுதான் நல்ல தீர்வென நடுவரான அமெரிக்காவும் ஏற்பாட்டாளரான நோர்வேயும், கூப்பாட்டாளர்களான அரபு நாடுகளும் தீர ஆலோசித்து விடுத்த ஆலோசனையை இருதரப்பும் வரவேற்றுள்ளது.

இலங்கைக்கு உபத்திரவமளிக்கும் நாடுகள் கூட்டத்துக்குத் தலைமை வகித்த தலை நரைத்த அரசியல் பேராசிரியர் சீரிஸ் உபத்திரவம் வழங்கப்படுமா, மாட்டாதா என்பதையிட்டு பத்திரிகையாளர்களுக்குப் பதிலளித்துப் பேசியதில் உபத்திரவத்திற்கு உபத்திரவம் என்ற பெயரை மாற்றுவதற்கு உடன்பட்ட ஒன்றே அங்கு தமக்குக் கிடைத்த ஒரேயொரு உபத்திரமென ஒத்துக்கொள்ள மறுத்தார்.

கந்தசாமி ஒற்றுக்கேட்ட உரையாடல் ஒன்று:

கூட்டணி கொரில்லாப்படைத் தலைவர் அனுங்கு சங்கரி: அண்ணே, ஆயுதங்கள் பிடிபட்டுப் போச்சு. ஆசிரியைகள் அப்புரூவர்களாக மாறிட்டாங்க.

தலைவர் சம்பந்தமிடுக்கர்: இது டக்டிக்ளஸ்ஸின் வேலையாய் இருக்குமோ?

அ.ச: சந்தேகமாத்தான் இருக்கு.

ச.மி: சந்தேகமா? சந்தேகங்கள தீர்த்துக் கட்டிடணும். தந்தை ஏழைநாயகம் சொல்லித் தந்த சட்டத்த மறக்காதீங்க.

அ.ச: தீத்துக்கட்ட திட்டமில்லையே?

ச.மி: திட்டமில்லாமலே இருக்கிறதுதான் எங்க திட்டம். பேசாம ஒரு ஜெமிலி உண்ணாவிரதம் ஒழுங்கு பண்ணி ஒரேஞ் ஜூஸ் கொடுக்க வரச்சொல்லிக் கூப்பிடுங்க.

அ.ச: ஐடியாவெண்டால் ஐடியாதான். ஆனால் ஆயுதம்...???

ச.மி: பேனாக் கட்டொண்டை உள்ளே அனுப்பிறது பெரிய கஷ்டமா? என்னைக் கேக்கிறீங்க?

அ.ச: ஆமா, ஆமா!!! பேனாவே போதும். எழுதிச் செல்லும் விதியின் கைகள் எழுதி எழுதி மேற்செல்லும்!

ச.மி: செல்லட்டும் செல்லட்டும், ஆனா என்னை மட்டும் சம்பந்தப் படுத்திடாதே.

அ.ச: (உணர்ச்சிகரமாக) உங்களுக்குத் துரோகம் செய்வனா? உங்க பெயரைக் காப்பாத்திடுவேன் தலைவா.

ச.மி: காணாமலாக்காட்டால் சரி, வயர்லெஸ்லை மைக்கா நினைச்சு உணர்ச்சிவசப் படாம வைச்சிட்டுப் படு!

# தலைப்பும் மலைப்பும்

குடிசன மதிப்புக்கு முன்னோடியாக வீடுகளுக்கு இலக்கங்கள் போடஏற்பாடு.
-செய்தி

வட-கிழக்கில் இதுவரை நவீனரக ஆயுதங்களால் இடிக்கப்படாமல் எஞ்சியுள்ள வீடுகள் எத்தனை என்பதைக் கணக்கெடுப்பதற்காகத்தான் இத்திட்டம்!

ஆர்ஜென்டினாவின் முன்னாள் பிரபல உதைபந்தாட்ட வீரர் மரடோனா தன் போதைப்பழக்கம் பற்றி சுயசரிதை எழுதி வெளியிட்டுள்ளார்.
–செய்தி

'ஊசி' பற்றி எழுதியிருப்பதால் 'நூல்' நன்றாக விற்பனையாகும்.

பேச்சுவார்த்தைக்கு முன் பொருளாதாரத்தடை நீக்கப் பட மாட்டாது!
-அமைச்சர் கதிர்காமர்

பேச்சுவார்த்தைக்கே இன்னும் தடை முழுமையாக நீக்கப்படவில்லையே?

இலட்சக்கணக்கில் பனங்கன்றுகள் நடுவதற்கு ஏற்பாடு.
–செய்தி

அவசர அவசரமாகச் செய்ய வேண்டிய வேலை இது. ஏனென்றால், மேற்கொண்டு வெட்டிச் சாய்க்க பனை மரங்கள் எதுவுமே இல்லை!

அரவிந்தசாமி-மனிஷா கொய்ராலாவுடன் இந்திப் படமொன்றில் நடித்த யானை, ஒரு காட்சியில் மது அருந்தியது.
-செய்தி

மத யானை பற்றிக் கேள்விப்பட்டதுண்டு. இது மது யானையாக்கும்!

"இலட்சியங்களை அடையும் வழிமுறையே பேச்சுவார்த்தை" என்கிறார் தமிழ்ச்செல்வன்.
–செய்தி

பேச்சுவார்த்தையின் பின்னர் இலட்சியங்கள் வழிமாறிப் போய்விடலாம் என்று கருதுகிறார் போலும்!

இலங்கை மீனவர்கள் இந்தியாவில் விடுதலை!
-செய்தி

இந்திய மீனவர்களுக்காக இலங்கைச் சிறைகளில் இடம் காலியாக விருக்குமோ?

யாவும் கலப்படமற்ற கற்பனை



பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன

105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lpik.com/arul
436331

# புது வருடம் புகுவோம்

புதுவருடம் புகக் காத்திருக்கும் நாம் அனைவரும் சரியாக ஒருவருடம் பின்னோக்கிச் சென்று பார்ப்போம்.

இரண்டாயிரமாம் ஆண்டு பிறந்தபோது அதற்கான கொண்டாட்டங்கள் உலகின் பல பாகங்களிலுமிருந்த மக்களால் வரவேற்கப்பட்ட முறைகளே அலாதியானவை. விழாவைக் கொண்டாடிய எவரும் மூவாயிரமாமாண்டு பிறக்கும் போது நிச்சயமாக உயிருடன் இருக்க மாட்டார்களல்லவா? எனவேதான் அந்த ஆண்டுப் பிறப்பை அமோகமாக வரவேற்றுக் கொண்டாடினார்கள்.

1999ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதியன்று நள்ளிரவில் பிறந்த புத்தாயிரமாமாண்டை வரவேற்க பலதரப்பட்ட மக்களும் போட்ட வேடங்களைத் தான் இந்தப்படத்தில் பார்க்கிறீர்கள். விந்தையாக இருக்கிறதல்லவா?




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண் முகம் மின்னிடும் பொன் நகை பேழை
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657



















← **தா**ய்-சேய் பாசத்தைப் பிரதிபலிக்கும் ஓர் அற்புதப் பதிவு தான் இது. இப்படிப்பட்ட அற்புதமான படங்களைப் பதிவு செய்யும் படப்பிடிப்பாளர்களை எப்படி வேண்டுமானாலும் பாராட்டலாம். (பட உதவி : வாணி)


↓ **மு**ன்னாள் யூகோஸ்லாவியா குடியரசில் இணைந்திருந்த பல நாடுகள் தனித்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இதில் போஸ்னியா குடியரசில் 1566ம் ஆண்டு கஸைமான் என்பவரால் வடிவமைக்கப்பட்ட மிக உறுதி வாய்ந்த அழகான பாலமொன்று அமைந்திருந்தது. யுத்த அரக்கன் தன்னுடைய கோரப்பற்களைக் காட்டி தாண்டவமாடினான். இதன் பயனாக பண்டைப் பெருமை வாய்ந்த இந்தப் பாலம் தகர்க்கப்பட்டது. அந்த அழகிய பாலத்தின் சிதைவுகளில் ஒரு பகுதியிலிருந்து ஒருவர் ஆற்றில் குதிப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

↓ **ஊ**மக்கு இப்போது குளிர் காலம். உடம்பில் தடிப்பமான போர்வையோ உடைகளோ இல்லாமல் இக்காலத்தில் தாக்கு பிடிக்க முடியாது.

படத்தில் ஒரு இளைஞன் பனி உறைந்து கிடக்கும் பிரதேசத்தின் உறை பனியில் சறுக்கக் கூடிய சைக்கிளில் மேலாடை இன்றி வேகமாகச் செல்கிறார்.


ரொபேட் ஸ்குமான் என்ற இந்த இளைஞன் வட துருவத்தையும் தென் துருவத்தையும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் தொட்ட பெருமைக்குரியவர். வட துருவத்தின் உறைந்த பனியில் சைக்கிளில் ஓடியவர் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு மட்டும் விமானத்தில் பயணித்து தென் துருவத்தை அடைந்தார். இத்தகைய சாதனையைப் புரிந்த ஆகக் குறைந்த வயதுக்காரர் இவரே என்ற பெருமையைப் பெற்றார்.

குதிப்பு



குளி(ர்)ப்பு






← **கி**ளென் டொனால்ட் மக்ராத் 09.02. 1970ம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸில் பிறந்தவர். 1993-94ம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிராக தனது முதல் டெஸ்டை விளையாட ஆரம்பித்த இவர் தனது 64வது டெஸ்டில் (மேற்கிந்தியத்தீவுகளுக் கெதிரான மூன்றாவது டெஸ்டில்) தனது 300 வது விக்கெட்டை வீழ்த்தியுள்ளார்.

இதன் மூலம் 300க்கும் மேற்பட்ட டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய பந்து வீச்சாளர்கள் பட்டியலில் பதினொராவது வீரராகத் திகழ்கிறார். மூன்றாவது அவுஸ்திரேலிய வீரராக உள்ளார். ஷேன் வோர்ன் (366), டெனிஸ் லில்லி(355) ஆகிய அவுஸ்திரேலியர்கள் தான் 300க்கும் மேற்பட்ட டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர்கள்.

300 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர்கள் பட்டியலில் மக்ராத்-வோர்ன் ஜோடி பல முறை அவுஸ்திரேலியாவுக்கு வெற்றிக் கனியைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து

வி - லக்ஸன் / 2001 ✶ 01 ✶ 06



விஜயசூரியன்-கஸ்தூரி அம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வன் விலக்ஸன் தனது முதலாவது பிறந்த நாளை 2001-01-06ம் திகதி வெபனாவில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, அம்மம்மா, வெபனா வில் வசிக்கும் ரஞ்சி அம்மம்மா, மாமா, மாமியார், மாத்தளையில் வசிக்கும் தாத்தா, மாமாமார்கள், சித்தப்பா-சித்தி, அக்கா நாவலப்பிட்டியில் வசிக்கும் அப் பம்மாமார், அப்பப்பா, சித்தப்பாமார், அத்தைமார், எட்டியாந்தோட்டையில் வசிக் கும் தேவா மாமா, ரமணி மாமி, சந்தியா குட்டி அனைவரும் கதிர்காமகந்தன் அருள் பெற்று பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்து கிறார்கள்.

தகவல் : நடராசா விஜயசூரியன்-(வெபனா)